324

[illegible]

[illegible]

DIGITIZED

R673
N07
11-1966

324
1907

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ ஞானசம்பந்தகுருப்யோநம:

# சித்தாந்தரத்நாகரம்.

## சமரசஞானதீபம்.

:0:

இஃது

"வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம்"

ஸ்ரீ லஸ்ரீ

சோமசுந்தர நாயகரவர்களால்

இயற்றப்பட்டு

ஷெயார் மாணவகர்

ஸ்ரீமாந்-பல்லவபுரம்

அப்பாவு செட்டியாரவர்களால்

பரிசோதித்து

தமது

சென்னை

வித்யாபாஸ்கர அச்சியந்திர சாலையிற் பதிப்பிக்கப்

பட்டது.

சமனைச் சொந்தக்காரனுக்கு என்விரோதமுண்டாகும்? தனது
னைப் பாதகாவலுக்கே பலமுண்டாயினமையா லன்னோர்
தனக்கவிரோதிகளேயாயினர். இப்படிக் கொள்ளுஞ் சமர
பாடுடைய சந்மார்க்கஞ் சைவமார்க்கமொன்றே யெனத்
—ணிந்து சமரச சிவாநுபூதியை யடைந்து உலகம் பிழைத்துய்க.

## வாழ்த்து.

"காலமொடுதேசவர்த்தமானமாதி கலந்துநின்றநிலைவாழி கருணைவாழி
மாலறவுஞ்சைவமுதன்மதங்களாகி மதாதீதமானவருண்மரபுவாழி [வாழி
சாலவிகுமெளியேனை வழக்கும்பேசத் தயவுவைத்து வளர்த்தவருட்டன்னை
யாலடியிற்பரமகுருவாழிவாழி யகண்டிதாகாரவருளடியர்வாழி."

ஸ்ரீ தாயுமானசுவாமிகள் பொன்னடிவாழ்க.

சமரசஞானதீபம்.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ வாகீச தேசிகாய நம:

# சித்தாந்தரத்நாகரம்.

## சைவசித்தாந்தபூஷணம்.

## ஸ்ரீசேக்கிழார் திருவாக்குண்மை.

"உலகெலாமுணர்ந்தோதற்கரியவ
னிலவுலாவியநீர்மலிவேணிய
னலகில்சோதியனம்பலத்தாடுவான்
மலர்சிலம்படிவாழ்த்திவணங்குவாம்."

என்னு மித்திருவாக்கின் மான்மியத்தை யுரைப்பது ஸ்ரீசிவபெருமானுடைய திருவருளிருந்தன்றியமையாது.(உலகெலாம்) என்று ஸ்ரீநடராஜப்பிரபுவே முதலெடுத்துக்கொடுக்க ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள் பாடியருளியதாகையால். திருத்தொண்டர்புராணம் என்னும் பெரியபுராணத்தின் முதற்செய்யுளாகிய விதன் பெருமையே! பெருமை!! இந்தப்பாடலில் கடவுள்வாக்கு ஓர்பாகமும், ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள்வாக்கு மற்றைப்பாகமுமாகக் கலந்திருக்கின்றனவென்பதன் கருத்தை யுய்த்துணருங்கால் எல்லாங் கடவுள் வாக்கென்பதே யுண்மையாகமுடியும். எங்ஙனமெனின், கடவுள்வாக்குடன் கடவுளல்லாதவராகிய ஸ்ரீசேக்கிழார் சுவாமிவாக்கு விரவியதேனின், கடவுளை நின்மலராகக் கொள்ளுந்தன்மையால் ஒன்றிலொன்று சேர்தல்பொருந்தாது. ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் வாக்குங் கடவுள் வாக்கைப்போல நின்மலமுடையதாகலின் ஒன்றிலொன்று சேருமெனின், அப்போது ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளுங் கடவுளாகக்கொள்ளப்படும் இரண்டு கடவுளருக்கிடஞ் செய்ததாய்முடியும். சேக்கிழார்சுவாமிகள் வாக்கே நின்மலமானபோது அதற்குக் கடவுள் முதலெடுத்துக்கொடுப்பதே னென்னுமாசங்கையும் வரும். கடவுள்வாக்கும், ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள் வாக்கும் ஒன்றிலொன்று

தாரதம்மியப்படவே கலந்திருக்கின்றனவெனின், சமானஹீனமாகிய வாக்குடன் தமது வாக்கைக் கடவுள் கலப்பாரென்பது அஸங்கதம். வேதபுருடன் ஸ்ரீசிவபெருமானை நோக்கித் தேவரீரை யிதரதெய்வங்களோடு ஸமானமாக வரித்துத்துஷ்ட ஸ்தோத்திரங்களாற் கோபம்வரச் செய்யமாட்டோம் என்று சொல்லியிருப்பதால், அவர் தம்மிற்றாழ்ந்தவர் குழுவிற்சேர்ந்து சம்பானத்தை யடையாதபடி அவர்வாக்குந் தாழ்ந்தவாக்கிற் கலந்ததில்லாதென்க. அவரை வரித்துப்பூசிக்கின்ற காலையில் வேறு தேவர்களையும் வரித்து அவர் திருமுன்னர்ப் பூசிக்கின் அவருக்குக் கோபமுண்டாமெனவும், பிறரைப்பூசிக்கின்ற காலையிலவருடனிருந்தி ஸ்ரீசிவபெருமானையும் பூசித்தல் ஸ்ரீசிவபெருமானுக்கு ஸந்தோஷத்தை யுண்டாக்காமல் கோபத்தையே யுண்டாக்கலால் அந்தப்பூசை சிவபூசையென்பதிற் றவிர்ந்து துஷ்டபூசையென்று சொல்லப்படுமெனவும் மேற்காட்டிய வேதபுருடன் கருத்தால் விளங்குகையால் பரஸ்பரம் விஜாதிகமாகிய சாமானியவாக்கொன்றுடன் பரமபதியாகிய வவரே தமதுவாக்கைக் கலப்பாரென்பது எங்ஙனம் பொருந்தும்? பிறர்செய்தலாற் கோபமுண்டாமன்றித் தாமேசெய்தாற் குற்றமில்லையெனின், அப்போது கடவுட்டன்மைக்கே பங்கம்வரும். அப்படித்தாமே செய்ய வேண்டிய வாவசிகந்தான்யாதென்பதற்குஞ் சமாதானஞ் சொல்ல வரும். மேல் சுருதியாதரவால் பிறர் கிஞ்சிஞ்ஞராகவு மவர்செய்யவே யுடன்படாராகிய வக்கடவுள் தாமே தங்கொள்கையை விரோதிப்பாரென்பது எப்படியமையும்? ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் வாக்குடன் கடவுள் வாக்குக்கலந்த விஷயஞ்சந்தேகமெனின், அதைக்காட்டினுங் கடவுளையே சந்தேகிப்பது மிகு விசேடமாம். இன்னும் இதை விசாரிப்பது அவசியமன்றென விடுவதே பெருநலமாம். சைவம் என்னும் ஸித்தாந்தத்திற் கட்டுண்ட பரிபாகிக்கே யிந்தவிசாரமாகையா லவனின்ன ஹேயாவலம்பனத்தினிகழ்தல் செய்யான். அவனுக்கு அச்சமயத்தாற் பெறப்படும்யாவுமுண்மையெனக் கொள்ளுந் துணிவுடைமையா லத்துணிவுபற்றி விசாரித்த லொன்றேயுரியகடமையாம். அதனை யினிப்புறச்சமயிகள் கூற்றைக்கலந்து விவகரியாது விடுப்பாம்.

புறச்சமயிகளுக்கு மொப்ப நியாயஞ் சொல்லவேண்டுவதுதானேயெனின், புறச்சமயிகளநேகருள் கடவுளேயில்லை யென்பவனுக்கு எவ்வளவு எடுத்துச்சொன்னாலு மென்னபலன்? ஆதல் கடவுளிருப்பதை அவனுக்கு விளங்கக்காட்டியன்றோ பின்னர் மற்றை விஷயங்களை யுணர்த்தல்வேண்டும்? அதற்குப் புண்ணியமிருந்தன்றோ அவனுக்கு ஸித்திக்கவேண்டும்? நமது பாஷையவனிடம் பிரயோஜனப்படாதென்க. அவன் நாமாகிற வரையில். அவன் நம்ம தன்மையடைவனேவெனின், நாயும் பேயுமே நாளைக்கு நம்மதன்மை யடைவது ஸித்தமாக, எவ்வளவோ படிகடந்து வந்தவனாகிய வவன் வரமாட்டானென்பதெங்ஙனம்? "புல்லாகிப்பூடாய்ப் புழுவாய்மரமாகிப், பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப் பேயாய்க்கணங்களாய், வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச், செல்லாஅநின்றவித்தாவரசங்கமத்து, ளெல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான், மெய்யேயுன்பொன்னடிகள்கண்டின்று வீடுற்றேன்" என்னும் அருளாளர் திருமொழிப்படிக்கண்டு கொள்க. அறியும், "புறச்சமய நெறி நின்றுமகச்சமயம்புக்கும், புகன்மிருதிவழியுழன்றும் புகலுமாச்சிரம, வறத்துறைகளவையடைந்து மருந்தவங்கள்புரிந்து, மருங்கலைகள்பலதெரிந்து மாரணநூல்படித்துஞ், சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேதச், சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற்சைவத், திறத்தடைவரிதிற் சரியைகிரியாயோகஞ், செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச்சேர்வர்" என்னும் பிரமாணத்தாலுங்காண்க. இந்த அருள் வாக்கியங்களால் இன்றுள்ள நாய்களும் பேய்களும் நாளைக்கு ஞானிகளாவரென்பதும், அப்படியே புறச்சமயிகளும் பாகம்வரப்பெற்றுக் கிருதகிருத்யராவரென்பதும் வெளிப்பட்டது. எப்படியானும் நாளைக்கு ஞானிகளாவது ஸித்தமாயிருந்தும், அந்தஞானத்தையிப்போது . ப்படியாகப்போகிற நாய்களுக்கும் பேய்களுக்கும் ஸித்திக்கச்செய்வது கஷ்டமும், அப்படிச்செய்ய முயல்வது அறியாமையுமாய் முடியுமோ, அங்ஙனமே புறச்சமயிகளிடமுங் கொள்ளத்தக்கதாம். புறச்சமயிகள் ஒருநலனுமிதனை லெய்திக்குணப்பட விடமுண்டாகாதபோது அவர்களைக்குறித்துச் சிவதத்வங்களை நம்மாசாரியர்கள் வெகுவாய்ப் பிரசங்கித்திருப்பதென்னையெனின், அதனுண்மையை விளக்குதும். சிவசாம்பிராஜ்யப் பெருஞ்செல்வத்தை படைதற்குரிய நம்மவர்கள் அப்புறச்சமயிகள் துர்ப்போதங்களாற் கலங்காவண்ணமும், அப்புறச்சமயிகள் பகிரங்கமாக வெளிப்படு நஞ்சமயத்திற் புகுந்து சைவத்தை யவலம்பித்திருக்கும் புண்ணியங் கூடாவிட்டாலும், அப்படிக் கூடுவதற்கான ஹேதுவாக வவர்நெஞ்சிலாவது உண்மைதைக்குமாகையால், அப்படித்தைக்குந்தோறும். உண்மை யிப்படி யிருக்கிறதல்லவா? நாம்வீண் விபாஜத்தாற் கலகமிட்டுத்திரி

தோமே! இப்போது இதைவிட்டுவிட்டு அதிற்பிரவேசிக்கவென்
ன்றால் மானம்வாட்டுகிறதே! என்றுபலவாறு சிந்திக்கவருகையால்,
அச்சிந்தனை வீணாகக்கூடாததன்மையால், அதனால் ஸித்திக்கற்
பாலதானபரிபாகத்தை அவர்க்கூட்டும்பொருட்டும் நம்பெருமக்கள்
செய்கை பெருமைபெற்று நிலைக்கும்! நிலைக்கும்!!

இங்ஙனமிற்க, மேலெடுத்துக்கொண்ட விஷயத்தை விசாரிப்
பாம். ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் அருளிச்செய்ததாகப்பெறப்படும்
அத்திருவாக்கினோரற்பபாகமே ஸ்ரீநடராஜமூர்த்தி முதலெடுத்துக்
கொடுத்ததேயன்றி வேறில்லை. ஏனையவெல்லாம் ஸ்ரீசேக்கிழார்
சுவாமிகள் பாடியருளியது. இங்ஙனமாக, அதிகபாகத்துக்கு ஆக்கி
யோராகிய ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் வாக்கை அற்பபாகத்துக்கு
ஆக்கியோராகிய கடவுள் வாக்கில் வியாப்பியங் கூறுவது பொருந்தா
தெனின், அதிகபாகத்தையருளிச் செய்தவராகிய ஸ்ரீசேக்கிழார்
சுவாமிகளென்னை யந்தவற்பபாகமுஞ் சொல்லத்தெரியாதவரா?
அவருக்கேனந்தப் பாகத்தை முதலாகக் கடவுளெடுத்துக்கொடுக்க
வேண்டும்? ஸ்ரீசேக்கிழார் சுவாமிக ளந்தப்பாகமுஞ் சொல்லுவார்.
அதற்கு மேலுஞ்சொல்லுவார். கடவுள்வாக்கில் விஜாதிகமாகிறபடி.
அவர்தாமென்னை, யாம் சொல்லமாட்டேமா? எம்மளவுக் கிசைந்த
படி. எம்மளவின்படி யாம்சொல்வது போலவே ஸ்ரீசேக்கிழார்சுவா
மிகள் தம்மளவின்படித் தாமுஞ்சொல்லு வரேயன்றிக் கடவுள்
தம்மளவின்படிக் கூறியபாகத்தி லெப்படி ஸாம்யம்பெறும்? கட
வுள் ஸ்ரீசேக்கிழாராகாமையாலும், ஸ்ரீசேக்கிழார் கடவுளாகாமை
யாலும் அவரவரளவின்படி வாக்குகள் போந்திடுமாயி னவைதார
தம்யமுடையனவாயே யிருக்குமென்பது பெறும். இதனால் ஸ்ரீ
சேக்கிழார் சுவாமிகள் தம்மளவின்படித்தாமே யதிகபாகங்களை யரு
ளினாரென்பதுஞ் சேராதொழியும். பெரியபுராணத்தில் (உலகெலாம்)
என்று ஸ்ரீநடராஜமூர்த்தியால் முதலெடுத்துக் கொடுக்கப்பெற்ற
வற்பபாக மெந்தவளவுடைத்தோ வந்தவளவேமற்றை யதிகபாக
ங்களும் ஸாம்யம்பெற்று விளங்குமுண்மையா லவையொரே தன்
மையின வென்றலமையும். இதனாலிரண்டு வாக்குகளு மொரேவாக்
கென்பதும்பெறும். இப்படிக்கொள்ளுங்கால் ஸ்ரீ சேக்கிழார் சுவா
மிகள் தமது போதத்தாலன்றித் திருவருட்போதத்தாலருளியபடி
யோ வெனின், அவரென்னை, சிவனடியார்தம்மிற்பலர் திருவருட்
போதமேலிட்டாற் பாடினாராகவின் அவர்வாக்குகளெல்லாமுஞ் சிவ



வாக்காகுமா? சிவனடியார் வாக்குக்களென்பதே போதரும். இதுவும்
ஸ்ரீ சேக்கிழார்சுவாமிகள் வாக்கெனலால் சிவனடியார் வாக்கென்ற
லேயமையு மெனின், இதற்கேயன்றி யேனையவாக்குகளுக்குக் கட
வுள் முதலெடுத்துக் கொடுத்தனரா? இப்போது விசாரமெல்லாம்
கடவுள் முதலெடுத்துக் கொடுத்தருளிய முக்கியம் பாராட்டியே
யாகையா லேனைய சிவனடியார்வாக்குகள் ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள்
வாக்குடன் ஸாம்யம் பெறுவென்க. ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள்
அருளிச்செய்த திருத்தொண்டத் தொகைக்குக் கடவுள் முதலெடு
த்துக் கொடுத்தமையால் அவர் திருவாக்குஞ் சிவவாக்காகுமேயெ
னின், அவரே சிவமாகையால் விசாரிப்பதவசியமன்றாம். கடவுள்
முதலெடுத்துக் கொடுத்தாலுங் கொடாவிட்டாலு மவையொரேத
ன்மை பெறுதலால். ஆலாலஸுந்தரரே ஸ்ரீ சுந்தரமூர்த்திகளாகத்
திருவவதாரஞ் செய்தபடியால். இப்படியே சிவவிபூதிகளாகிய ஸ்ரீகு
மாரக்கடவுள் ஞானசம்பந்தமூர்த்திகளாகவும், நந்தியெம்பெரு
மான் ஸ்ரீ மாணிக்கவாசக மூர்த்திகளாகவும், சிவகணத்தலைவர் வாகீ
சமூர்த்திகளாகவுந் திருவவதாரஞ் செய்தமையா லவர்வாக்குகளுஞ்
சிவவாக்கேயாம். நால்வராசாரியர் வாக்குகளோடு ஸ்ரீசேக்கிழார்
சுவாமிகள்வாக்குஞ் சேர்க்கப்பட்டுத் திருமுறைகளாக வெண்ணப்
பட்டதனுன் மற்றைத் திருமுறைகளுஞ் சிவவாக்காகுமேயெனின்,
அவைகளையுந் திருமுறைகளாக வான்றோர் தொகுத்தமுறைமையா
னே யவற்றினேற்றம் வெளிப்படலாலவை சிவவாக்காதலிழுக்கா
வென்க. அவ்வாக்குகளி னேற்றங்களும், அவை சிவவாக்காதற்குப்
போந்த நியாயங்களுமிடம் வந்துழிப்பின்னரெழுதுவாம்.

இனி, ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் திருவாக்கு எப்படிச் சிவவாக்
காகுமென்பதை சற்றே விளக்குவாம். ஸ்ரீநடராஜமூர்த்தி அவரு
க்கு (உலகெலாம்) என்று முதலெடுத்துக் கொடுத்தருளினாரென்பது
உண்மையன்றோ? அப்படி யெடுத்துக் கொடுக்குங்கால் அவரென்னை
திருமேனி சாத்திவெளிப்பட்டு நேரில்நின்று அருளிச்செய்தனரா?
அசரீரியாகநின்று அருளிச்செய்ததேயன்றி வேறில்லை. அப்படியே
ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளை யதிட்டித்து ஏனையபாகங்களையு மவரே
சொல்லியருளினாரென்பதே மேலோர்கருத்தாம். ஆகாயமென்னு
மோர்பூதத்தை யிடமாகக்கொண்டு முதலெடுத்துக்கொடுத்தபடியே
ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளை யிடமாகக்கொண்டு ஏனையபாகங்களை
யருளிச்செய்தபடியாம். இலிங்கவடிவத்தை யதிட்டித்து (சில்லு

கண்ணப்ப நில்லுகண்ணப்பவென், னன்புடைத்தோன்ற லில்லுகண்ணப்ப) என்று ஸ்ரீகண்ணப்பதேவருக் கருளிச்செய்தபடியுமிதற்குப் போந்த நிதரிசனமாம். ஸ்ரீசிவபெருமான் திருமேனி சாத்திவந்தருளிச் செய்தலும், அசரீரியாகநின்றருளிச்செய்தலும், சிவலிங்கப்பெருமானை யதிட்டித்து நின்றருளிச்செய்தலும், சிவனடியார்களை யதிட்டித்து நின்றருளிச் செய்தலும் அருண்மர பாகையா லனைவே, மீண்டு ஸித்தாந்தமாயிற்றென்க. இந்த வுண்மையால் ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளொன்றுஞ் சொல்லியதில்லையெனவும், யாவும் ஸ்ரீநடராஜமூர்த்தியே அருளிச்செய்தாரெனவும் வெளிப்பட்டது. இப்படிக்கன்றி வேறுவிதத்தாற் கோடலமைதிபெறாதென்க.

ஸ்ரீசிவபெருமான் சராசரங்கடோறுங் கலந்திருந்து அவ்வவற்றினிய லறிந்தியங்கச்செய்வது வேதஸம்மதமாகலின் யாவும், யாவருமச் சிவனையன்றி யொன்றுஞ் செய்யவுஞ் சொல்லவுங் கூடாதல்லவா? அப்போது யாவர்சொல்வதுங் கடவுள் சொல்வதேயாகிறபடியால் ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளுக்குமாத்திரம் விசேடமென்ன வெனின், யாவர்சொல்வதையுஞ் சொல்லுவிக்கின்றவர் கடவுளென்றபடியே யல்லது கடவுளே சொல்லுகின்றார், சொன்னார் என்பது பொருந்தாதென்க. கடவுள் சொல்லுவிக்கின்றார், சொல்லுவித்தாரென்பதேயமையும். ஸ்ரீசிவலிங்கப் பெருமானிடமிருந்து அவரொன்றைச் சொல்லுகையில் சிவலிங்கம் சொல்லிற்று, அவர்சொல்லுவித்தாரென்றலன்மையாம்போலவே ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளிடமுங் கொள்ளற்பாலதென்க. ஆயின், ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளை யதிட்டித்துப் பின்பாகங்களை யேராளமா யருளிச்செய்த கடவுள் முன்பாகத்தைக் கொஞ்சமேன் அசரீரியாகவிருந்து சொன்னாரெனின், பின்சொல்லப் போகிறபாகத்தின் பெருமை வெளிப்படும் பொருட்டென்க. உலகத்தில் அசரீரியாகநின்று சொன்னதையே கடவுள் வாக்கென்று கொண்டிருக்கிறரன்றி ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் வாக்கை யதிட்டித்துரைத்தபடியை யறிந்ததில்லையன்றே? உலகத்தில் அதன் பெருமைதோன்றவுரைக்கவந்தவராகையா லவ்வுலகரநுபவத்தின்படி யுசிதம்பெற அசரீரியாகநின்று உரைத்தபடியாம். உண்மையை யூகிக்கின், அசரீரியாயுரைத்ததென்று நாம் கொண்டிருப்பதைக்காட்டிலும், ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளை யதிட்டித்துரைத்ததே விசேடமாம், எங்ஙனமெனின், அசரீரியாக நின்றுரைத்தாரென்கையி லங்ஙனநின்றருளிய விடம் பூதாகாயமாகையாலதுவே திரு



மேனியாகிச் சடத்வம்பெறும். அப்படியே ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளிடம் விசாரிக்கையில் அவருள்ளமாகிய ஞானகாய விடமேதிருமேனியாகிச் சித்தாதனிலையுதல்பெறும். இரண்டினுஞ் சித்துக்கே விசேடங்கூறப்படுதலால் ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளை யதிட்டித்துரைத்தமையே ஸ்ரீசிவபெருமானிச்சை யிருந்தபடியாம். பூதாகாயத்தில் விரவியுரைத்தருளியது பின்னுரைக்கப்போகுமதன் பெருமையை விளக்கவேதுவாக விருந்தமையி னதுவும் ஸாமஞ்சஸமேபெறும். இரண்டுந் தம்மில் பேதமுறினு மதிட்டித்த பரன்வாக்கபேதமே பெற்றமையும். ஜடாகாயத்தை மேலுண்டாகப்போகிற மகிமைக்கு ஹேதுமாத்திரத்தா லதிட்டித்துச் சிதாகாயத்தையே யுரிமையாகக் கொண்டமையால் பூரணமாக வதிட்டித்து முற்றுமருளிச்செய்தபடிக் கண்டுணர்க. மேல்விசாரத்தால் பூதாகாயத்தை யிடமாகக்கொண்டு பரன் சொன்னதும் ஸ்தூலப்பார்வையில் அசரீரியும், ஸூக்ஷ்மப்பார்வையில் சரீரியுமாகநின்று அருளிச்செய்தா ரென்பதாகக் கொள்ளவரும். இன்னமஹிமாதிசயங்கள் போதரக்காணும் ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள திருவாக்காகிய பெரியபுராணத்தி னேற்றத்தை யாவரேயறியவல்லார்? போதுமான புண்ணியமில்லாதபோது. இந்த வுண்மையால் பெரியபுராணமடங்கலுஞ் சிவவாக்கென்பதே ஸித்தாந்தஞ் செய்யப்பட்டது. சேக்கிழார் வாக்கெனினுஞ் சிவபெருமான் றிருவாக்கெனினு மொக்குமேனுஞ் சேக்கிழாருஞ் சிவபெருமானு மொருபொருளல்ல வென்பதுந் தெளிந்திடுக. உலகம் மாயையிற் றோன்றுமெனினும், பரமனிற் றோன்றுமெனினு மொக்குமேனும் மாயையும் பரனுமொன்றாகாதபடியை விசாரித்துத் தெளியுமாபோல். இவ்விடயத்திலின்னு மநந்தஸமாதானங்களை யிதுகொண்டே புத்திமான்களா யுள்ளபேர் தெளிந்துரைக்கக் கூடுமாகையாலிதை யிவ்வளவில் விடுத்தாம்.

இதற்குத் திருத்தொண்டர் புராணம் எனவும், பெரியபுராணமெனவும் பெயர்வழங்கலால் இவை குணிகுணஸம்பந்தத்தா லமைவுபெறும். திருத்தொண்டர் குணியும், பெருந்தன்மை குணமுமாகும். இதனால், திருத்தொண்டரே பெரியவராவரென்பது வெளிப்பட்டது. (பெரிதுபெரிது புவனம்பெரிது)என்றுபக்கிரமித்து தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே) என்று உபஸங்காரத்தாற் பூர்த்திசெய்த மூதன்னைவாக்கியமுஞ் சான்றும். பதினெண்புராணங்களையும் வியாதரையதிட்டித்து ஸ்ரீசிவபெருமானுரைத்தருளியபடியே

யிப்பெரியபுராணத்தை ஸ்ரீசேக்கிழாரை யதிட்டித்து வெளிப்படுத்தினரென்பதுண்மை. வியாதர்வாக்கேயன்றி யேனையநூல்கள் பிரமாணமாவென்று சிலர் கூறுவரேயெனின், வியாதருக்குண்டான யோக்யதையெல்லா மவர் சிவனடியாரிற் சிறந்தவராயிருக்குந் தன்மையேயன்றிவேறில்லை. அப்படியே சிறந்த மேலோர்வாக்குகளெல்லாம் பிரமாணத்திலென்னதடை? வஸிஷ்டராற் செய்யப்பட்ட குருஜ்ஞானவாஸிஷ்டம், வான்மீகமுனிவராற் செய்யப்பட்ட ஸ்ரீமத்ராமாயணம், மநுமுதலினோராற் செய்யப்பட்ட அஷ்டாதசஸ்மிருதிகள் முதலியவிவை பிரமாணமாகாமற் போயினவா? இவைகளுள் பிரமாணதாரதம்பங்களை நோக்கின், ஸ்மிருதிகளிற் புராணங்களும், புராணங்களி லிதிகாசமாகிய இராமாயண பாரதாதிகளுந் தணிவுடையன வென்பது சாஸ்திரமறிந்த மேலோர்துணிவாம். இவைகளுக்குள்ளே யுயர்ந்தனவாகவேற்பட்ட ஸ்மிருதிகளே நோக்கினவையும் வேதத்துக்கு விரோதித்தவழிப் பிரமாணமாகாவென்பது தேற்றம். இதிகாசங்களுக்கு மேம்பட்டனவான புராணங்களுக்கு ஆக்கியோராகிய வியாதரே யப்புராணங்களிற் றணிந்தனவாகக்கூறு மிதிகாசங்களிற் பாரதத்தைச் செய்தவராயினர். இதனால் ஒன்றிலொன்று தாரதம்ய முடையநூல்களை வியாதரொருவரே செய்தாரென்று ஏற்படுகின்றது. அங்ஙனமாதலவர் முக்குணவியல்பினமைந்தபடியே கொள்ளப்படும். ஸத்வமேலிட்டிருப்பினு மேனையகுணங்களுந் தம்பாற் குடியிருக்கவிடங்கொடுத்தவராகிய வியாதர்முகத்தின் வெளிப்பட்டநூல்களே பிரமாணங்களாகிறபோது சுத்தஸத்வநிதிகளாய் விளங்கும் ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் திருவாக்குப் பிரமாணமாதலி லிழுக்கடையுமா? ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் வாக்கைப் புறச்சமயிகள் பிரமாணமாகக் கொள்ளாரேயெனின், வியாதர்வாக்கைமாத்திரங் கொள்ளுகின்றனரா? அவர்செய்துள்ள புராணம் பதினெட்டனுள் சிவபுராணங்களைத் தாமசங்களென்று அவர் வர்ஜித்தபடிக்காண்க. அவரங்கீகரிப்பதும், அங்கீகரியாததும் பிரமாணமல்ல. பிரமாணங்களையும், அவற்றினாக்கியோன் தன்மைகளையும் விசாரித்தறிவதேயுண்மையைக்காட்டும். இப்படி விசாரித்துத் தெளிந்தார்க்கு ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் திருவாக்கையன்றி வேறு பிரமாணங்கள் வேண்டாவென்க. இதுகாறுஞ் சுருதி யுக்திகளாலதன் பெருமையை யெடுத்துக்காட்டினமதனையாமினியநுபவவகையாலும் விளக்குதும்.



இப்போதுலகில் ஞானசாத்திரங்களாகக் கொள்ளப்பட்டிருக்கும் ஸித்தாந்தசாத்திரங்களும், அவற்றையருளிச் செய்த சிவஞானிகளு மெய்தியுள்ள பெருமை யெல்லாமிப்பெரிய புராணத்தால் வந்தவாழ்வன்றிவேறில்லை. பெரிய புராணத்தை அசேதனனொருவன் சிரவணஞ்செய்யப்புகினுமவனுள்ளநெக்குருக நைந்து அதிபரவசனாகிக் கிருதகிருத்யனாய் விடுவனென்பதை அது அநுஸந்தானமுடையாரிடமெல்லாங்காண்க. சைவரல்லாவிடினும் பஸ்மருத்ராக்ஷங்களை மாத்திரந்தரித்துள்ள புறச்சமயிகளுமன்றோ வப்பெரிய புராணத்திற் பிராணனைவைத்து நைந்துருகுகின்றனர்? அப்பெரிய புராணத்துக்கு முன்னர்ச் சிவனடியார் பக்தியையுஞ் சிவபக்தியையும் விளைவிக்கும் வேறுநூல்கள்யாவுள? எல்லாநூல்களு மதன்பின் பிறந்தவைகளேயாம். திருமுறைகள்நீங்கலாக. அத்திருமுறைகளின் மான்மியத்தையுணர்த்தப் போந்தவுண்மையினதே யிப்பெரிய புராணமாகையாலத்திருமுறைகளுமிப்பெரிய புராணமுண்டாகாதவழி அப்பிரகாசத்தையேயடையும். "சொற்கோவுந் தோணிபுரத்தோன்றலு மென் சுந்தரனுஞ், சிற்கோல வாதவூர்த் தேசிகனு-முற்கோலி, வந்திலரேனீறெங்கே மாமறைநூ லெங்கே, யெந்தைபிரானைந்தெழுத்தெங்கே" என்ற திருவாக்கின்படியே (தேவாரமெங்கே திருவாசகமெங்கே, நால்வராசாரியரெங்கே) அப்பெரிய புராணந் தோன்றாக்காலெனவுமன்றோ சொல்வது அழகுபெறும்? உலகில் சரியைகிரியை யோகஞானங்களென்னும் வழிபாடுகளால் சிவனையாராதிக்கும்படியான தன்மை அறுபத்துமூன்று நாயன்மாருண்மைகள்காட்டும். அவற்றைப் பெரியபுராணங்காட்டி வெளிப்படலாலவ்வழி யொழுகி யுலகமுய்யுநெறி பெற்றது. அதன்பின்னரேசைவம் பிரகாசத்தை யடைந்தது. நால்வித வழிபாடுகளு மவ்வொன்றனை ஸித்திப்பதன்றிப் பரமுத்தியுங் கைகூடப் பெறுதலாலதுவே முத்திநூலென்பது பெற்றாம்.

° அதுகீர்வாணத்தன்றித் தமிழில்வழங்கலாற்கீர்வாணத்தை நோக்க வேற்றம்பெறுமேதெனின், அதுதமிழாயிருப்பதுகொண்டே யேற்றம்பெறுமென்க. தமிழ்வழங்குநாடே புண்ணியபூமியிலுஞ் சிறந்த பாகமென்பதை யநேக வநுபவங்களாற் காண்க. நமது வேதசிவாகமங்களிற் பெறப்பட்டவிதிகளை முறையேவிடாதுஞற்றமுயலுமொருவனுக்கு வடநால்வழங்கிவரு முத்தரதேசமிடங்கொடாதென்பதை யாவருமறிந்த விஷயமே! அந்தப்பாகங்களி லெப்படிச் சைவவைதிகாசாரங்கள் தலையெடுக்கும்? பாதலத்திலுஞ் சலங்கிடைப்பது

கஷ்டமானால், நீர்விர்த்தியேராளமாய்க் கிடைக்கக்கூடுமான பாகங்களையே வைதிகநூல்கள் புகழ்ந்தனவன்றி வேறில்லை. இவ்வைதிகச் சிரேஷ்டமாகிய பாகங்களிற்றானே திரமிடமென்னுந் தமிழ்வழங்கலா லுத்தமோத்தம சிவபுண்ணியமுடையார்க்கே அதுகிரகிக்கப்படுமென்பது பெற்றாம். கீர்வாணமன்றோ மாத்ருபாஷையெனின், தமிழுக்கும் அதுமாத்ருபாஷையென்றல் பொருந்தாது. மாத்ருபாஷை யென்பது உற்பத்திநோக்கியாதலாற் கீர்வாணத்திற் றமிழுக்குற்பத்தி யில்லாமையே காரணமாதல் காண்க. (எ-ஒ-ழ-ற-ன-) என்னுமித்தமிழெழுத்துக்கள் கீர்வாணபாஷையிற் பிறந்தகாரணமுண்டாகாமையால் ஸ்வதப்பிரமாணமுந் தனிமையுமான பித்ருபாஷை தமிழென்று கொள்ளற்பாலதாம். தமிழும், கீர்வாணமுமாகிய விரண்டுபாஷைகளும் முறையே அகத்தியமுனிவருக்கும், பாணினிமுனிவருக்கும் ஸ்ரீசிவபெருமானால் அநுக்கிரகிக்கப்பட்டனவென்பதை யுண்மை நூல்களாற்காண்க. இதனாலொருபாஷையி லொருபாஷையுண்டான தில்லை யென்பது உணரப்படும். இரண்டுந்தனித்தனியமைந்தஸ்வதப்பிரமாணமான பாஷைகளென்பதே தீர்மானம். கீர்வாணத்துக்குத் தேவபாஷையும், தமிழுக்குரிஷிபாஷையுமென்றுபெயர்கள்வழங்கலால் கீர்வாணஞ்சிறந்ததெனின், பாணினியுமோரிருடியேயானபோது அதுவுமிருடிபாஷையேயாகாது? தேவபாஷையென்றலானுண்டாகியவுயர்வு யாது? தேவனாகிற சிவன்சொன்னாரென்பது கருத்தல்ல. தேவர்கள் தங்கள் சொர்க்காதிலோகங்களில் வழங்கும்பாஷையென்றுசொல்லுத லமைவுடைத்தாம். அப்படியாயின், தமிழை ஸ்ரீகைலாச பாஷையென்றுமேலோர்கூறுவதி லென்னதடை? ஸ்ரீகைலாசத்திற்றானே திருவாசகம், ஆதியுலாமுதலிய நூல்களரங்கேற்றல் செய்வித்தபடியால். ஸ்ரீகைலாசத்தில் தமிழ்ப்பாஷையே வழக்கமென்பதும் ஏற்பட்டது. ஸ்ரீகைலாசத்தில் தமிழையே சிவபெருமான் உரியபாஷையாகக் கொண்டாரென்பதை அவர் மதுரையின்கண் சங்கமுண்டாக்கி அதிற்றாமொருவித்வானாகவிருந்து தமிழை விர்த்திசெய்ததையே காட்டும். (தொண்டர் நாதனைத் தூதிடைவிடுத்ததுமிலை, யுண்டபாலனையழைத்ததுமெலும்புபெண்ணுருவாக், கண்டதும் மறைக்கதவினைத்திறந்ததுங்கன்னித, தண்டமிழ்ச்சொலோ மறுபுலச்சொற்களோ சாற்றீர்.) என்றமேத்யாதி. பாடல்களாலுந் தமிழின் பெருமை விளங்கும். இன்னும் விஷ்ணுமூர்த்திக்கு ஸ்ரீஜ்ஞானசம்பந்தமூர்த்திகள் சிவசாரூப்யமருளியதுந் தமிழ்ப்பதிகவாயிலாகவென்பதுதெளிக. தமிழினுமுயர்ந்தவாகக் கொள்ளுங்கீர்வாணபாஷையாற்போந்



த(ஹாலாஸ்யமாஹாத்மியத்தாலும்)தமிழின் பெருமையைக்காட்டும். எங்ஙனமெனின், சங்கத்தார் பிரஸ்தாபம் அந்த நூலாற்பெறப்படும். அச்சங்கத்தார் யாவரெனின், ஆகாரமுதல்ஹாகாரமிறுதியாக நாற்பத்தெட்டு எழுத்துக்களுமே(௪௮)வித்வான்களாகத்தோன்றிச் சங்கத்தாராயெழுந்தருளியிருந்து தமிழை வளர்த்தாரென்று அங்கே சொல்லப்பட்டிருக்கின்றது. (௪௮)எழுத்துக்கள் என்றபோது எழுத்துக்கள் வியஷ்டியும், அதனாலாகியபாஷை ஸமஷ்டியுமாகும். எந்தப்பாஷையி னெழுத்துக்கள் சங்கத்தாராகப் பிறந்திருக்கவேண்டுமென்று யோசிக்கில், தமிழ்பாஷைக்குள்ள வெழுத்துக்கள் முப்பத்தொன்றேயாகையால் அதிகத்தொகை யுடைமையைக் கூறுந்தன்மையாலது தமிழல்லவென்பது வெளிப்படும். அப்போது அதிகவெழுத்துக்களையுடைய பாஷை கீர்வாணமென்பதேயமையும். இதனால், கீர்வாணமாகிய பாஷையானது வியஷ்டியாகத் தனித்தனி யுருக்கொண்டு சங்கத்தாரென்னுந் தமிழ் வித்வான்களாய்ப் பிறந்து தமிழை வளர்த்தாரென்பது போதரும். மேலுண்மையால், கீர்வாணம் பூமியிற்பிறந்து தமிழ்ப்பாஷையைக்கற்று, அந்தப்பாஷையைக்கற்பதிலு மாற்றல் போதாது பரிபவமெய்திற் றென்பதற்கு அச்சங்கத்தில் தலைவராகிய நக்கீரதேவருக்கு அகத்தியரைக்கொண்டு ஸ்ரீசிவபெருமா னிலக்கணங் கற்பித்தருளியது முதலிய பலஹேதுக்களே போதும். இன்னும் ஸ்ரீசிவபெருமான் ஸ்ரீஜ்ஞானஸம்பந்த ஸ்வாமிகண் முதலிய சைவாசாரியர்க ளிடமாய்த்தமிழாலாகிய தேவாரப்பதிகங்களையே விரும்பியருளினபடியாலுந் திரவிடபாஷையினதிக்கத்தைத் தெளிந்திடுக. இன்ன பலநியாயங்களால் ஸ்ரீசேக்கிழாரிடமாகநின்று ஸ்ரீசிவபெருமான் திரமிடபாகத்தால் வெளியிட்ட திருத்தொண்டர்புராணம் ஸப்பிரமாணமாயினமை காண்க.

இவ்வுண்மைகளால் சைவசமயிகள் கனவிலும் மறவாதுகைக்கொண்டநுட்டிக்கற் பாலதான அருணூல் பெரியபுராண மொன்றே யென்றறியத்தக்கது. இதனானே யெல்லாநலனுஞ்சித்திக்கும். இப்பெரியபுராணத்தை யருளிச்செய்த ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் திவ்யசரித்திரத்தைச் சந்தானகுரவருளொருவரும், பெற்றான் சாம்பானுக்கும், முள்ளிச்செடிக்கும் முத்திகொடுத்தருளினவரும், தில்லைவாழந்தணருளொருவருமாகிய ஸ்ரீமத் உமாபதிசிவம் திருவாய்மலர்ந்தருளிய (திருத்தொண்டர் புராணவரலாறு என்னு நூலாற்கண்டுணர்ந்துய்க.

மேல் யாமிதனுதிக்கங்கூறல் திருவருளிருந்தன்றி யமையாதென்றபடி யிருட்கேவல சகலத்தழியு மெம்போல்வாரால் இனிது பிரசங்கித்து முடியாதாயினு மாசைமேற்கொண்டறைந்த தாகலினிதைக் கண்ணுறப் பெறுமான்றோர் மேலுமாண்டாண்டிருந்து திருவருளுணர்த்தும்படியா லினிதுண்மைப் பிரவசனத்தாலிவ் வுண்மையை விளக்குவார்களென வவர்பொன்னடிகளைச் சிரஸாவஹிக்கின்றுமென்க.

பொன்னவிருஞ்சடைமௌலிப் புண்ணியனைக்கெழுத்தண்மைபுவியிலோங்
மெய்ந்நெறியாஞ்சைவநனிவாழவருமெய்ஞ்ஞான வேந்தாயன்பர் [றி
தந்நிலைமையுலகறியத்தம்பிரான் முதலெடுத்துத் தறவேற்றுண்மை
துன்றுமவர்புராணசவின் றிமுனியாஞ் சேக்கிழார் துணைத்தாள் வாழி.

ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள்

பொன்னடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ ஜ்ஞானசம்பந்தகுருப்யோநம:

# சித்தாந்தரத்நாகரம்.

## ஆசார்யப்பிரபாவம்.

இஃது

"வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம்"

ஸ்ரீ ல ஸ்ரீ

சோமசுந்தர நாயக ரவர்களால்

இயற்றப்பட்டு

ஷெயார் மாணவகர்

ஸ்ரீமாந்-பல்லவபுரம்

அப்பாவு செட்டியா ரவர்களால்

பரிசோதித்து

தமது

சென்னை:

வித்யாபாஸ்கர அச்சியந்திர சாலையிற் பதித்து

வெளியிடப்பட்டது.

*Second Edition.*

31 January 1907.

Copy-right Registered.

இதன் விலை ருபா 2.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீகைலாஸோத்நத அவாதசாந்த ஸ்யாமளா பீடாரூட ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசுவராபின்னஸ்வரூப பரசிவபுத்ரரத்ந குமாரகுருமண்ய அவதார ஸ்ரீ பார்வதிஸ்தந்யபாநலப்த திவ்யஞாநநிசுருத சகலநிகமாகமசாரபூத திரமிடவேதப்ரவக்திரு ஸ்ரீமத்பரமசிவகருணாசமதிகத முக்தாமய சதுரந்தகாயமாந ஸத்ரசாமர ஸ்ரீசின்ன காகளாதிசமஸ்த பிருதாவள்ளியலங்கிருத ஞாநவிஞ்ஞாந சக்ரவர்த்தி சர்வஜனசங்க சத்யோநிர்வாண தீக்ஷாவ்யயாபவர்க்கவருஷ விசிராணநஜீமூத பரமதகளபகேசரி ஷண்மதப்ரதிஷ்டாபகாசாரிய ராஜாதிராஜபாண்டிய மஹாராஜகுரு க்ஷபணசாக்கியாதி மஹாந்தகாரநிவாரண ஞானபானு விசக்ஷணகருகாருக அவஜோச்சேதக பூர்வக ஸ்ரீமத்விருஷபத்துவஜஸ்தாபக ஸ்ரீசைவசமயகர்த்திரு சர்வஞ்ஞபீடாரூட ஸ்ரீஜகத்தகுரு ஸ்ரீஞானசம்பந்த மூர்த்தி ஸ்வாமிகள் ஆதீன பரம்பரை மதுரை மடாலயத்தி லெழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ மஹாசந்நிதானம் கருணைகூர்ந்து, "ஆசாரியப்பிரபாவம்" என்னும் சிவபுண்ணியம் நிறைந்த இந்நூல் உலகிற் பரவிப் பெரிதும் விளங்க அச்சியற்றும் பொருட்டுப் புரிந்த பேருதவியினை என்னுளும் மற்றெவராலும் எக்காலத்தும் மறக்கற்பாலதன்று. அத்தேசிகோத்தமருடைய திவ்ய திருவடிக் கமலம் நீடூழி வாழ்க. சுபம்!

ப - அ.

செ. 80. கோவிந்தப்ப நாயக்கன்வீதி, சென்னை.



இப்படியே ஏனையாசாரியர்களுக்கும் அஷ்டோத்தரவிம்சதி நாமாவளிகளுள, அவை எமக்குக் கிடையாமையால் அவற்றையும் ஈண்டு வெளிப்படுத்தநேர்கிலாத் துயரத்திலாழ்ந்துவருந்துகின்றோம். திருவருள் கூட்டிமுடிக்குமாறு சிந்திக்கும் பெருந்தவமுளுற்று மெய்ம்பக்கலிருந்தி அவை கிடைக்க, ஸாதுக்களவற்றைத்தந்து உபகரிக்கக் கேட்டுக்கொள்ளுகின்றோம். இவ்வமலதேசிகப்பெருமானை நித்திய நைமித்திய காமியபூசைகளால் வழிபடத்தக்க உபாஸ்யர் என்று சீகாழிமான்மியத்தில் விசதப்படுத்தியிருக்கின்றது. அது வருமாறு.

"செம்மைக்கருணைக் கடலனையான் திருமுன்னின்றோர் தமைநோக்கி
யெம்மைத்தலங்க டொறும்பதிகத் தேத்துஞானக் கவுணியனை
யம்மைப்பொலஞ்செய் விம்பத்தி லாவாகநஞ்செய்தெந்நாளு
மும்மைப்பயன்பெற் றுலகுய்ய முதற்பூசனைசெய் தியமியற்றி."

"திகழ்சித்திரைபங் குனிமாத் திறையா திரையும் வைகாசிப்
பகர்மூலத்து மாவணிப்பைப் பசிமாதஞ்சேர் சதயத்து
மகரமதியிற் கதிர்மதிய மருவுநாளு மிதுனமதி
திகழவருமோ ணையுமென்றேழ் தினத்துநைமித் தியமியற்றி."

"புரையில்கேள்வி யிடம்பர்கான் புகல்பங்குனியிற் சதயத்தி
னிறைசெய்மணிப்பூங் கொடியேற்றி நெடியோன்றேர்கா டேர்நடத்தித்
திறைசெய்கீர்த்த மாதிராடி யளத்தாடுதிசென் றருள்செய்ய
வரைவிலமர் ரண்டுதொறு மகிழ்ந்திவ்வாறு வணங்கினரால்."

என்னும் இந்த வாக்கியங்களால் நித்யோத்ஸவம், பக்ஷோத்ஸவம், மாஸோத்ஸவம், வருஷோத்ஸவமுதலிய யாவுஞ்செய்தும், செய்வித்தும் வழிபடத்தக்க தனிமுதல் எமதுபிள்ளையாரென்பது தெற்றென விளங்கியது. இந்த விபவங்களை நடத்தியுய்ந்தவர்கள் அன்னவூர்தி, புள்ளூர்தி, யானையூர்தி முதலாயினோரெனவும் அதிற்கேட்கப்படுகின்றது. இப்பெருந்தேவர்கள் வணங்கும் பெரியபெருமான் எமது காழிப்பெருமான் என்பதை யாம் பிரஸ்தாபிப்பது அதிசயமோ? இதனுண்மையை மெய்ப்படுத்தவேயன்றோ திருப்பெருந்துறை என்னுஞ் சைவக்ஷேத்திரத்தில் ஸ்ரீமணிவாசகப்பெருமான் ஆனிமார்கழிகளில் மஹோத்ஸவங்கள் கொண்டருளித் தரிசனந்தந்து மெய்யடியார்களுக்கு இகபரஸாம்பிராஜ்யங்களைப் பிரஸாதிக்கின்றனர்? இவருக்கே விருஷபோத்ஸவம், இரதோத்ஸவமுதலியன நடந்துவருமதி

சயம் பிரத்யக்ஷமாகையால், ஆசாரியர்நால்வர்களு மொரேயியல்பினராதலும், இந்நால்வரும் சிவனுரது அபராவதாரங்களாதலும், இவர்களே யாவரும் வழிபட்டேத்தும் பெருந்தகையாராதலும் நிலைபேறுயின. இவர்மாட்டன்பிழையாதார் "வெவ்வாய்நிரயத்திடைபுகுவார்" எனவும், அன்புபுரிவார் "கோதின்ஞானப்பிள்ளைதனைக் குழைந்துபணிந்தோர் மறலிநகர், போதலறியார்" எனவும்போந்த பிரமாணங்களுக்கிலக்காகிப் பயனெய்துவரென்க. விரிக்கிற்பெருகும். வேதம் - சிவாகமம் - புராணம் - இதிகாசம் - ஆன்றோர்வாக்கியங்கள் - காட்சியநுமானங்கள் ஆகிய மூவிதபிரமாணங்களாலும் இவ்வமலதேசிகரையும் ஏனையாசாரியவிதிகளையும்பிரகாசிப்பித்த ஆசாரியபிரபாவம் என்னும் இந்த ஸத்கிரந்தம் ஸாதுக்களுடைய க்ஷேமார்த்தம் உலகினிடைவாழ்க. சுபம்! சுபம்!! சுபம்!!!

வாழ்த்து.

ஏகமெனு மறைபேசுஞ் சிவன்வாழி யெந்தையவற் கிசைந்தாள் வாழி
மோகமறு மவர்களிக்க முன்னின்று விளையாடு முருகன் வாழி
மாகர்தொழும் வேற்கரத்து வள்ளலவ தாரமெனு வந்து சைவ
யோகநெறி பரப்புமவன் வாழியிணை யடிமேனை யோரும் வாழி.

பொன்னவிருஞ் சடைமௌலிப் புண்ணியனைந் தெழுத்துண்மை புவியி லோ
மெய்ந்நெறியாஞ் சைவநனி வாழவரு மெய்ஞ்ஞான வேந்தா யன்பர் [ங்கி
தங்கிலைமை யுலகறியத் தம்பிரான் முதலெடுத்துத் தரவேற் றுண்மை
துன்னுமவர் புராணநவின் றிடுமுனியாஞ் சேக்கிழார் துணைத்தாள் வாழி.

ஆசார்யப்பிரபாவம்.

முற்றுப்பெற்றது.

ஸ்ரீஞானஸம்பந்தஸத் குருபாதாரவிந்தார்ப்பணமஸ்து.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ ஞானசம்பந்தகுருப்யோநம:

# சித்தாந்தரத்நாகரம்.

## ஆபாசஞானநிரோதம்.

இஃது

"வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம்"

ஸ்ரீ ல ஸ்ரீ

சோமசுந்தர நாயக ரவர்களால்

இயற்றப்பட்டு

ஷையார் மாணவகர்

ஸ்ரீமாந்-பல்லவபுரம்

அப்பாவு செட்டியா ரவர்களால்

பரிசோதித்து

தமது

சென்னை:

வித்யாபாஸ்கர் அச்சியந்திர சாலையிற் பதித்து

வெளியிடப்பட்டது.

*Second Edition.*

31 **January** *1907.*

Copy-right Registered.

இதன் விலை. ரூபா 1.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறை மஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகஸ்வாமிகள் கருணைகூர்ந்து, சித்தாந்தரத்நாகரத் தடங்கிய அநேக சிவோத்கர்ஷ திவ்ய கிரந்தங்களுள், கடவுளொருவருண்டென்னும் வாய்மையைச் சுருதி யுக்தி அநுபவ வாயிலாக ஆஸ்திகமத சைவசித்தாந்தவழி யெளிதி னுணர்த்தும் சிவபுண்ணியம் நிறைந்த "ஆபாசஞான நிரோதம்" என்னும் இந்நூல் உலகிற்பரவிவிளங்க அச்சியற்றும் பொருட்டுப் புரிந்த பேருதவியினை என்னுளும் மற்றெவராலும் எக்காலத்தும் மறக்கற் பாலதன்று. அத்தேசிகோத்தமருடைய திவ்ய திருவடிக் கமலம் நீடூழி வாழ்க. சுபம்! சுபம்!! சுபம்!!!

ப - அ.

நெ. 80. கோவிந்தப்ப நாயக்கன் வீதி, சென்னை.



முழ்ந்தபெரு மெண்ணி யேறப்பார்ப்பதால், எங்ஙனே விரைச் சுத்தர்களென்று கூற விசையும்? அந்தணர் முதலியோரே தமது ஜாதி கிரந்தியை விடவேண்டுமென்பதுண்மையாக வேளாளர் முதலியோர் அங்ஙனஞ்செய்தலின்றி மேலு முயர்ந்திட வெண்ணுதலெங்ஙனே வமையும்? அந்தணராயினும், ஏனைய வருணத்தவராயினும் எதுகாறும் சாதிக்கிரந்தி யொழியாம லியங்கி வர்த்திப்பாரோ, அதுகாறு மன்னோர் ஸம்ஸ்காரத்தா லெய்தற்பாலதாகிய சமயநலம்பெற்றவ ராகார்! ஆகார்!! இதுமாத்திரமேயன்றிச் சிவனடியாரிலக்கணம் உபதேசகாண்ட முதலியவற்றிற் கூறியபடியே யமையாத பொழுது. அவரைச் சாதகரென்றன் மாத்திரமேயன்றிச் சாத்தியரென்றல் கூடாது. சாத்தியர்க்கு மாத்திரமே ஜாதிகிரந்தி முதலிய தோஷங்கள் விலகிச் சுத்தத்தன்மை யுண்டாவதால், அவருடைய தர்மத்தைச் சாதகராயுள்ளவே ராரோபணஞ்செய்துகொண்டு தாங்கடாங்களு முயர்ந்துவிடப் பார்ப்பது அவலமென்க. இதனால் சாதகராவார் தங்கடங்கள் சாதியாசாரங்களிற் பெயராது நல்லொழுக்க மெய்தித் தவங்கிடந்து, ஒருவரோடொருவரிகதிர்ந்து வாழவேண்டுமென்பதே நல்லோர் துணிவு. சாத்யதிசைவருமாயின் அவர்க்கு ஒருவரு முபதேசிக்கவேண்டுவதின்று. அவரவரன்பே யவரைத்தலைப்படுத்து மாகையால். இந்தவிசாரத்தால் ஜாதிநலங்களெல்லாம் ஸாதநவடிவங்களெனவும், அன்பினாதிநலங்களெல்லாம் ஸாத்யவடிவங்களெனவும் பெரியோர் துணிந்துகூறுவர். விதிவத்தாகவும், வித்வத்தாகவுஞ் சிவனை வழிபட்ட சிவகோசரியாரிடத்தும், திருக்கண்ணப்பதேவ ரிடத்துமே யிவ்வுண்மை விளங்கும்! விளங்கும்!! ஸ்ரீமத் - அப்பர்சுவாமிகளிடத்தில் அப்பூதி யடிகளார்க்கும், திருநீலகண்ட யாழ்ப்பாணரிடத்தில் திருநீலநக்க வடிகளுக்கு முண்டாயிருந்த வன்புகளுமே யன்றோ வீண்டு நிதரிசனமாதல் பெறும்? இவ்வுண்மைகளைச் சீர்தூக்கித் தாவரசங்கமங்களாகிய விரண்டிடத்துஞ் சிவபாவனை மேலிட்டு வழிபடுவதே சிவஸாம்ராஜ்ய விர்த்தியைப் பயக்கும்! பயக்கும்!! "தாவரசங்கமங்க ளென்றிரண்டுருவினின்று, மாபரன்பூசைகொண்டு மன்னுயிர்க்கருளைவைப்பன்" என்னும் பிரமா

ணத்தானு மதுவிளங்கும். சங்கமங்களிற்க, தாவரமாகிய சிவலிங் கோபாஸனை விக்கிரகாராதனமாய் முடிகின்றதெனவும், அது செய்தல் கூடாதெனவும் புலம்பித்திரியு மாபாசங்களுஞ் சிலவுண்டாகையா லன்னவை (அர்ச்சாதீபம்) என்னும் பேரால் யாம் செய்திருக்கும் ஸத்கிரந்தவாயிலாக நிரசனம்பெற்றிருத்தல் கண்டு குணப்பட்டு உலகம் நீடுவாழ்க. சுபம்! சுபம்!! சுபம்!!!

திருச்சிற்றம்பலம்.

---

ஸ்ரீ ஸம்பந்த தீர்த்த
சரணாரவிந்தார்ப்பணமஸ்து.

முற்றிற்று.

* கௌரவாபிமான கண்ய சீலர்கள்.

ஞானப்பிரகாசஸ்வாமிகள்
ஸ்ரீ-மஹாசந்நிதானம்.
Conjeevaram.

,, கா. கந்தையாபிள்ளை அவர்கள்
Storekeeper, P. W. D. Klang.

திரிசிரபுரம் சைவ சித்தாந்த சபையார்.

---

* இச்சித்தாந்தரத்நாகரம் என்னும் பதிபுண்ணியநூல் இனிது நடைபெற்று உலகிற்பரவும்பொருட்டுச் சிவபுண்ணியம் நிறைந்த சிந்தையுடைய கௌரவாபிமான கண்யசீலர்களும் இன்னும் சேரவிரும்புஞ் சைவாபிமானக் கனவான்களும் வருடம் 1-க்கு குறைந்த தொகை ரூ 10-0-0 சகாயதனமாகப் பொருளுதவி செய்து பெரிதும் ஆதரிக்கும்படியாகக் கோருகிறேன். சுபம்!

ப, அ.

அறிவிப்பு:— இச்சஞ்சிகை மாதம் மாதம்தவறாது வெளிவரும். ஜனவரி மாதச் சஞ்சிகை பிப்ரவரிமாதம் 25 தேதிக்குமேல் வெளியாகி வரும். அங்ஙனமாகவே சில சஞ்சிகைகள் வெளிவந்து கூடிய சீக்கிரத்தில் அந்தந்தமாதம் அந்தந்தேதியிலேயே வெளியாகும். சந்தாதாரர்களாகிய கனவான்கள் கிரமமாகத் தங்கள் கையொப்பத்தொகை செலுத்தாததே காரணமென்றறிக. இவ்வருடத்தில் வெளியாகும் முதற்சஞ்சிகைப்பெற்றுக் கொண்டவுடன் தயவுசெய்து ஒருவருடச்சந்தா தபாற்செலவுடன் ரூ 2-14-0 மணியார்டர் மூலமாக அனுப்புக. அல்லது வி. பி. புக் போஸ்ட் செய்யும்படி யாயினும் உத்தரவுசெய்க. இவ்வருடமுதல் நூதனமாகச் சேரும் கையொப்பச் சந்தாதாரர்க்கு மாத்திரம் (13-வது சஞ்சிகை) ஜனவரிமாதச் சஞ்சிகை. 5-பாரங்கொண்டதனுப்பி முடிவில் ஒருபாரஞ் சேர்த்தனுப்பப்படும். சுபம்! சுபம்!! சுபம்!!!

ப, அ.

## விளம்பரம்.

1. சித்தாந்தரத்நாகரம் என்னும் மகுடம்புனைந்த இவ்வாண்டிந் நூற்கு முன்னர் "வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம்" ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்களால் அநேக நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதிற்பொதிந்து வெளியாகிவந்த சித்தோத்கர்ஷ கிரந்தங்கள் யாவும் சுத்தாத்வைத சைவசித்தாந்த ஸ்வமதஸ்தாபனமும் பரமதகண்டனமுமாக பல அரிய சிவபாரம்மிய விஷயங்களைக்கொண்டு முடிந்துள்ளன என்பது யாவருமறிவார்கள்.

2. இந்நூல்களைப் பார்ப்பவர்கள் புறச்சமயிகள் மயக்கிலகப்படாது சகலசந்தேகங்களும் நீங்கி இன்புறுவார்களென்பதற் கையமில்லை. அநேக பிரபல உபநிஷத் பிரமாணங்களைக் கொண்டிலங்குமிவை தற்காலம் கிடைப்பதருமையாக, சென்னை வேதாகமோக்த சைவசித்தாந்த சபையார் கல்விருப்பின்படியும், ஷை-ஸ்ரீலஸ்ரீ - நாயகரவர்கள் மைத்துனர் - ம-ள-ள-ஸ்ரீ சி. நாராயணசாமிநாயகர், ஷையார் மருகர்-ம-ள-ள-ஸ்ரீ - ந. கிருஷ்ணசாமிநாயகர் ஆகிய இருவர்களது வேண்டுகோளின்படியும் ஷை - ஸ்ரீநாயகரவர்கள் இயற்றியுள்ள எல்லா நூல்களையும் பரிசோதித்து 6-பாரங்கொண்ட மாதாந்த சஞ்சிகையாக வெளியிட்டு வருகின்றோம்.

3. கையொப்பக்காரர்களாகிய வெளியூரார் தங்கள் சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்யவேண்டும்.

4. இவ்வரிய சித்தாந்தரத்நாகரம் என்னும் நூலுக்கு சகாயதானமாகப் பொருளுபகரிக்கும் சைவாபிமானச் சீமான்களுடைய பெயர்கள் நன்றியறிதலுடன் இந்நூற்சஞ்சிகைகளிற் சைவாபிமானிகளென்னுந் தலைப்பின்கீழ் பதிவுசெய்து வெளியிடப்படும்.

5. இந்நூற் சஞ்சிகை உள்ளூர் வெளியூர்களிற் பரவும்பொருட்டு முயற்சிசெய்வோரது முயற்சியளவுக்குத் தக்கவாறு திரவியசகாயஞ் செய்யவும் சித்தமாயிருக்கின்றோம்.

6. பத்துப்பிரதி வாங்குவோர்க்கு ஒன்று அதிகமாகக் கொடுக்கப்படும். ஒரு சஞ்சிகையின் விலை அணா 4 ஆகவும், முன்தொகை செலுத்துவோர்க்கு (6) மாதத்திற்கு ரூ 1-6-0 ஆகவும், வருஷத்திற்கு ரூ 2-8-0 ஆகவுஞ் சந்தா ஏற்படுத்தப் பட்டுள்ளது. வெளியூரார் தபாற் செலவு ஒருவருடத்திற்கு அணா 6. சந்தாத்தொகையுடன் சேர்த்தனுப்பவேண்டும். கையொப்பக்காரர்கள் ஒவ்வொருவரும் தங்கள் விலாசத்தை அடியிற்குறித்த எமது விலாசத்திற்குத் தெளிவாயெழுதவேண்டும்.

7. ஸ்ரீஞானசம்பந்தக் கடவுள் தண்ணருள் புரிவாராக.

இங்ஙனம்:

சென்னை,
31—1—07

பல்லவபுரம்-அப்பாவு செட்டி
புரொப்ரைடர் (வித்யா பாஸ்கர பிரஸ்.)
நெ. 60. கோவிந்தப்ப நாயக்கன் வீதி, சென்னை)

324 1/07
14

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
ஸ்ரீஞானசம்பந்தகுருப்யோநம:

# சித்தாந்தரத்நாகரம்.

கஉ-வது சஞ்சிகை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
22 MAR 1907
MADRAS.

இதிலடங்கிய நூல்கள்.
ஆசார்யப்பிரபாவம்.
ஆபாசஞானநிரோதம்.
சிவபாரம்யப்பிரதரிசிநி.

இவை
"வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம்"
ஸ்ரீலஸ்ரீ
சோமசுந்தர நாயகரவர்களால்
இயற்றப்பட்டு
ஷையார் மாணவகர்
ப-அப்பாவு செட்டியா ரவர்களால்
பரிசோதித்துத் தமது

சென்னை:
வித்யாபாஸ்கர அச்சியந்திர சாலையிற் பதித்து
வெளியிடப்பட்டன.

*Second Edition.*
31 December 1906.

Copy-right Registered.

## கௌரவாபிமான கண்ய சிலர்கள்.

---

**திருஞானசம்பந்தமூர்த்திஸ்வாமிகள்**

ஸ்ரீ-மஹா சந்நிதானம் அவர்கள், சகாயதன வரவு ரூ. 50.
மதுரை.

ஸ்ரீமாந் - பொ - பாண்டித்துரைத்தேவர் அவர்கள்.
Zemindar, வரவு ரூ. 25.
மதுரைத்தமிழ்ச்சங்க அக்கிராசனாதிபதி, Madura.

" N. கொண்டல்ராயசாமி நாயுடு அவர்கள்.
Zemindar, Kurivikulam.

" பூமியப்ப முதலியார் அவர்கள்.
Zemindar, Markanam.

" அப்பாதுரை முதலியார் அவர்கள்
Zemindar, Markanam.

" சாயபஹதூர். மெய்கண்டதேவ முதலியார் அவர்கள்.
Mysore Hall Contonment, Bangalore.

" J. M. நல்லசாமிப்பிள்ளை அவர்கள், B. A. B. L.
District Munsiff, Salem.

" பு-சி. தெய்வசிகாமணி செட்டியார் அவர்கள்.
Merchant, Devi Villa, Tondiarpett, Madras.

" C. R. முருகேச முதலியார் அவர்கள்.
Dubash, Gordon Woodroffe & Co, Madras.

" சொக்கலிங்க நாயகர் அவர்கள்
Contractor, Madras.

" செங்கற்பட்டு - அரங்கசாமி நாயகரவர்கள்
Merchant, Madras.

மதுரைத் தமிழ்ச்சங்கவித்வான்.

சென்னை,

வேதாகமோக்த சைவ சித்தாந்த சபையார்.



REGISTERED 22 MAR 1907
15

ங்களாலே திருக்கோலஞ்செய்வித்தார்கள். பின்பு பிள்ளையார் உருத்திராக்ஷமாலையையும்; திருநீற்றினையுந் தாமேயெடுத்துத்தரித்துத் திருவைந்தெழுத்தினை யுச்சரித்து மகிழ்ந்து அழகுபெறவிளங்கித் திருவீதியிலேவந்து முத்துச்சிவிகையின்மே லேறியருளினர். அப்பொழுது பலவாச்சியங்கள் முழங்கின. தேவர்கள் பூமழைபொழிந்தார்கள். பிரமணர்கள் வேதகோஷஞ் செய்தார்கள். பிள்ளையார் முத்துக்குடைமிழற்ற முத்துச்சின்னங்களெல்லாம் தமது திருநாமங்களை யெடுத்தூத எழுந்தருளிவந்தார். பூம்பந்தருக்குள் வந்தவுடனே சிவிகையினின்றுமிறங்கித் திருக்கல்யாண மண்டபத்துட்சென்று இரத்நாஸனத்தின்மேல் வீற்றிருந்தருளினர். அப்போது நம்பாண்டார்நம்பி தம்முடைய மனைவியார் பசுவின்பாலும் சுத்தோதகமுமேந்திப் பின்வரவந்து பிள்ளையாரைச்சிவமாகப் பாவித்து, மனைவியார் கமண்டலுவிலுள்ள நீரைவிட அவருடைய ஸ்ரீபாதங்களைவிளக்கி, அந்தத்தீர்த்தத்தைத் தம்முடைய சிரசிலே புரோக்ஷித்து, உள்ளும்பூரித்து, சுற்றத்தார்கள்மேலுந் தெளித்தார். பிள்ளையாருடைய திருக்கரத்திலே நீரைவார்த்துத் தமது கோத்திரத்தைச்சொல்லி (என்னுடைய புத்திரியை ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தப்பெருமானுக்குக் கொடுத்தேன்) என்று விவாகமுகூர்த்தம்வர மணமகளைக் கொண்டுவந்து பிள்ளையாருக்குப் பக்கத்திலே யிருத்தினர். அப்போது திருநீலநக்கநாயனர் வேதவிதிவழாது சடங்குகளைத்தொடங்கினர். வேதவொலியெழ வாச்சியங்கள் முழங்கத் திருமாங்கலியத்தைச்சாத்திப் பாணிக்கிரகணம்பண்ணிப் பொரியை அக்கினியிலிட்டுப் பரமசிவனைத்துதித்து (அக்கினியாவார் பரமசிவனே) என்று திருவுள்ளங்கொண்டு வேதவிதிப்படி வளர்க்கப்பட்ட அக்கினியை வலஞ்செய்து யாவருஞ்சூழ மனைவியாருடன் திருக்கோயிலுட்சென்று தமது திருமணத்தைத் தரிசிக்கவந்தவர்களுடைய பாசத்தை நீக்கத் திருவுளங்கொண்டு (கல்லூர்ப் பெருமணம்) என்னுந் திருப்பதிகம் பாடியருளினர். அப்பொழுது சிவபெருமான் பிள்ளையாரைப்பார்த்து நீயும், உன்து காதலியும், உன்னுடைய திருக்கல்யாணத்தைத் தரிசிக்கவந்தவர்கள் யாவரும் இந்தச்சோதியினுள்ளே புகுந்து நன்மையடையுங்கள் என்று அருளிச்செய்து திருக்கோயிலுட்பட மேலோங்கிய சோதிவடிவமாகி, அச்சோதியில் ஓர்வாயிலை வகுத்துக்காட்டினர். அதனைக்கண்டபிள்ளையார் (காதலாகிக்கசிந்து) என்னு நமச்சிவாயத்திருப்பதிகத்தைப் பாடியருளி, அங்குவந்துள்ள யாவரையுநோ

க்கி, இச்சோதியினுள்ளே பிரவேசியுங்கள் என்று திருவாய்மலர்ந்தருளினார். பிள்ளையாரது திருமணத்தைச் சேவிக்கப்பெற்றமையால், யாவரும் பாக்யசாலிகளாய் அந்தச்சோதியினுள்ளே புகுந்தார்கள். திருநீலநக்கர், முருகநாயனார், சிவபாதவிருதயர், நம்பாண்டார்நம்பி, திருநீலகண்டப் பெரும்பாணர் முதலிய அடியார்கள் தங்கட்கண் மனைவியாரோடும், சுற்றத்தாரோடும் அப்பெருஞ் சோதியினுட்புகுந்தார்கள். முத்துச்சிவிகையைத் தாங்கிச்சென்றவர்களும், மற்றைப்பரிசனங்களுந் தொழுது புகுந்தார்கள். உட்சமயிகளாதவரும், சைவசித்தாந்திகளுமாகிய யாவரும் அந்தச்சோதியினுள்ளே புகுந்தார்கள். யாவரும் புகுந்தபின் பிள்ளையார் தமதுகாதலியாரது திருக்கரத்தைத் தமது திருக்கரத்திற் பற்றிக்கொண்டு அந்தச்சோதியைவலம்வந்துபுகுந்து மறைந்தருளினார். அதன்பின்னர் அந்தச்சோதியானது மறைந்துவிட, திருப்பெருமணமாகிய திருக்கோயில் தோன்றியது. பிள்ளையார் யாவரையுஞ் சோதியுட்புகச்செய்து தாமும் புக்கருளிய அதிசயத்தைத் தூரத்தேகண்டு நணுகப்பெறாத விஷ்ணுபிரஹ்மேந்திராதி தேவர்களும், முனிவர்களும், ஏனையர்களும் வருந்தித்துதித்து வாழ்த்தினார்கள். பிள்ளையாரதுபெருமை எங்கும்பரவியது. அவரது திருவருள்வாழ்ந்திடுக.

---

## சூசனை.

பிள்ளையார் திருக்கல்யாணகோலங் கொண்டருளியது வைதிகமார்க்கந் தழைத்திடவென்க. (மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்டிருவை, யுலகறியத் தீவேட்டா னென்னுமதுவென்னேடீ, யுலகறியத் தீவேளாதொழிந்தனனே லுலகனைத்துங், கலைநவின்றவான்பொருள்கள் கலங்கிடுங்காண்சாழலோ)என்னும் பிரமாணபரியாலோசனையால் பார்வதியாரைச் சிவபெருமான் திருமணம்புணர்ந்தருளிய நலம் வெளிப்பட்டது. இவ்வுண்மையே பிள்ளையாரிடத்தும் அமையும். சிவனார் செயலே அமையுமாக, பிள்ளையாரும் அதுசெய்ததெற்றுக்கெனின், சிவனாரதுசெயலுக்குக் காரணங்கண்டாமாகையால், பிள்ளையாரது செயலுக்கே இனிக்காரணங்காணுவாம். பிள்ளையார் அடியவர்திருக்கோலங் கொண்டருளினமையால். அடியவராவார் துறவேபெரும்பயனைக் கொள்வதன்றி, இல்லறத்தி லினிதமர்ந்தின்புறுதல் குற்றமாகா தென்பதனையே அவரது திருமணம் வியக்தமாக்கியதென்க.



அடியவராவார் துறவெய்தலுந் தகுதியெனல்போதரவே வாதவூரடிகள் துறவெய்தி மகிழ்வெய்தினர். இவ்விருவரேயன்றி ஸ்ரீசுந்தரமூர்த்திகள் நித்தியகலியாணமாப்பிள்ளையாயும், திருநாவுக்கரசுகள் ஜந்மத்துறவாயுமியங்கி, உலகம்நடைபெறுமாறு திருவுள்ளமிசைந்தார்களாகையால், அவர்களதுசெயல் உலகுய்தற்கான அருள்விலாசமாக முடிந்தது. ஸ்ரீஜ்ஞானஸம்பந்தரும், ஸ்ரீஸுந்தரருங் கலியாணசுந்தரமூர்த்திகளாயும், ஸ்ரீமணிவாசகரும், ஸ்ரீவாகீசரும் துறவுக்கோலந்தாங்கினோராயும் வர்த்தித்தலால் இருவிதகோலங்களும் சிவனைவழிபடுவார்க்கியல்பினமைந்த நலங்களேயாமென வறியத்தக்கது. துறந்தவர்க்கன்றி வீடுபேறெய்தல் கூடாதென்பது சிலரதுமதமாகலின், அது அமையாதென்பதையும், இல்வாழ்வார்க்கே வீடுபேறெய்தல் கூடுமென்பது சிலரதுமதமாகலின், அதுவும் அமையாதென்பதையும், இருவிதநெறியும் வீடுபேற்றிற்கிணங்குமென்பதையுமே ஆசாரியர்களதுசெயல்கள் நிலைபெறுவித்தன. இவ்வுண்மையுணர்ந்தபேர் ஒன்றிலும் மயங்காரென்க. அன்றியும், சிவபெருமான் போகவுருவமேயன்றி யோகவுருவமுங்கொண்டிருத்தலால், ஆசாரியர்கள்கொண்ட இருவிதகோலங்களு மமைவுபெறும். சிவபெருமான் கொண்டருளிய போககோலங்கள் அவருடைய பிரயோசனமாகாமல் பரப்பிரயோஜனமாயின தன்மையாகலின், ஆசாரியர்கள்கொண்ட விருவிதகோலங்களும் ஸ்வப்பிரயோஜனமாகாது பரப்பிரயோஜனமாயினமையே அமைவுடைத்து. எமது பிள்ளையார் திருமணக்கோலங்கொண்டு ஆச்சாபுரத்திற்கெழுந்தருளித் திருக்கல்யாணஞ்செய்துகொண்டதேயன்றி அந்தக்கலியாணப்பெண்ணொடுகூடி அநந்தரம் வாழ்ந்ததில்லை. அதற்குக்காரணம் அவர் பசுவர்க்கத்திற் சேராமையேயென (கூரு) பக்கத்தில் விதந்தாளோம். பூர்வம் ஸ்ரீசுந்தரமூர்த்திகளது திருமணத்தைச் சிவபெருமான் தடுத்தருளியதும் இந்தக்காரணம் நிலைபெறவேயென்க. அநந்தரம் பரவையார் சங்கிலியார் என்னும்இவர்களை அவருக்குமணப்பித்ததும் அவர் பதிவர்க்கத்திற் சேர்ந்தபரிசு வெளிப்படுதற்கென்க. எமது பிள்ளையாரது திருக்கல்யாணத்தைத் தரிசிக்கவந்தவர்கள் எண்ணில்கோடியர். அவரது நிழல்போல அவரைப்பிரியாதிருந்து எப்போதும் அவரது திருவடித் தொண்டு செய்துகொண்டிருந்த திருக்கூட்டத்தவர் பதினாறாயிரவர். இந்தப்பதினாறாயிரவருஞ் சூழப் பிள்ளையார் பூப்பிரதக்ஷணம்வந்து ஆங்காங்கு எண்ணில்மகிமைகள்விளங்க வியங்கி அடியார்களுக் கருள்புரிந்து, உலகமுழுதும் வழிபட்டுவாழ்

த்துந் தெய்வமாகவமர்ந்து இனிதெழுந்தருளுவராயின், அவ்வமலதேசிகரது திருக்கல்யாணமஹோத்ஸவத்தை எண்ணில்கோடியர்வந்து தரிசித்தார்களென்பது ஓரதிசயமோ? (வனைதமிழ்க்காழிமேவி, யெட்டுணையு மறிவரு மாந்தசிவரைவதுவை யென்றுபேரிட்டழைத்தங்-கிரும்புண்டநீரிற் றிரும்பாதவீடுதரு மினிய கவுணியர் விளக்கே) எனவும், (காழியிலேவந்து கணக்கிலாச் சிவரைநீ-டேழியின்பத்துய்த்தவொருவனே) எனவும் போந்த பிராமாணங்களை யூகிக்கின், எமதுகாழிவள்ளல் முத்தியடைதற்குப் பக்குவராயிருந்த முத்தாத்மாக்களை யோரிடத்திற்சேர்த்து அவர்களுக்குத் தமது திருவடியின்பத்தைப் பிரஸாதிக்கத் திருவுள்ளமிசைந்தே தமது திருக்கலியாணத்தை அதற்கொரு வியாஜமாக்கொண்டாரென வெளிப்படுகின்றது. திருக்கலியாணத்தைக்காட்டிலுங் கும்புகூடுதற்கு வேறுபெரும்பிரயோஜன மூலகிலில்லையாகலானும் அதுசிறக்கும். அவரது திருக்கலியாணத்தைத்தரிசித்த புண்ணியந்தடித்து, அதனால் அப்போதே அன்னோர் முத்தராயினரெனலும் ஓர் முடிவென்றறிக. இத்தகையமுடிவுகளால் பிள்ளையாரது திருக்கலியாணம் அவரது போகார்த்தமான பிரயோஜனமாகாமல் உயிர்களுய்தற்கான பரப்பிரயோஜனமாகவே முடிந்தது. அன்றியும், எமதருள்வள்ளல் (கல்லையூர்தலாகிய அம்மிமிதித்தல் என்னும் கலியாணம்வேண்டாம்) என்னுங்கருத்தமைந்த "கல்லூர்ப்பெருமணம்வேண்டா" என்னுந் திருவாக்கருளிச்செய்தமையானும் அத்திருமணம் அவரது இஷ்டாபத்தியாய ஸ்வப்பிரயோஜனமாகா தொழிந்தது. இம்மட்டோ, அவர் அக்கினியை வலம்வருதலாகிய ஜடாராதனைசெய்யத்தாழ்த்துச் சிதக்கினியாகிய சிவனையேயன்றோ சோதிப்பிழம்பாகக்கண்டு பூசித்து மகிழ்ந்தனர்? ஜடாக்னியாகிய அக்னிபகவான் சேதனர்களிற்படிக்கப்பட்டுத் தேவஸமூஹத்தி லொருவனுகின்றமையால், அவனையாராதித்தல் பதியாகிய பிள்ளையார்மாட்டுச்செல்லாதென்க. சிவனாரதுவழிபாடுமாத்திரமே தமக்குச்சிறந்ததென்க. அவ்வழிபாடு தம்மைத்தாமேவழிப்பட்டு உலகுக்குபகரித்தலாமென்றறிக. சிவபெருமானைச் சோதிவடிவினர் என்றது அவரது ஞானத்திருவுருவத்தினையேயன்றி வேறில்லை. எமது பிள்ளையாரை (ஞானத்தின்றிருவுருவை) எனச் சேக்கிழார்பெருமான் விதந்தனர். அதனால் சிவனாரும், அவருடைய பிள்ளையாராகிய எமது தமிழ்விரகரு மொரேபொருளாகி எம்மனோரது மயக்கவிருளைத் தொலைவித்தவராயினர். இதனால், திருக்கோயிலுட்பட மேலோங்கிய தமது சோதிவடிவத்தில் ஓர் வாயிலவகுத்துக்காட்டி, அதனுள் யாவரையும்புகுவித்துப் பின்னுமதிற்புக ஒருவருமில்லாமையால், சிலநேரந்தாழ்த்துப் பின்பு காதலியாரோடு தாமுமதிற்புக்கு ஒன்றாயினர். அதிற்புக ஆளில்லையென்றது அங்கிருந்தவர்யாவரும், வந்தவர்யாவரும், வந்துகொண்டிருந்தவர்யாவரும், அதிற்புகுந்து இன்னும் வரத்தக்கவர்களுக்குப்போய்த் தெரிவிக்க ஆள்கிடையாமற் போயினமையாலென்றறிக. அந்தத்திருக்கலியாணத்தில் வந்தனடைந்தவர்கள் (இரும்புண்டநீரிற் றிரும்பாத வீடுபெற்றார்கள்) ஆகலானும், அது (புலிபார்க்கப்போன கதைபோல் முடிந்தது) ஆகலானும் போனவர்கள்போக இருந்தவர்களுக்குப்போய்த் திருமணத்தின் முத்திவைபவத்தை யறிவித்துபகரிக்க வொருவருக்குங் கூடாமற்போயிற்று. தங்களது பிரயோஜனத்தைப் பெரிசாகநாடாமல், அத்திருக்கல்யாணப் பேரொளியில் யாவரும்புக்கு முத்தியடையுமாறு அங்குச்சென்றிருந்தவர்களப்படியேதிரும்பி, அங்கு நிகழுமற்புதத்தைப் பிறருக்கறிவித்துக் கொண்டிருப்பாரெனின், உலகமுழுதும் அன்றே முத்தியடைந்திருக்கும். இப்போதுள்ள சீவர்க்கள் பரிபாகக்குறைவா லப்போதங்குவரத் தடைப்பட்டார்கள். ஆகையால், இன்று உலகப்பிரஸித்திக்கிடஞ்செய்தது. 'எங்கோவேயான்புகலி யெம்பெருமான்றன்மணத்தி, னங்கோர்பொருட்சுமையா ளானேனேல், இங்கேகின், றான்வருந்தவேண்டேன் றடைப்பட்டேனாதலினிங், நாள்வருந்த வேண்டுகின்றேனன்" என்னு மரியவாக்கியத்தை யூகித்தவர்க்கு உண்மை விளங்குமென்க. அடையாதவர்கணிற்க, அடைந்தவர்கள் (கணக்கிலாச்சீவர்) என்றுபடிக்கப்பட்டனர். அன்றியும், (கொள்ளைகொள்ளவீடுதவிக் கூற்றைப்பிடர்பிடித்துத் - தள்ளுந்திருஞானசம்பந்தா) என்று மேலோர் வியந்திருக்கின்றமையால், எம்பிரானாரது திருக்கலியாணவைபவ மெத்தன்மையினது என்னுமருமையை யாம்வியக்குந்தரமன்று. இச்சிறியபெருந்தகையாரது அருள்விலாசத்தை ஒருவாறு ஈண்டறுவாத முகத்தானே யாமெடுத்திசைத்தேம். இவரோடு சமயாசாரியர்கள் என்று எண்ணப்பட்ட ஏனையமூவரது அவதாரஸந்தர்ப்பங்களையும் அவர்களைப்பற்றிய சில முக்கியபிரமேயங்களையும் ஆங்காங்கு யாம் பிரஸ்தாபித்து, இந்நால்வரும் பரமபதியாகிய சிவாவதார மூர்த்திகளெனவே நியாயவாயிலாக நிரூபணஞ்செய்தோம். இவர்களைப் பதியினது விபூதிகளெனக்கேட்டு உள்ளம்பொறாது புலம்பியபடிறர் நாணித்தலைகுனியுமாறு (ஞானபேதவிளக்கம் - ஞானபேதத்தெளிவு - ஞானபேதத்துணிவு - ஞானபேதவிளக்க நியாயரக்ஷாமணி) முதலிய

சிறு நூல்களை எமதுபேராலும், எம்மவர்பேராலும் வெளியிட்டுப் பிரகாசப்படுத்தினோம். அன்றியும், சிலபத்திரிகைகள் வாயிலாகவும், பல பிரஸங்கங்களின் வழியாகவும், வேறுபலபல ஸாதகங்களின் மூலமாகவும் அன்பர்மனங்களிதுங்க அவ்வாசாரியர்களது அருட்பணிதாங்கி, அவர்பெருமை யாவருள்ளுநிலைபெற்றோங்குமாறு உரம்படச்செய்தோம். பிள்ளையாரதுபெருமை வேதபடிதமாயுள்ளதென மேலே நிரூபித்தோம். இனி ஸ்ரீ சுந்தரமூர்த்திகளது பெருமையும் வேதபடிதமாயுள்ளதென இனிது விளக்குதும். வேதத்தில், "கேசி விஷஸ்யபாத்ரேண யத்ருத்ரேண பிபத்ஸஹ" என்னும்வசனம் பிரகாசிக்கின்றது. இதற்குக் கேசியாகியசிவன் உருத்திரனாகிறபாத்திரத்தால் விஷத்தைப் பானம்பண்ணினார் என்று பொருளுண்டாகிறது. சிவபெருமானை வியோமகேசர் எனவும், இரணியகேசர் எனவும் வேதங்கள் கூறுகின்றன. அதனால், சிவனைக் கேசியென்றது அமையும். அவர் உருத்திரனாகிற பாத்திரத்தால் விஷத்தையுண்டார் என்றது உருத்திரன் விஷத்தைக் கையிலேந்திநிற்க, அதனை வாங்கியுண்டருளினார் என்று பொருள்பயக்கும். விஷமானது தேவர்களைத்துரத்தி ஹிம்ஸித்துக்கொண்டிருந்தகாலையில் அந்தவிஷத்தை யெடுத்துக்கொண்டுவரும்படி நிலைக்கண்ணாடியில் வெளியாகிய தமது திருவழகின் வடிவினராகிய சுந்தரமூர்த்திகள் என்னும் உருத்திரரைச் சிவபெருமான் அனுப்பியருளினார். அவர் அப்படியேசென்று அதனைக் கொண்டுவந்து சிவனாருக்களித்தார். சுந்தரமூர்த்திகள் விஷத்தைத் தாங்கிவந்து கொடுத்தமையால், அவர் ஆலாலசுந்தரராயினர். இதனால், சுந்தரமூர்த்தியே உருத்திரர் என்று வேதத்திற் படிக்கப்பட்டவராயினர். சிவனாகிய உருத்திரருக்கும் இவருக்கும் பேதமில்லையாகையால், இவரை உருத்திரன் என்றது அமையும். இவ்வாலாலசுந்தரரே சுந்தரமூர்த்திகள் என அவதரித்தமையால், சைவசமயாசாரியராகப்போந்த அப்பெருந்தகையாரைப் பரமபதியெனல் அமைவுடைத்து.

உரிமைசவுந்தரியளித்தசடையர் சிகாமணிசூடாமணியென்றேத்து, மரிய சுதர்மூவர்களிற்சடையனாரெனும்பெயரோனார்ந்தசீலன், பிரியமுடனில்லறத்தினியற்கைவழுவாதியற்றும்பெற்றியாளன், றருமகவின்மையினான்மெய்தளர்ந்துசிவனைக்கருதித்தவஞ்செய்கின்றேன்.

மனைவியிசைஞானியொடுமணக்கமழ் மென்மலரணையில்வதிந்துநெஞ்சன், கனிவினொடுமகப்பேறிலாமையினைக்குறித்துருகிக்கழறுங்காலைப், பனியிருளோடகற்றிவெம்பகலவன்றன்கிரணமதிற்பட்டபைங்கூழ், கனிதழைப்பமுதில்பொழிந்ததெனவொளிர்சோதியிலிருவர்காப்பண்மாதோ.

ஆன்றரவிமதியிர்விவாரமுத்திரத்தினிசியடர்சேவோரை,மூன்றுவயதொமெதலைபற்பவபூடணமிலங்கமுக்கட்டேவன்,றோன்றினனென்றுளமகிழ்ந்துசடையனார்காத்தெடுத்துத்தோளிற்சேர்த்தார்,வான்றருமென்மலர்சொரிந்துவளவார்துந்துமிமுழக்குவானோரார்த்தார்.



என்பன திருநாவலூர்ப்புராணச் செய்யுட்கள். இப்படியே, வாகீசவடிகள் - வாதவூரடிகள் என்னும் அமல மூர்த்திகளும் வேதபடிதராயுள்ள ஸந்தர்ப்பங்களை ஆங்காங்குக்கண்டுணர்க. இவர்கள் சமயகுரவர் எனச்சிறந்தபடிச் சமயசிடர் எனச் சிறந்தவர்களே அறுபத்துமூன்று நாயன்மார்களாம். இந்நாயன்மார்கள் அடியவர்கள் எனவுஞ் சிறந்திருக்கின்றார்கள். சைவசமயம் நிலைபெறுமாறு ஆசாரியத்தன்மையை விளக்கவந்தவர்கள் நால்வரும், சிடத்தன்மையை, அல்லது அடியவர்தன்மையை விளக்கவந்தவர்கள் அறுபத்துமூவருமாம். அறுபத்துமூவராகிய திருக்கூட்டத்தில் ஆசாரியர் நால்வருள், மூவர் அடங்கியிருக்கின்றனர். அவர் ஆளுடையபிள்ளையார், ஆளுடையவரசுகள், ஆளுடையநம்பிகள் என்னும் மூவருமாம். ஆளுடையவடிகள் அத்திருக்கூட்டத்தில் அடங்காது நின்றனர். ஆசாரிய வகுப்பிலடங்கிய நால்வருள் அடியவர்வகுப்பில் மூவரே அடங்கினர். ஒருவர் ஆசாரியவகுப்பிலேயேயன்றி அடியவர்வகுப்பில் வந்து சேராராயினர். நாயன்மார்களாகிய அடியவர்வகுப்பில் இவர் ஏன்சேரவில்லையெனின், ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள் திருத்தொண்டத்தொகையில் இவரை யெடுத்தோதாமையினாலென்று சிலர் கூறுவர். அவர் ஏன் ஓதவில்லையெனின், அவரதுகாலத்திற்கு இவர் பின்னிட்டவராகலாம், ஆகையால் ஓதுதல் யாங்ஙனமெனப் பதில்விடுப்பர். அதுகூடாது. சுந்தரமூர்த்திகளினும் முற்பட்டவரும், அவராலோதப்பெற்ற திருத்தொண்டத்தொகையி லெண்ணப்பட்டவருமாகிய ஸ்ரீ வாகீசவடிகள் நரிபரியாகிய திருவிளையாடலையும் அவர் நந்திகணத்தலைவர் திருவவதாரமென்பதையும், "நரியைப் பரிசெய்குவானும்" என்றும், "குடமுழநந் தீசனைவாசகனாக்கொண்டார்" என்றும் தமது தேவாரத்திருப்பதிகத்தில் துதித்திருக்கின்றனர். வாதவூரடிகள் சுந்தரமூர்த்திகளுக்குப் பிற்பட்டவராயின், அவ்வாதவூரடிகளது மகிமையாகிய நரிபரியானவிஷயத்தை அப்பர்சுவாமிகள் கூறியது யாங்ஙனம்? இதனால், சுந்தரமூர்த்திகளினும் வாதவூரடிகள் முற்பட்டவரென்பதே துணிவு. ஆயின், அவ்வாதவூரடிகளைச் சுந்தரமூர்த்திக

ளோதாததென்னையெனின், ஓதாமைகொண்டொரு தாழ்வுமின்றென்க. எங்ஙனமெனின், ஸ்ரீசுந்தரமூர்த்திகள் தமது தாயுந்தந்தையுமாகிய இசைஞானியாரையும், சடையனாரையுந் திருத்தொண்டத்தொகையில் எடுத்தோதினர். அவர்களையெடுத்தோதியதற்கு அவர்கள்பானிகழ்ந்த திருத்தொண்டின்பெருமை யாது? அச்சுந்தரமூர்த்திகளுக்குத் தாயுந்தந்தையுமாக அவர்கள் சிறந்தமையேயாம். இங்ஙனமாக, ஸ்ரீ ஸம்பந்தப்பெருமானுக்குத் தாயுந்தந்தையுமாகச் சிறந்த பகவதியாரையும், சிவபாதவிருதயரையும் அத்திருத்தொண்டத் தொகையில் அவரெடுத்தோதாமை யென்னை? அவர்களோதப்படாமையால், அவர்களைத் தாழ்ந்தவர்களெனல் கூடுமோ? அவர்கள் தாழ்ந்தவர்களாயின், பிள்ளையாரது திருமணத்தில் (இரும்புண்டநீரிற் றிரும்பாதவீடுபெறுதல்) சேருமோ? இவர்களையன்றி, அத்திருமணத்தில் வீடுபெற்றவர்கள் எண்ணிறந்தவர்களன்றோ? அவ்வெண்ணிறந்தவர்களோடுதா னன்றோ திருநீலநக்கர், திருநீலகண்டயாழ்ப்பாணர் முதலிய நாயன்மார்களும் வீடுபெற்றார்கள்? திருத்தொண்டத் தொகையிலோதப்பெற்ற திருநீலநக்கர் முதலினோரும், ஆண்டோதப்பெறாத ஏனையோரும் பிள்ளையாரது திருமணத்திலொரேகாலத்திற் சமமுத்தி யடைந்தாராகவும், இருதிறத்தவருள் யாம் தாரதம்யங் காணுமாறெங்ஙனம்? எண்ணில்கோடிபேருண்மை முத்தியடைந்தாராகவும், அவர்களையெல்லாந் திருத்தொண்டத் தொகையில் எடுத்தோதாததென்னை? அன்றி, சம்பந்தசரணாலயரு மத்திருத்தொண்டத்தொகையிலெடுத்தோதப்பெறாததென்னை? இவர்கள் யாவரும் சுந்தரமூர்த்திசுவாமிகளுக்கு முற்பட்டவர்களேயன்றோ? அவருக்கு முற்பட்டவர்களும், முதல்வன் றிருவடியின்பமெய்தினவர்களுமாகிய அன்னோர் திருத்தொண்டத்தொகையிற் பெறப்படாமையானுண்டாகுந் தீர்மானமே ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகளைத் திருத்தொண்டத்தொகையில் எடுத்துத் துதிக்காமைக்குண்டாகும் முடிவாயினதறிக.

பிள்ளையாரது திருமணத்திற் றிருவடிப்பேறெய்திய அடியவர்களோடு வாதவூரடிகளையும் ஸமமாக்குதல் யாங்ஙனம்? வாதவூரடிகளது பிரஸித்தி அவர்க்கில்லாமையாலெனின், அறுபத்துமூன்று நாயன்மார்களில் யாவரும் ஒரேவிதமான பிரஸித்தி அடைந்திருக்கின்றார்களா? உள்ளநிலைமாத்திரமேயன்றோ யாவருக்கு மொத்திருந்தது? அஃதொன்றினைநோக்கியே அவர்களை யோரினமாக்கினர் நமது பெருமானெனவறிக. இவ்வுண்மையை யூகிக்கின், வாதவூரடிகளை ஏனையடியவரோடு ஸமம்பாராட்டுதல் யாங்ஙனமென்னு மாசங்கை நசிக்கும். சிவபெருமானுடைய திருவடியின்பமெய்துதல் சிந்தையொருமைப்பட்ட செந்நெறியினர்க்கேயென வேதாதிகண் முழங்கலால், முத்தாத்மாக்களிடத்தில் மகிமையையெதிர்பார்ப்பது கூடாது. முருகநாயனார்-உருத்திரபசுபதிநாயனார் என்பவர்களடைந்த பிரஸித்திகள் யாவை? சித்தேகாக்ரமே அவர்கள்பாற் சிறந்த மகிமையாயினமையால், அவர்களிடத்தி லொருமகிமையுஞ் சிறக்கவில்லையென வுள்ளத்தழுங்குதல்கூடாது. அவர்பால் மகிமைகள் சிறந்திடமாட்டாவென்பதும் முடிவன்று. ஆவசியகம்நேரின், அவர்பால் எல்லாமகிமையும் நிகழுமென்க. இத்தவுண்மை நோக்கங்கண்டவர்கள் திருத்தொண்டத் தொகையில், வாதவூரடிகளை மாத்திரமேயன்றி அநேகம் சிவனடியார்களையுந் தம்பிரான்றோழ ரெடுத்தோதவில்லையெனத் தெளிவார்களாகையால், அவர்கள் திருத்தொண்டத்தொகையில் வாதவூரடிகளை யெனெடுத்தோதிலர் வன்றொண்டப்பெருமானென்றெழும்வினாவின் மயங்காரென்க. எமதன்னையாகிய திலகவதியாரை அவரெடுத்தோதினரா? மாதினியாரையும், புகழனாரையுமெடுத்து வாழ்த்தினரா? சிவகோசரியாரை எடுத்துப்புகழ்ந்தனரா? இவ்வாறு எண்ணியெழுதிவதென்றால் கணக்கிட்டுமுடியாதே. பத்தராய்ப்பணிவார், பரமனையேபாடுவார், சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார் முதலியபகுதிகளில் எண்ணிறந்த அடியார்களடங்கினராகவின், வாதவூரடிகளைத் திருத்தொண்டத்தொகையிற் சேர்க்காமைகொண்டே நாம் கவலுறுதல் அஸங்கதமென்க.

வாதவூரடிகளை ஆசாரியமூர்த்திகளென்று நாம் அங்கீகரித்தமையால், அவர் அதிகபிரஸித்தராயிடுதல் ஸித்தம். இப்பெருஞ்சீராளரைத் திருத்தொண்டத்தொகையிற் சேர்க்காதது குறைவெனின், குறைவாகாது. அதனை விளக்குதும். திருத்தொண்டர்களறுபத்துமூவருள் ஞானஸம்பந்தர் முதலியமூவரும் பதியினது விபூதிகளும், ஏனையோர் சிவசரணமெய்தியவர்களுமாம். இவ்வுண்மைபோதரவே இவர்களோடு நாலாவது புருடராகப் படிக்கப்பட்ட வாதவூர்வள்ளல் அறுபத்துமூவரு ளடங்காராயினர். அடங்கிவிடுவாரெனின், நால்வராசாரியர்கள் பதியினது மூர்த்தங்களென்பது கெடும். இவ்வாசாரியர் நால்வர்தம்முள் ஒருவர் பசுவர்க்கமாகிய ஏனைய நாயன்மார்குழுவிற் சேராதொதுங்கின்மையால், அது ஏனையாசாரி

யர்களையும் பசுவர்க்கத்தினின்று வேறுபடுத்திவிட்டது. திருவிளையாடற் புராணத்தில் தேவியாருக்கும், இளையபிள்ளையாருக்கும், நந்தியடிகளுக்குஞ் சிவபெருமான் சாபமிட்டருளி மூத்தபிள்ளையாருக்கு அச்சாபத்தை யிடாராயினரெனத் தெரிவித்திருக்கின்றது. ஏன் அவருக்குச்சாபங் கொடுத்திலரெனின், அவருக்குச் சாபந்தரின், அது தம்மையேதொடருமென வாளாவிடுத்தனரெனவும் விளக்கியிருக்கின்றது. கணபதிக்குச் சாபம்பலியாமையும், தேவி-ஸ்கந்தர் முதலினோர்க்குச் சாபம் பலித்தமையுமாகிய பிரமேயத்தையோசிக்குங்கால் கணபதிமாத்திரமே சிவனாருக் கபேதமும், தேவிமுதலினோர் பேதமுமாயுள்ளவரெனக்கொள்ள இடஞ்செய்கின்றது. இது ஸர்வாஸங்கதமாகையால், இதற்கு வேறுஹேதுவிருப்பதே யோசிக்கத்தக்கது. தேவிஸ்கந்தர்களைப்போல விநாயகருஞ் சாபமேற்பாரெனின், அவர்பால் பசுத்வமே நிலைக்கும். அப்போது அவர் பதியினது அவதாரமென்பது கெடும். அதனால், தேவிஸ்கந்தவிநாயகர்கள் மூவரும் பசுவர்க்கத்திற்றானே எண்ணப்படுவர். இவர்களுக் கதிஷ்டானமாகிய சிவமும் பசுவாயிடத்தட்டில்லை. இத்தகையவஸங்கதம் நிகழாமைப்பொருட்டே விநாயகர்பால் சாபமேறாமையாகிய வாய்மை வெளியாகியது. விநாயகரும், தாமுமொன்றென்பதைச் சிவபெருமான் வியக்தமாக்கி விட்டனர். இதனால் சிவனாருக்குச் சாபமேறாமையும், அவரில் வேறாகாதவிநாயகருக்குச் சாபமேறாமையும், அவர்களோடு வேறுபடாத ஸ்கந்தர் முதலினோருக்குச் சாபமேறுமையுமாகிய நலமே அறியத்தக்கது. தேவிஸ்கந்தர்கள் சாபமேற்றாரென்பது சொன்மாத்திரமேயாம். அன்னோர் சாபமேற்றாரென்பது நாடகமன்றி வேறு என்னாவது? சிவசாத்திரோபதேசத்தின் பெருமையை யுயிர்களுக்கு விளக்குதற்குப்போந்த பதியினது திருவிளையாடல் அது என்பது வியக்தமாகையால், பசுதர்மாரோபணம் தேவிஸ்கந்தர்களிடம் படிக்கப்பட்டது குற்றமாகாது. இவ்வுபமானமே பிள்ளையார் முதலிய மூவரும் அறுபத்துமூன்று நாயன்மாருளெடுத்தோதப் பெற்றமைக்குக் காட்சியாய்நின்ற ஸாட்சியாயிற்று. விநாயகப்பெருமான் சாபமேற்காமைபோலன்றோ மணிவாசகப்பெருமான் திருத்தொண்டத் தொகையிற் சேராராயினர்? சாபமேற்காதுநின்ற விநாயகரதுஸ்தானத்தில் ஸ்ரீவாசகப்பெருமான் நின்றமையால், ஆசாரியர்களது தெய்வத்தன்மைபோதரவே திருத்தொண்டத்தொகையில் அவ்வாதவூரடிகளைத் தம்பிரான்றோழ ரெடுத்



தோதில ரென்க. சீவர்களைப்போலச் சாபமேற்றருளிய தேவிமுதலினோர் சீவர்க்களாகாவாறு நாயன்மார்களிலெண்ணப்பட்ட பிள்ளையார்முதலினோர் நாயன்மார்களாகிய அடியவராயினதில்லை. அன்னோர் அடியார்போன்று நடித்தாரென்பதேதுணிவு. பிள்ளையார்முதலிய மூவரையும் பதிவர்க்கத்திற் படிப்பதற்காதாரமாகவே வாதவூரடிகள் திருத்தொண்டத்தொகையிற் சேராமை யுணர்ந்தவர்கள் இனிமயங்காரென்க. விரிக்கிற்பெருகும். இதுநிற்க.

விஷ்ணுவானவர் பிருகுவினது சாபத்தால் பிறந்துழன்றது நாடகமாமோவெனின், அது கூடாது. ஏனெனின், பிருகு ஓர்பசு. விஷ்ணு ஓர்பசு. பசுக்கள் கர்மாதீனமானவர்கள். கர்மவசப்பட்டவர்களது செயல்கள் நாடகமாகமாட்டா. விஷ்ணு பசுவன்று பதியெனின், பதிக்குப் பசுவினது சாபம் ஏறமாட்டாதாகையால், பிருகுவாகிய பசுவினது சாபமேற்றுழன்ற விஷ்ணுவைப் பதியென்று கூறுவது பரியாசமென்க. நிராலம்போபநிஷத்து விஷ்ணுவைப் பசுவென்றே கூறுகின்றது. விஷ்ணுவைப் பதியென்று மயங்குவார்கோளரிய "இராமதத்வ தீபிகையினது ஆபாசவிளக்கம்" என்பதொன்று இரண்டுபாகங்களாக யாம்வெளியிடுவித்ததில், அவர் பசு என்பது இனிது பரிஷ்கரிக்கப்பட்டிருக்கின்றது. இவற்றை ஸாதுக்கள் கண்டு ஸந்தோஷியாமற்போகார். இனித் தேவிமுதலினோர்க்குச் சிவன் கொடுத்தசாபத்தை யோசிப்பாம். சிவன் பதி. தேவி அப்பதியில் வேறாகாத அதனது சக்தி. சிவனுந்தேவியும் அபேதமாயினமையானும், சாபங்கொடுக்கவுமேற்கவு மிரண்டுபொருள்கள் கேட்கப்படாமையானும், சிவன் சாபங் கொடுத்ததும், தேவி அதனையேற்றதும் நாடகமென்றது நிராக்ஷேபம். ஸத்துச்சித்தானந்த வடிவினராகச் சிவசக்தி ஸ்கந்தர்களை விசாரித்தவர்க்கு எமதுபோதம் இன்பத்தைத்தருமென்க. இங்ஙனநிற்க.

இனி நாயனார் என்னுஞ்சொல் "நாயனுமடிமையு நாட்டியதாகும்" என்னுமாதரவின்படித் தலைவன் என்னும் பொருளையேதரலால் (நாயன்மார்களாகிய அடியவர்) என்று மேலெழுதியதிழுக்காமெனின், அங்ஙனமாகாது. அறுபத்துமூவரும் அவரைவழிபடும் எமக்கு நாயன்மாராயினதன்றிச் சிவஸந்நிதியில் நாயனாராயினதில்லை. உலகத்தவர் தம்மை வழிபடுதலால் நாயன்மாரும், தாம் சிவனைவழிபடுதலால் அடியவருமாகவப்பெரியோர் துதிக்கப்படுகின்றனர். இதனா

ல், எமதுபட்சம் வேரூன்றிப் பொலிவெய்தியது. அற்றேல், திருஞானஸம்பந்த மூர்த்திநாயனார்-திருநாவுக்கரசு நாயனார் - ஸ்ரீ சுந்தரமூர்த்திநாயனார் என்றுவழங்குவது தவறெனச் சிலர்கூறுவதென்னெனின், அதனை விளக்குதும். பிள்ளையார் முதலியமூவரையும் நாயனார் என்று கூறுவார் ஸ்ரீமாணிக்கவாசகரை நாயனார் எனக்கூறும் வழக்கின்று. அஃது என்னை? அவரை மாணிக்கவாசக சுவாமிகள் என்றே கூறிவருகின்றனர். இதற்குக் காரணம் சொற்றிலர். அறுபத்துமூன்று நாயன்மாருள் மாணிக்கவாசகர் சேராமையால், அவரை நாயனார் என்பது கூடாதெனின், அவ்வறுபத்துமூன்றுநாயன்மாருட்சேர்ந்த காரைக்காலம்மையார் - மங்கையர்க்கரசியார் - இசைஞானியார் என்னுமிவர்களைத் தனியே பிரஸ்தாபிக்குங்காலங்களில் நாயனார் என்னும் பட்டஞ் சிறவாமையால் அது நிரஸ்தம். மாணிக்கவாசகநாயனார்என்பது செவிக்குச்சுவைப்படாமையால்,அவரைச் சுவாமிகள் என்றதெனின், திருஞானஸம்பந்த மூர்த்திநாயனார் முதலியன எமது செவிக்கும், ஏனையோரது செவிக்குஞ் சுவைப்படாமையால், இவர்களை நாயனார்என்றே கூறவேண்டுமென்பது அடிபட்டுப் போய்விட்டது. ஒருவருக்குச்சுவைப்படுவதும், மற்றொருவருக்குச் சுவைப்படாததும் சபையில் முன்னுக்குவரா. நியாயத்திலடங்கி நிற்பதே முனைத்தெழும். அவரவருக்குச் சுவைப்பட்டவாறு கூறிமகிழ்வதுங் குற்றமாகாது. தன்னைப்போலவே மற்றையருங் கூறவேண்டுமென வாதிப்பதுமாத்திரமே கூடாது. அநாதிவழக்குக்கு விரோதமாக ஆன்றோரையெதிர்ப்பதுங் குணமாகாது. ஸ்ரீஜ்ஞானஸம்பந்தப்பெருமானது திவ்வியநாமாங்கிதத்தோடு திருவாலவாய் என்னும் மதுரையின்கண்ணினிதுவிளங்குந் திருமடத்தில் அநாதிதொட்டுவழங்கிவரும் பிருதாவளியை இதனடியில் எழுதுகிறோம்.

“ஸ்ரீகைலாஸோந்நத துவாதசாந்தசியாமளா பீடாரூட ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுவராபிந்நஸ்வரூப பரசிவபுத்ரரத்ந குமாரகுருமண்யதுலாவதார ஸ்ரீ பார்வதீஸ்தந்யபாநலப்ததிவ்வியஞாந நிசுருதசகலநிகமாகமசாரபூத திரமிடவேதப்ரவக்திரு ஸ்ரீமத்பரமசிவகருணாசமதிகதமுக்தாமய சதுரந்தகாயமாநசத்ரசாமர ஸ்ரீசிந்நகாகளாதிசமஸ்த பிருதாவள்ளியலங்கிருத ஞாநவிஞ்ஞாந சக்ரவர்த்தி சர்வஜனசங்க சத்யோநிர்வாண தீக்ஷாவ்யயாபவர்க்கவருஷ விசிராணநஜீமூத பரமதகளபகேசரி ஷண்மதப்ரதிஷ்டாப காசாரிய ராஜாதிராஜபாண்டியமஹாராஜகுரு க்ஷபணசாக்கியாதி மஹாந்தகார நிவாரணஞானபானு வீக்ஷணாருகாருகதவஜோச்சேதநபூர்வக ஸ்ரீமத்விருஷபத்துவஜஸ்தாபகஸ்ரீசைவசமயகர்த்திரு சர்வஞ்ஞபீடாரூட ஸ்ரீஜகத்குரு ஸ்ரீஞானசம்பந்ததேசிக சுவாமிகள் திருபாகடாக்ஷத்தினாலே.”



என்று படிக்கப்பட்டுவரு மநாதிஸம்பிரதாயத்தை விலக்குவதற்குநாம் ஆர்? “ஸ்ரீஜகத்குருஸ்ரீஞானசம்பந்த தேசிகசுவாமிகள் திருபாகடாக்ஷத்தினாலே” என்றதைமாற்றி “ஞாநஸம்பந்த நாயனார் திருபாகடாக்ஷத்தினாலே” என்று நாட்டிவழங்குவிக்கமுடியுமோ? அதற்குஆவசியகந்தான் என்னை? மூவர் முதலிகளை நாயனார் என்று வழங்கவேண்டுமென்பது ஈழநாட்டாரிப்போதெடுத்துக்கொண்ட புதுவழக்காய்முடிதலின், அது ஏனையெல்லாநாட்டாரது பழையவழக்காகிய ஆன்றோரது அபிமதத்தைக்கடந்து ஜீவிக்க வலிபெறாதொதுங்கியதென்க. இவற்றைத் தெளியாதார் சிவபெருமானை நாயனார் எனப்பலவிடங்களிற் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்திற் கூறியிருப்பதாக ஸந்தோஷிக்கிறார்கள். அது செய்யுள்வழக்கின் மாத்திரமே சிறந்திடும். செய்யுட்களில் அவன் இவன் என்று வரும் வழக்குகளிருப்பதால், சம்பந்தன்சொன்னான், சுந்தரன்போனான் என்று நாம் வழங்குதல்கூடுமோ ? சிவபெருமானைச் சேக்கிழார் நாயனார் என்று வழங்கியிருக்குமாதரவால் இனி நாம் சிவபெருமானைப் பிரஸ்தாபிக்குங் காலங்களில் திரிநேத்திரநாயனார் வந்தார், சிவநாயனார் போனார், சம்புநாயனார் அருளினார் என்றுவழங்குதலும் கூடுமோ ? இப்படி விப்ரீதம்பட வந்நாயனார்வழக்குச்சிதைந்திடுதலால் அப்புது வழக்கை ஆதரித்தல் அஸங்கதமே. அறுபத்துமூவர் எமக்குத்தலைவர்களும், சிவபெருமானுக்கு அடியவர்களுமானவர்கள். சிவன் தலைவரேயன்றி அடியவரன்று. ஆசாரியர்கள், தலைவர்களும், அடியவர்போன்று நடித்தவர்களுமாம். அடிமைத்திறஞ்செய் துய்ந்தவர்களுக்கும், அடிமைத்திறத்தை யினிதுகாட்டி யுலகையுய்வித்தவர்களுக்கும் பேதந்தோன்றவே அறுபத்துமூவரைச் செய்யுள்வழக்கோடு ஏனைவழக்கினும் நாயனார்என்று வழங்குதலும்,ஆசாரியர்களைச் செய்யுள்வழக்கின்மாத்திரமே நாயனார் என்றுவழங்குதலும் சிஷ்டர்களுக்கு ஒப்பாயிற்று. இதனால், சமயாசாரியர்களைத் தனித்தனியெடுத்துப் பிரஸ்தாபிக்கையில் நாயனார் என்று கூறுவது நவீநஸித்தாந்தமென்றொதுங்குவர் மேலோர். இவ்வுண்மை தெளிந்தபேர் ஆசாரியர் நால்வர்களையும் சுவாமிகள் என்றே வழங்குவரென்க. திருஞானஸம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் என்று துதிப்பதே சிஷ்டர்களொப்பத்தக்கது. தாயுமானசுவாமிகள், சிவப்பிரகாசசுவாமிகள் என்று பின்வந்த அடியவர்களையுஞ் சுவாமிகள் என்று கூறுவதுண்டே.

யெனின், சொக்கநாதஸ்வாமி, ஏகாம்பரநாதஸ்வாமி முதலிய ஸ்ரீபரமேசுவரனது திருநாமங்களையும் சுவாமி என்னும் விசேடம் அடுத்துவருகின்றமையால் குற்றமில்லையென்க. சுவாமியாகிய சிவனை வேறறக்கலந்து சிவாநுபவவலித்தராயிருப்பவருஞ் சுவாமியென்றுபசரிக்கப்படுதல் சுருதிஸம்மதமாகையால் பெரியோர்களும் சுவாமிகளாயினர். ஆசாரியர்கள் சுவாமியேயாகையாலும், அவருள் ஸ்ரீஜ்ஞானஸம்பந்தர் சுவாமியென்னு மியற்பெயருடைய முருகக்கடவுளாகையாலும் சமயகுரவர்களாகிய எமது அருளாளர்களை நாயனார் என்றழைப்பது கனம்பெறுதென்க. நாயனார் என்னுஞ்சொல் தலைமைப்பொருளை விளக்கினும், அதுசெவிக்குப் புலனானதும் அடிமைப்பொருளிலேயே பரிவஸாநத்தையடைதலால் சம்பந்தமூர்த்தி, வாகீசமூர்த்தி, சுந்தரமூர்த்தி, மணிவாசகமூர்த்தி என்று அன்பர்கள் கொண்டாடித்துதிக்கும் அமலமூர்த்திகளை நாயனார் என்று வழங்குவது மனஸுக்கு ஸந்தோஷத்தை யுண்டுபண்ணிலது. இவ்வுண்மை நியாயங்களைச் சித்தஸமாதானத்துடன் நமதன்பர்கள் கவனிப்பாராக.

இனித் திருத்தொண்டத்தொகையில் நாயன்மார்வர்க்கத்திற் படிக்கப்படாத வாதவூரரை வாதவூரடிகள்புராணத்தில் "நாயனாரவடனைநீ யொல்லையிங் கழையென்ன" என்னும் ஸந்தர்ப்பத்தில் நாயனார் என்று படித்திருப்பதென்னையெனின், அத்திருத்தொண்டத்தொகையிற் படிக்கப்படாத ஸ்ரீசிவபெருமானைச் சேக்கிழார்பெருமான் பல ஸந்தர்ப்பங்களில் நாயனார் என்று பிரஸ்தாபித்ததனோடு சேர்ந்து கனம்பெறுமென்க. இது எமதுபட்சத்தைச் சிதைவுபடுத்த வலியற்றது. எதிரிபட்சத்தையே பேர்த்தெறியும் வச்சிரத்தம்பமாய் நின்றது. எங்ஙனமெனின், வாதவூரடிகள் அறுபத்துமூன்றுநாயன்மாரிற் சேராமையால், அவர்சுவாமிகளாகலாம் என்று வாதிப்பவர்க்கே அவ்வாதவூரடிகளைக் கடவுண்மாமுனிவர் நாயனார் என்றது தலையிடியாயிற்று. இதனையோசிக்குமஸாதுக்கள் வாதவூரடிகள் நாயனாராகாமையும், அவரோடுசேர்ந்த ஏனையாசாரியர்கள் நாயன்மாராகாமையுமாகிய வாய்மையையறிந்து வந்தியாநிற்பர். சமயகுரவர் நாயன்மாராகாமையும், சமயசீடர் நாயன்மாராயினமையுமே ஈண்டுச்சிறந்து நிலைபெற்றன.

இம்மட்டோ, சுந்தரமூர்த்திகள் திருத்தொண்டத்தொகையில் நாயன்மார்களைத் துதித்தமையாலும், ஞானசம்பந்தரும் அப்



பர்சுவாமிகளுங் காளத்திமலையில் கண்ணப்பரை வணங்கினமையாலும் ஏனைநாயன்மாரைச் சம்பந்தர்முதலியோரிற் சிறந்தவர்களாகக்கோடல் தவறு என்று நம்மனோர் கூறுகின்றனர். இதுவும் அஸங்கதமேயாம். உழமண்ணா லுடல்வெளுத்தவண்ணானைச் சேரர்பெருமான் யானைமேனின்றுமிறங்கி வணங்கினர். ஏனாதிநாதரும், மெய்ப்பொருளாரும் புறச்சமயிகளிடஞ் சைவவேடங்கண்டு வணங்கினார்கள். சமயாசாரியர்கள் திருவீதிகளை வீழ்ந்து வணங்கினார்கள். வணங்கினவர்களைக் காட்டிலும் வணங்கப்பெற்ற ஸ்தானங்கள் விசேடம்பெறுமோ? விசேடம்பெறுதலும், தாழ்ந்திருத்தலுமாகிய விருவித வேறுபாடுகளும் ஸந்தர்ப்பத்துக்கேற்பக் கேட்கப்படும். ஆகையால், சுந்தரமூர்த்திகள் துதித்தருளிய அடியார்களையும், அச்சுந்தரமூர்த்தியையும் ஸமம் என்று கூறியிழுக்குவது கூடாது. சுந்தரமூர்த்திகள் சமயாசாரியர். நாயன்மார்கள் சமயசீடர்கள். சமயகுரவருஞ் சமயசீடர்களுமொன்றுதல் யாங்ஙனம்? இப்படியேசம்பந்தப்பெருமானும், அப்பர்சுவாமிகளுஞ் சமயாசாரியர்கள். கண்ணப்பர் சமயாசாரியரன்று. அவர் சமயசீடர். சமயாசாரியர்களும், சமயசீடருமொன்றுதல் யாங்ஙனம்? இவற்றை யினிதுநோக்குவார்க்கு உள்ளந் தெளியுமென்க. இந்நூலில் ௫௮-௫௯-௬0-௬௧-௬௨வது பக்கங்களிலு மிவ்விஷயத்தை விரிவாயெழுதியிருக்கின்றோம். ஆண்டுங் கண்டுதெளிக.

இதுகாறும் விளக்கிக்காட்டிய வுண்மையால், எம்பெருமக்களாகிய ஞானஸம்பந்தாதிகளது வைபவம் இனிது வியக்தமாயிற்று. அவருள், ஸ்ரீஜ்ஞானஸம்பந்தர் முருகக்கடவுளது திருவவதாரமென்றதைமேலே யாம்பதிப்பித்த ஸ்ரீமதுரைமடத்தின் பிருதாவளியிலும் நன்கு பிரகாசம்பண்ணியிருக்கின்றது. "தாவில் சராசரங்களெல்லாஞ்சிவம்பெருக்கும் பிள்ளையார்"என்று இளையபிள்ளையாரைப் பிரஸ்தாபித்து,"திருவவதாரஞ்செய்தார்" என்று சேக்கிழார்பெருமானுஞ் சூசித்திருக்கின்றனர். அவர் பிள்ளையார்என்றதேயன்றி இளையபிள்ளையார் என்று விளக்கியதெங்கேயெனின், வேறு பிரமாணங்களாற் றெளிந்துரைத்தாமென்க. சேக்கிழார் பலவிடங்களில் சிவகுமாரர் என்று கூறினமையால் அப்பிள்ளையார் மூத்த பிள்ளையாராகவாவது இளைய பிள்ளையாராகவாவது இருக்கட்டும். எந்தப்பிள்ளையார் என்னும் வினாவெழுங்கால் "மதலையாய் வந்தனன் கந்தன்" என்றது முதலிய பிரமாணங்களெழுந்து அவ்வினாவை விடுக்கும். தொண்டர்சீர்பர

வுவார் வியக்தமாகக்கூறுத காரணத்தை மேல் (24) வது பக்கத்தில் விதந்திருக்கின்றோம். இவ்வாறு தெளிந்தவர்கள் சமயத்தலைவர்களது பரத்துவநிலையின் மயங்கார்! மயங்கார்!! இன்னோர் சமயகுரவர்கள் எனவும், சைவசமயாசாரியர்கள் எனவும் வழங்கப்படும் வாய்மையேயன்றோ இவர்களுக்குரிய ஆளுடையபிள்ளையார், ஆளுடையவரசுகள், ஆளுடையநம்பிகள், ஆளுடையவடிகள் என்னுந் திருநாமங்கள் இனிதுவிசிதப்படுத்திவிட்டன? இவற்றினருமையையும் உண்மையையுந் தெளிந்திடாதார் ஆளுடையார் என்பதற்குச் சிவனாலாட்கொள்ளப்பெற்றவர் என்றுபொருள்கூறி மயங்குகின்றனர். அறுபத்துமூவருஞ் சிவனாலாட்கொள்ளப்பெற்றவரேயாக இந்நால்வருக்கு மாத்திரம் அவ்விசேடம்வந்து பொருந்துமாறென்னை? விஷ்ணுமுதலிய சராசரங்களையும் ஆளுந்தன்மைநோக்கியே அவ்வெம்பெருமக்களை ஆளுடையார் என்று உண்மைநூல்கள் துதித்தனவென்க. "யாவருக்குந்தந்தைதா யெனுமவரிப்படியளித்தா,ராவதினாலாளுடையபிள்ளையாராய்" எனச்சேக்கிழார் கூறியதில், பிள்ளையாருக்குச் சிவனாருள்புரிந்தமையே அவரை ஆளுடையபிள்ளையார் என்றதற்கு ஏதுவாக விளக்கியிருக்கின்றதெனச் சிலர் கூறுகின்றனர். சிவபெருமானால் பிள்ளையார் ஆட்கொள்ளப்பட்டாரென்பது எமக்குமொப்பே. இது பிள்ளையார் உலகத்தை யாண்டாரென்பதை எங்ஙனே மறுக்கும்? பிள்ளையார் உலகத்தையாளுதற்கு அவர் சிவனா லாட்கொள்ளப்பெற்றமையே காரணம்என்றது எமது பட்சம். சிவனார் பிள்ளையாரை ஆட்கொண்டமுறைமையால், பிள்ளையாருக்கு உலகத்தையாளுந்தன்மை யுண்டாகாது எனமறுப்பது யாங்ஙனம்? ஆளுடையார் என்பது ஆளுகின்றவர் என்னுஞ் செம்பொருளையே தரலால், ஆட்கொள்ளப்பெற்றவர் என்னுங் கரும்பொருளிற் கலங்குவது கயவர்மாட்டே சிறக்கும். ஆட்கொள்ளப்பெற்றவரையெல்லாம் ஆளுடையார் என்று சேக்கிழார் கூறாமையானும் பூர்வபட்சிகளதுமதம் நிலைதளர்ந்திடும். இவ்விஷயம் "ஞானபேதவிளக்கநியாயரக்ஷாமணி" யினும், இந்நூலில் (165)வது பக்கத்தினும் இனிது பரிஷ்கரிக்கப்பட்டிருக்கின்றது.

இனி ஆளுடையார் என்பதற்கு விஷ்ணுமுதலினோரை ஆளுகின்றவர் எனப் பொருள்கொள்ளின், ஆளுடையபிள்ளையார் விஷ்ணுவுக்குச் சிவசாரூப்பியந்தந்தமையால் அவர்பான்மாத்திரமே அதுகூடும். ஏனையர்பாற் சிறந்திடுவதெங்ஙனமெனின், அதனை விளக்குதும்.



"இந்திரன்மால்பிரமன் னெழி லார்மிகுதேவரெல்லாம்
வந்தெதிர்கொள்ளவென்னை மத்த யானையருள்புரிந்து"

என்று ஆளுடையநம்பிக ளருளிய திருநொடித்தான்மலைத் திருப்பதிகத்தில் விஷ்ணு முதலினோர் நம்பிகளை எதிர்கொண்டு வழிபட்ட வாய்மை வியக்தமாயிற்று.

வாதவூரடிகள் புராணத்தில்,

"*செந்தமிழ்க்கன்புமிக்கார் சென்றுதம்மன்றிலெய்தி
யந்தரத்தவரைமாலை யயனைநன்முகத்துநாடி
தந்தமக்கடிமைபூண்டு நயந்தவனொருவன்சொன்ன
விந்தநற்பாடல்கேண்மி னென்றவர்க்கருளிச்செய்தார்."

என்னுமுண்மை பிறங்குவதால் ஆளுடையவடிகள்பெருமையுஞ் சிறந்துவிட்டது. ஆளுடையவரசுகள் விடயமோவெனின், திட்டை என்னும் விஷ்ணுக்ஷேத்திரத்தை நதிகொண்டுபோய்ச் சமுத்திரத்திற் சேர்க்காதவகை நிலைபெறுவித்தமையானும், அவ்விஷ்ணுவாலாகாத வநேக காரியங்களைச் செய்து முடித்தமையானும் ஸாமஞ்சஸம் பெறும். இவ்வருளாளர்களது பெருமை "யாமிருந்து சொன்னபொழுதே தொலையுமோ?" என்னுந் திருவாக்கால் கொண்டாடத்தக்கதென்க. இவ்வமலதேசிகர்களது வைபவங்களை யாவருமெளிதினுணர்ந் தின்புறுமாறு அவர்களது புராண ஸாரங்களை ஈண்டு வெளிப்படுத்துவாம்.

---

ஆளுடையபிள்ளையார்புராணசாரம்.

"காழிநகர்ச்சிவபாதவிதயர்தந்தகவுணியர்கோனழுதுமையாள்கருதியூட்டு
மேழிசையினமுதுண்டுதாளம்வாங்கியிலங்கியசித்திலச்சிவிகையிசையவேறி
வாழுமுபலகனகற்றிப்பந்தரேய்ந்துவளர்கிழிபெற்றரவின்விடமருகற்றீர்த்து
வீழிநகர்க்காசெய்திமறைக்கதவம்பிணித்துமீனவன்மேனியின்வெப்புவிடுவித்
(க) [தாரே
ஆரெரியிட்டேடுத்தவேடவைமுன்னேற்றியாற்றிலிடுமேடுதிர்போயணையவே
காருதவுமிடிபுத்தன்றலையிலேற்றிக்காயாதபனையின்முதுகனிகளேற்றி [ற்றிக்
வோரமணரொழியாமேகழுவிலேற்றியோதுதிருப்பதிகத்தாலோடமேற்றி
ஈரமிலாவங்கமுயிரெய்தவேற்றியிலங்குபெருமணத்தரனையெய்தினரே."

---

* சிவபெருமான்

## ஆளுடையவாசுகள்புராணசாரம்.

[புகழனூர்பால்
"போற்றுதிருவாமூரில்வேளாண்டொன்மைப்பொருவில்கொறுக்கையர்திபர்
மாற்றருமன்பினிற்றிலதவதியாமாதவர்துதித்தபின்புமருணீக்கியாருந்
தோற்றியமன்சமயமுறுதுயரநீங்கத்துணைவரூடாவந்தசூலைநோயாற்
பாற்றருநீளிடரெய்திப்பாடலிபுத்திரத்திற்பாழியொழித்தானதிகைப்பதியில்
(க) [வந்தார்
வந்தநமக்கையருளானீறுசாத்தி வண்டமிழானேய்நீங்கிவர்க்கின்மன்னுய்
வெந்தபொடிவிடம்வேழம்வேலைநீந்திவியன்சூலங்கொடியிடபம்விளங்கச்சா
யந்தவிலப்பூதிமகனாவுமாற்றியருட்காசுபெற்றுமறையடைப்புநீக்கிப் [த்தி
புந்திமகிழ்ந்தையாற்றிற்கயிலைகண்டுபூம்புகலூரரன்பாதம்பொருந்தினரே."

---

## ஆளுடையநம்பிகள்புராணசாரம்.

"தண்கயிலையகீக்கிநாவலூர்வாழ்சைவனூர்சடையனூர்தனயனூராய் [ர்ந்து
மண்புகழலருட்டுறையானோலைகாட்டிமணம்விலக்கவன்றொண்டாயதிகைசே
நண்பினுடனருள்புரியவாரூர்மேவிநலங்கிளரும்பரவைதோணயந்தவைகித்
தின்குலவும்விறன்மிண்டர்திறல்கண்டேத்துந்திருத்தொண்டத்தொகையரு
(க) [ளாற்செப்பினரே.
[னேச்செய்து
செப்பலருங்குண்டையூர்நெல்லழைத்ததிருப்புகலூர்ச்செங்கல்செழும்பொன்
தப்பின்முதுகுன்றர்தரும்பொருளாற்றிட்டுத்தடத்தெடுத்துச்சங்கிலிதோள்சா
ணைப்பிறனீத்தூதுவந்தாறுண்டுநீடியுறமுதலைசிறுமதலையுமிழகல்கி [ர்ந்துநாத
மெய்ப்பெரியகளிறேறியருளாற்சேரவேந்தருடன்வடகயிலைமேவினரே." (உ)
இவை கொற்றங்குடியார் கூறியவை.

---

## ஆளுடையவடிகள்புராணசாரம்.

"செய்யதிருவாதவூர்வந்தருளியமைச்சரெனச்சிறந்தாதீடு
வையகிசைவழுதிநிதிகொண்டானைக்குருந்தடியில்வணங்கிநாவ
மூய்யவருட்பணியாற்றிநரிபரியாச்செய்துநதியுடைப்பிலெங்க
ளையன்முடிமிசையுவந்துமண்சுமக்கவன்பினுருவாயினரே.
(க)
எங்குமாகியவழகன்மேனிபிரம்படிதாங்கவேங்கிப்புத்தர்
மங்கவாரருள்செய்துமூகைபேசிடவழங்கிமணிமன்றுடு
மெய்கனுயகன்கரத்தாலேடுமெழுத்தாணியுங்கொண்டெழுதப்பாடி
யங்கண்மேவியசோதிதன்னில்இரண்டறக்கூடியமர்ந்திட்டாரே."
இஃது அபியுக்தரொருவர் கூறியது.

---



இந்தப்புராணசாரங்கள் நித்தியாநுஸந்தானத்திற் குபயோகமாயினவென்க. பிள்ளையாரது சரித்திரத்திற்குமாத்திர மீண்டுச்சுருக்கமொருவாறு எழுதினோம். ஏனையாசாரியர்களது சரித்திரங்களில் அவர்களது அவதாரஸந்தர்ப்பங்களைமாத்திரம் இனிது பிரகாசிப்பித்து அவர்கள் பிள்ளையாரில் வேறுகாதவரென்று மருணலம்போதர அவர்களது பரத்துவத்தை ஸ்தாபித்தோம். அவர்களது சரித்திரமுழுதமெடுத்தநுவாதம்புரிந்து சூசகமெழுதப்புகின் விரியுமாகையால், இம்மட்டிலுபரதியடைந்தாம். மத்யஸ்தபுத்தியுடையஸாதுக்களிதுகொண்டே யெல்லாவுண்மைகளையு மினிதாய்ந்து தெளிந்தின்புறுமற்போகார். "இவ்வரியநலங்களை நேரேதரிசித்தும், மாச்சரியமுதிர்ந்து நிந்தையிலிறங்கி நொந்தயருங்கீழ்களுக்கு யாம் திருப்தியுண்டுபண்ணுவது கூடுமோ? ஆகையால், எம்பெருமக்களாகிய ஆசாரியர்களது கால்களில்விழுந்து எமதுகுறைகளை அவர்கள் ஸந்நிதியில் எடுத்து விண்ணப்பஞ்செய்து திருவருணோக்கத்திற் கிடந்து வாழ்வோமாக.

## ஆளுடையபிள்ளையார் வாழ்த்து.

### முதற்பதிகம்.

---

அருட்பெருங் குருவா மற்புத மணியின் னடிமலர்க் கன்பிலாச் சிநட
ராப்பரித் தெய்த்தாங் கிடருழந் திறுமாந் தறிவிலா திருட்குழி வீழ்ந்தே
பொருட்பயன் காணார் புன்மையே பேணிப் புலம்புவா குரைப்பினுங்கேளார்
பொய்கொளு † மபர சுப்பிர மணியர் புதுமையே பேசிநா ணிழப்பர்
தெருட்பதி யில்லார் தீமையே பதிந்த திருவினர் பாசவீக் கத்தார்
சீயென யாரும் வெறுக்கவே திரியுஞ் சென்மமே யென்றுமேற் றுடையார்
மருட்பதி வஞ்சம் விஞ்சுநெஞ் சத்தார் வாய்மைசேர் மானமொன் றில்லார்
மாநிலந் தனக்குப் பாரமே கண்டாய் வள்ளலே காழிமா தவமே. (க)

† அபாசுப்பிரமணியர் என்னும் பிரயோகம் ஆகமத்திற் கிடையாது. ஆயினும், மூலமூர்த்தியும் அவதாரமூர்த்தியுமா யுள்ளவர்களை முறையே பரம் அபரம் என்பது கூடும். இதனால், சுப்பிரமணியக்கடவுள் பரமும், அவதாரமாயுள்ள ஸம்பந்தக்கடவுள் அபரமுமாகலாம். இவ்வுண்மையால் ஸ்ரீசுப்பிரமணியரே சம்பந்தராக அவதரித்தாரெனல் சால்புடைத்தன்றி வேறுவிதத்தாற் சாதிப்பதுகூடாது. இந்த விசாரத்தால் பரசுப்பிரமணியர் முருகக்கடவுளும் அபரசுப்

பிரமணியர் ஸம்பந்தக்கடவுளுமாகலாம். இப்படிவிவகரிப்பதால்சுப்பிரமணியக்கடவுளுக்காவது, ஸம்பந்தக்கடவுளுக்காவது தாழ்வுண்டாகமாட்டாது. சிவபெருமானுக்கும், சுப்பிரமணியக்கடவுளுக்கும் எவ்வளவுபேதமுண்டோ அவ்வளவுபேதமே முருகக்கடவுளுக்கும், ஸ்ரீஜ்ஞானஸம்பந்தவள்ளலுக்கு முண்டெனவறிக. சிவபெருமானைப் பரசிவமெனவும், சுப்பிரமணியப்பெருமானை அபரசிவமெனவுங் கூறலாம். இங்ஙனங்கூறுதலு மவ்விருமூர்த்தங்களினது ஸ்வரூப வேறுபாடுகளை நோக்கியேயன்றி வஸ்துபேதத்தை நோக்கியன்று. கண்டஸரமுங் கடகமும் உருவத்தால் வேறுபட்டு வேறு வேறு ஸ்தானங்களிலுபயோகமாயினும், பொன்னென்றேயாகி யொன்றிலொன்றுயர்வு தாழ்வுகளை யடையாமைபோல நடராஜமூர்த்தம் ஸோமாஸ்கந்தமூர்த்தமுதலியன விளங்கும். நடராஜமூர்த்தத்தில் சிவமுஞ் சக்தியும் வியக்தம். ஸோமாஸ்கந்தமூர்த்தத்தில் சிவசக்திகளும் ஸ்கந்தரும் வியக்தம். சிவமுஞ் சக்தியுமொன்றானபடிச் சிவசக்திஸ்கந்தர்களுமொன்றேயாதல் திண்ணம். இந்த நுட்பங்களையாய்ந்தபேர் சுப்பிரமணியக்கடவுளைச் சிவத்திற்றாழ்ந்த பொருளாகக்கூறார். சிவமும் சுப்பிரமணியரும் ஒன்றேயெனக்கூறுவர். இப்படியேயன்றோ சுப்பிரமணியரையும், ஸம்பந்தரையுமொன்றென விசாரித்துத் தெளிந்திடுவர் மேலோர்? இந்த வியவஸ்தையால் பரசுப்பிரமணியர் - அபரசுப்பிரமணியரென்று உயர்வுதாழ்வுகளாகிய விபரீதார்த்தங்களைக் கற்பித்துப் புலம்புத லஸப்யமெனவறிக. இவ்வுண்மையறியாமல் பரசுப்பிரமணியருயர்ந்தவர், அபரசுப்பிரமணியர் தாழ்ந்தவர் என்னும் பேதஞானப்பிரலபிதர்களாயும், பரசுப்பிரமணியர் ஒருவர், அபரசுப்பிரமணியர் பலர் என்னும் அஞ்ஞானபோதகாசிரியர்களாயும், பரசுப்பிரமணியர் கடவுள், அபரசுப்பிரமணியர்கள் சீவர்கள் என்னும் விபரீதஞானாவலம்பகர்களாயும், சுப்பிரமணியர் ஞானஸ்வரூபர், அபரசுப்பிரமணியர்கள் அஞ்ஞானஸ்வரூபர்கள் என்னும் அவிவேகபோத பிரவர்த்தகர்களாயும், பரசுப்பிரமணியர் தெய்வமாயுள்ளவர், அபரசுப்பிரமணியர்கள் அவரது சாரூப்யத்தையடைந்திருப்பவர்கள் என்னும் அபஸித்தாந்த பிரஸங்கிகளாயும், பரசுப்பிரமணியராகிய முருகக்கடவுள் ஸம்பந்தராகப் பிறந்திலர், அபரசுப்பிரமணியர்களாகிய சீவகோடிகளிலொருவரே ஸம்பந்தராகப் பிறந்தார் என்னுஞ் சண்டாளஞானஸம்பந்தர்களாயுஞ் சைவப்பதடிகள் சிலர் திரிகின்றார்கள். அன்னோர் இவ்வாபாஸங்களை வாய்ப்



பிதற்றாகக் குளறுவதன்றிப்பிரமாணம், நியாயமிவைகளாற் சாதிப்பதின்று. அங்ஙனஞ் சாதியாதவரையில் அவர்களுடைய வாதம் கனம்பெற மாட்டாது. ஆகையால், அவரது கலிகல்மஷாந்தகார போதம் எமது காற்கடையினின்றொதுங்கியதென்க.

ஏழைநா வலர்கள் பேசுவர் ஞான மிரண்டென நான்கவை யென்றே
  யிசைத்தனர் சேக்கி ழாரதற் கியம்ப வெண்ணில வாம்பிர மாணம்
ஈழநா வலர்க ளறிவரோ வறியா ரெழில் கொளுஞ் சித்தியார் தீப
  மென்னுமெய்ந் நூலு முரைக்குமே ஞான மீரிரண் டேயென விதற்கப்
பீழைநா வலர்கள் பேசுவ தென்கொல் பிதற்றுவார் பொருள்கெட வதனால்
  பிச்சரா மவர்தம் பேச்சுளங் கொண்டு பேதுறு வேமலே மெந்தாய்
கோழைநா வலர்கள் காணரு ஞானக் குன்றமே மன்றில்வாழ் வுடையான்
  குருவென வந்த ஞானஸம் பந்தக் கோமள மேயருட் குணமே. (உ)

சிவஞான சித்தியாரில் "கேட்டலுடன் சிந்தித்த றெளிதனிட்டை கிளத்தலென வீரிரண்டாங் கிளக்கின்ஞானம்" எனவும் சிவஞானதீபத்தில் "தெரிவரியஞானமுநாலாகுங் கேட்டல், சிந்தித்தறெளிதலுயர்நிட்டையென்றே" எனவும் போந்தவாறறிக. சேக்கிழார் திருவாக்கில் ஞானப்பிரஸங்கம் நான்குமுறை வந்தமையும், அதற்கு ஆன்றோர் திருவாக்குகள் பிரமாணங்களாகப் போந்தமையுமாகிய வுண்மையைச்சிதைத்து இருஞானமாக்குவது ஏழைஞானமேயாம். தொகையை வகையாக்குதலும், வகையை விரியாக்குதலுஞ் சால்புடைத்தன்றி விரியை வகையும், வகையைத் தொகையுமாக்குத லஸங்கதமென்க. பூர்வபட்சிகள் சித்தாந்தப்படிச்சேக்கிழார்ஞானம் விரிஞானமாகவே நான்குமுறைதொனித்தலா லதற்குப்பிரமாணங்களாக நின்ற சித்தியார் முதலியவைகளைத் தழுவி நான்கு ஞானமாகவே கூறுவதன்றி நான்காயுள்ளவிரியை இரண்டாகிய வகையாகவாவது, ஒன்றாகிய தொகையாகவாவது, கூறுவது பண்டிதர் கூற்றன்று. இவ்வுண்மைக்குமாறாக இரண்டேஞானம் சேக்கிழார் கூறினாரென்பது அபண்டிதர் கூற்றாயினமையறிக.

சேக்கிழார் கருத்தைச் செப்பினர் தணிகைச்சீர்புரா ணத்தி லென் றிசைத்துச
  சிரிக்கவே யெடுத்தா ருடம்பினை யந்தோ செப்பியே யிரண்டையு மொன்றா
யாக்குமா றெங்ஙனி ரண்டுமோர் விடய மறைவதற் கெழுந்தில வதனா
  லாகுமோ வொன்றற் கொன்றிட மாக வன்றியுஞ் சேக்கிழார் கருத்தை
நோக்கியே யுரைத்து மென்றிறை யேனு நுவன்றன ரோவெனி லில்லை
  நூலறிவுடைய † தம்பிரானிந்த நுட்பமோர்ந் தவர்தமக் கென்னே

† ஸ்ரீகச்சியப்பதம்பிரான்சுவாமிகள்.

வீக்கியபாச வினைவயப்பட்டு மெய்யறி விழந்தா ரவர்தாம்
விடைபகர் வாமெரம் வினையெவா மாற்றும் வெங்குரு மேயவின் னவனே.

அகத்தியன் றனக்கோத் தன்பொடு முருக னறைந்தவா கூறுமந் தணிகை
யம்பதிக்கான மெய்ப்புரா ணத்தி லதன்பினுண் டாகுமோர் சரிதை
யகத்துள தொன்றைப் பொருத்துதலெங்ங னுகுமோ விதுமதி யிழந்தோர்க்
காவதொன் றல்லால் வேறிலை யதனு லம்மைஞா னத்திரு முலைப்பான்
மிருத்தற் வயின்ற ஞானமா மணியே வியக்குநின் சரிதையிற் போந்து
விளங்குமோர் விடயந் தன்னையே யெடுத்து விளக்கினர் முற்புராணத்திற்
செகத்தினிற் பெரியோ ரென்றிட றகுமோ தெய்வகுஞ் சரியொடு குறப்பெண்
சேர்ந்துவாழ் தணிகைச் செம்மலே யெங்கள் செல்வமே சின்மயவொளியே.

மூலமு மதத்கா மொழிபெயர்ப் பொன்று முரணுத லின்றியே விளங்கல்
முக்கியமாகு முதல்கெட வாங்கு முரணுதன் முக்கிய மன்றுஞ்
சாலவீங் கிதனைத் தெளிந்தபேர் ஞான சம்பந்தர் காதையைக் கொடுபோய்ச்
சாற்றிருெம்ப முனிக்கிசைத் திடுத றக்கதென் றேற்றிலர் தணிகை
மூலநூ லதனிற் பிள்ளையார் ஞான மொழிந்துள தோவிலை யதனுன்
மொழிபெயர்ப் பதனிற் கூறுத லெவனே மூடர்கூற் றிதென மொழிந்தாய்
ஞாலமீ திளிவ்வந் தெமக்கருள் பூத்த நாயக மேதிருத் தணிகை
நற்பதி மேவும் வள்ளலே காழி ஞானனே மோனதே சிகனே. (௬)

திருப்புகழ் தன்னிற் கந்தவேள் காழிச் செம்மலு மொன்றெனத் துதிக்குந்
திறமுணா ராது முடைகொள்வாய் திறந்து செப்பியே பற்பல நிந்தை
தருக்கியே திரியு மூடருக் கொன்று சாற்றுது மெந்தையாஞ் சிவனைத்
தற்பர மாக நிறுவும்வே தத்தைத் தலைதடு மாறவே புரட்டி
யருத்தபே தத்தா விழிவுரை யாடி யெளபசா ரிகமுதலாக
வறைந்திடுந் † தீயர் தம்மிலென் புதுமை யானதோ சிவசிவ சிவவென்
கருத்தெலா நடுங்கும் பாவிக ளவரைக் காணவு மஞ்சுமென் கண்கள்
கவுணியர் காளா யெனவுவந் தன்பர் கண்டுவாழ்ந் திடுமேனி விளக்கே. (௬)

† பாஞ்சராத்திரிகள்

சேக்கிழார் வாக்கின் முன்சிற வாது திருப்புக ழாதிநா லென்று
செப்புவ ரிரண்டு முரண்பெறி னன்றிச் சிறந்திடா தவ்வுரை யந்தோ
சேக்கிழார் மிக்கார் திருப்புகழ் செய்தார் சிறியவ ரென்னலுந் தீதாம்
சிவசிவ சிவயா மென்செய்வோ மந்தோ சிவனருள் படைத்தினி தோங்கும்
வாக்குடை யருண கிரிமொழி யிழிந்து மாறுமே லருண்மொழித்தேவர்
வாக்குமேனிழிந்து மாறிடா திரண்டு வாக்குமொன்றேயென மொழிந்தாய்
நீக்கமி லிரண்டு நூல்களுந் தம்மினிலைகெடா வுண்மையைக் காட்டி
நிறுவிய காழிப் பதிவரு ஞான நிதியே சோதிவா னவனே. (௭)



செத்துழல் பிணங்க டம்மையே பரமாச் செப்பிவாழ்ந் தின்புறுந் தீயர்
செத்திலா நின்னை வாழ்த்தியின் புறுதல் சேர்ந்தில ரென்செய்வார் பாவம்
பெத்தமேதங்கள் வாழ்வெனக் கொண்டார் பேயர்தாம்பிணங்களா லென்னே
பெற்றன ரந்தோ நிரயமே யன்றிப் பேறிதன் மேலினி யுண்டோ
சத்தென வேதஞ் சாற்றியே துதிக்குந் தாணுவே * மான்முத லாகுஞ்
சரவச ரங்கள் சிவம்பெற வளிக்குஞ் சைவனே தெய்வமா மணியே
பித்தமோ வெறியோ தலைதடு மாறிப் பேசுகின் றாவர் தம்பாற்
பேசவென் றூனும் கூசுமென் னுளமென் பேறென வந்தவாழ்முதலே. (அ)

* "தாவில் சராசரங்களெல்லாஞ், சிவம்பெருக்கும் பிள்ளையார்" என்று ஸ்ரீ சேக்கிழார் கூறினமையாலும், சேதனருள் விசிட்டபுருடராகிய விஷ்ணுவுக்குப் பிள்ளையார் சிவம் பெருக்கச்செய்தமையாலும் பூர்வபட்சிகளது வாதம் அவலமென்க. இதனையறியாது "தாவில் சராசரங்களெல்லாஞ், சிவம்பெருக்கும் பிள்ளையார்" என்னு மரிய வுயர்நலத்தை ஏனோ நமதுநோமுர்கள் கீழ்ப்படுத்தி இழிவுகூறித் திரிகின்றார்கள் ?

செய்வள மிகுசீர் மயிலையம் பதியிற் சிறந்திடு மங்கையாமெலும்பைச்
செய்தனை வணிக னுயிரொடு மணமுஞ் செறிந்திட வருளினை வேறு
செய்வகை தவிர்ந்து பிணமெனக் கிடந்த சேயிழை முயலகன் றவிர்த்தாய்
தெய்வநல் லருளாற் பாண்டியன் சுரத்தைத் தீர்த்தனை கூனொடு சுத்த
சைவமோங் கிடவெம் கனலிடையோடு சலத்திடை யேடுக ணின்று
சத்தென விளங்க வைத்தனை புத்தர் சமணர்கள் வலிதப வுலக
முய்வதே நாடி யுவந்தருள் புரிந்தா யொப்பிலா வனமுலை யம்மை
யொண்கரத் தேந்தி முலைகொடுத் திருகண் ணொற்றியே பருகுமா ரமுதே

சைவநூல் வரம்பு கடந்தவை யாடுஞ் சண்டிகள் கூட்டற வகன்று
சச்சிதா னந்தப் பிழம்பெனத் துலங்குஞ் சதுரனிற் பணியும்வாழ்வொன்றே
செய்வகை யறியாச் சிறியனேற் கருளாய் செல்வமே கவுணியர் தனமே
சிவனருள் குமர சற்குரு வேயென் சிந்தையி லூறுசெந் தேனே
உய்வகை யுவகை யுண்டிகொ லுன்னை யுளத்தவி சிருத்திலாப் பதகர்க்
கொப்பிலா ஞான சம்பந்த நிதியே வோவிய மேயெமை யாளுந்
தெய்வமே யம்மைத் திருமுலை யமுதத் தேறலுண் டொளிர்குண மலையே
தேசிக ராய மோனநன் னிலையே சிற்பர வ்யோமமாஞ் சிவமே. (௧0)

இலக்கண மறியா ரிலக்கியத் தேர்ச்சி யெய்திலா ரெட்டனே யேனு
மென்றுவர் தாமே முற்றுணர்ந் தவரா யேழைநா வலர்கடா மென்னே
அலக்கணுற் றிடர்பட் டழிவதல் லான்மற் றுவதுண் டோவினி யந்தோ
அரகர சிவவென் செய்குவோம் பாவத்தழுந்தியே யெழும்புத லின்றிக்

கலக்கமுற் றழியுங் கன்மமே வந்து கலத்தலாற் சிவமணி யேநின்
காண்மலர் வழுத்தும் பேறிழந் தனரக் கயவர்வாய் மதமடக் குதலே
விலக்கலும் விரத மாகவே கொண்டு விளங்குகின் றேனெமை யுடையாய்
வேதமும் விந்துநாதமுங் கடந்து மெய்யொளி பரப்பும்வே தியனே.

திருச்சிற்றம்பலம்.

---

## இரண்டாவதுபதிகம்.

---

சிவனடியே யெனும்பனுவற் பொருள்சிதைய விருஞானஞ் செப்பி யெங்க
டவமுதல்வர் சம்பந்தர் தமைச்சாமு சித்தரெனச் சாற்றி நீடு
பவம்பெருக்கி ஞாயமொரு சிறிதுமுண ரார்நிந்தை படிப்பார் தீமை
யுவந்தெரிவாய் நிரயமுமி ழாதவரை யெஞ்ஞான்று முண்மைதானே. (க)

காழிநகர் வந்தருளுங் கண்மணியைப் பசுவாகக் கழறு வாரைப்
பாழியுடைச் சமண்குண்டப் பதிதரெனக் கூறுதலே பான்மை யாமால்
ஆழியுடை குழூலகி லவர்தாங்கும் பொய்வேட மந்தோ வந்தோ
ஊழிதொறு மொழியாத கொடுந்துயராய் விளையுமெனி னுறுதியுண்டோ. (உ)

எம்பெருமான் சம்பந்த னிலகுசரா சரப்பகுதிக் கெல்லாந் தானே
செம்பொருளா தலுமுணரார் சிவன்மகனா தலுமுணரார் சிவனு ஞான
மும்பர்வழுத் தொருநான்கா தலுமுணரா ருரைத்திடவுங் கேளார் நாளுந்
தம்பெருமை யேபேசித் தருக்குறுவா ரவர்பாவஞ் சாற்றொ ணாதே. (ங)

அவஞானந் தெறக்காழி வருமமல வாழ்வினையெம் மரசை யன்று
சிவஞானங் குழைத்தம்மை தாஞானப் பாலுண்ட தெய்வ வாழ்வைத்
தவஞானப் படிவத்தெந் தனிமுதலைத் துறைசைவளர் தம்பி ரானுஞ்
சிவஞான முனியோடு சேர்த்துரைப்பா ரவர்பாவஞ் செப்பொ ணாதே. (ச)

பவம்பெருக்கும் படிற்றமணப்பாவிகள்போ லிஞ்ஞான்றும்படிற்றுளங்கொண்
டவம்பெருக்குந்தொழில்காட்டி யன்புடனே பொறைகாட்டாதழுதுசில்லோர்
சிவம்பெருக்கும் பிள்ளையினை யோனிவாய்ப் பட்டயர்ந்து செனித்தா ரென்று
சவம்பெருக்கு முகத்தினராய் நிந்தைபகர்ந் தழிவாரவர்தன்மை யென்னே (ரு)

பாலனுந் தொண்டியற்றிப் பண்டின்று முன்னையெனப் பணித்த வாக்கின்
சீலமுண ராதந்தோ மாறுகொளக் கூறியொரு சிறிதும் வாய்மை
யேலவுண ராதிறுமாந் திழிவேயின் பெனமாந்தி யிருக்கு மூடர்
பாலனுகா திருந்திடலே பண்ணியநற் புண்ணியத்தின் பயனா மன்றே. (சு)

வடியேறு மயிற்காத்து மாமணியைக் கவுணியர்தம் வாழ்வை யெம்முட்
குடியேறு பெருந்தவத்தைக் கோமளத்தைச் சிரபுரத்துக் கொழுந்தை யன்று
மிடியேறு கொடுஞ்சாரிப் புத்தனிகல் கூறவவன் வெந்து வீழ
இடியேறு வீழ்ந்தபடி யென்றுவிழு மோவிடிதா னேதி லார்க்கே. (எ)



மழுவேறு கரத்தமல னிடத்துறைமைப்பான் மணங்கமழும் வாயி னின்றுந்
தொழுவீறு மமுதமொழிக் கெனைத்துணையும் வாதினிடத் தோற்ற பேயர்
கழுவேறி னரிந்தக் காதையுல கறியுமருட் காழி நாதன்
குழுவேறும் வகைகாணார் கழுவேற லன்றியெது கூடுவாரே. (அ)

மண்முகத்தி லெழிற்சிற்றம் பலநாடி யருணகிரி வள்ள லாதி
பண்முகத்த மொழிப்புலவர் சம்பந்தப் பெருமானைப் பாடி யெங்கள்
சண்முகத்துப் பெருந்தகையே யென்றுதுதி கூறியருள் சார்ந்தா ரின்று
கண்முகத்தில் லாக்குருடர் போன்றுசிலர் வாதாடிக் கலங்கி னாரே. (கூ)

வதுவையெனப் பேரிட்டு வரித்துயிர்க ளனைத்தையு முத்தி வளநா டெய்தக்
கதுமெனச்சிற் சோதியினிற் கலந்தொன்று மிடச்செய்த கருணை வாழ்வைப்
பதியெனக்கொண் டின்புறுதல் பாங்காமப் பாங்கொருவிப் பாவ நீடு
மதியுடையா ரிவருமொரு சிவனடியா ரென்பரிது மருளா மன்றே. (கO)

திருச்சிற்றம்பலம்.

## மூன்றாவதுபதிகம்.

---

சீர்பூத்த மறைவாழச் செய்யசிவா கமம்வாழச் சிறந்த நாளுற்
பேர்பூத்த வேதாந்த சித்தாந்த நெறிவாழப் பெரியோர் வாழக்
கார்பூத்த பொழிலுடுத்த காழிநகர் வாழவருங் கருணை வாழ்வே
பேர்பூத்த நின்னடிப்போ தென்னுளம்பூத் திடவிரங்கா யெம்பி ரானே. (க)

எம்பிரா னின்னடிக்கே பேரன்பு வாய்த்திடுமென் றெண்ணி யெண்ணி
வெம்புமெனைக் கண்பார்த்துக் கருணைபுரிந் திலையெனினை வேத நான்கு
மும்பர்முனி வோரெவரும் வாழ்த்தியடி பணிந்தேத்து மொளியே யென்னை
நம்பியபின் கைவிடுதன் ஞாயமோ காழிவளர் ஞானமூர்த்தி. (உ)

மூர்த்திகளி லொருவ னாகவுனை வேதங்கண் முழங்க வாலே
கீர்த்திபெறு முனையன்றி வாழ்த்தவல வறுயெனென் கிறிகள் யாவும்
பேர்த்தெறியுஞ் சம்பந்தப் பெருமானே மெய்ஞ்ஞானப் பெரியர் சூழ்ந்து
நாத்துதிகள் கூறிமகிழ்ந் தேத்திவழி படுமெங்கள் ஞான வாழ்வே. (ங)

ஞானநிலை யாவர்க்கு மரிதரிதென் றருமறைக ளவிலு முண்மை
தானறியார் மெய்ஞ்ஞானந் தாமெய்தி னார்போன்றே சாற்றி நாளு
மூனமே புரிந்தழிவா ருன்னருமை யொங்கேகண் டுவப்பா ருள்ளே
தேனெனச்சேர்த் தினிக்குமருட் காழியவென் னூடலவுந் தேவ தேவே. (ச)

உலகமெலாந் தொழமன்று ளொப்பினடங் குயிற்றுமுமை கேள்வ னுண்மை
யிலகவெமக் கருண்மாரி பொழிமுகிலே யின்பநிலை யேழை யேனுக்
கிலகில்பெருங் கருணையினா லளித்தாய்நின் னருட்பெருமை யாரே கண்டு
சொலற்குரியார் வணிகனுயிர் மருகலிலன் றழைத்தருளுஞ் சுருதி வாழ்வே.

வாழ்வுதரு முனிவாழ்த்தி வழிபடாக் கொடியவினை வழங்க லாலே
யாழ்பிறவிக் கடலழுந்தி யழுகின்றே னிம்மாய மகற்று மென்னை
யூழ்வலியே யென்செய்வே னுடையாயுன் பொன்னருளை யுதவு கண்டாய்
தாழ்வகலப் பாண்டியனைச் சுரத்தினின்மீட் டாண்டருளுஞ் சாந்தத்தேவே.

தேவேசெங் கனகவரைச் சிலையான்பா லூட்டவளந் திகழுமின்பான்
மாவேத வாய்மைதவழ் சிவஞான மணமொன்றே மணக்குங் கண்டாய்
பூவேறி மால்காணாப் புண்ணியனார்க் குபதேசம் புகலு மெங்கள்
கோவேசெந் நின்றுயுன் குணப்பெருமை யெவரறிந்து கூறுவாரே. (எ)

கூறுவர்பல் லாறெங்கள் கோமளமே வினைத்திரளாங் குழியில் வீழ்ந்தே
யேறவறி யாதந்தோ கண்டெறியார் புலர்தாமங் கிடந்துழந்தே
நாறுமுடன் மெய்யென்று நம்பியுழல் பேயேனை நாடி நின்பா
லேறவுய் ரன்பருளிச் செய்தருளாய் காழிவள ரெந்தா யெந்தாய். (அ)

எந்தையே திருஞான சம்பந்த நிதியேயென் றேத்து மன்பர்
தந்தையே காழிமுதற் றலத்துறையுஞ் சிவனார்க்குத் தக்க வாறே
சுந்தமார் பதிகங்கள் சமைத்துலக மும்தாவே சாரச் செய்தாய்
சிந்தலே மலம்போக்கிச் செம்பொருளெற் கருளாயெஞ் செல்வத் தேவே (கூ)

செல்வமுனை யன்றியுள தாகவுளத் தொருபோதுஞ் சிந்தியே னென்
கல்விதரும் பயனாகக் கண்டமணிக் குன்றேயென் கண்ணே பாழ்த்த
தொல்வினைமாய் தாளாளுந் தொழுகின்றேன் பாண்டியனைத் துரிசு மாற்றி
யல்லல்கெட வாண்டாயுன் னருளிருந்த பரிசென்னே யன்பர்கோவே. (௧0)

அன்பர்மனங் களிதூங்க வமர்ந்தருளு மணிக்குன்றே யரசே யென்னைத்
துன்பமெனும் பவக்கடலின் றெடுத்தாள விசைந்திலையோ சுருதி நான்கு
மின்பநிலை யேகருணை வாழ்வேயென் றினிதேத்து மேந்தலேநின்
பொன்புரையுந் திருமேனி யெழில்காட்டாய் புகலிவளர் பொருவில்சீரே. ( )

திருச்சிற்றம்பலம்.

## ஆளுடைய அரசுகள் வாழ்த்து.

### நான்காவதுபதிகம்.

திருத்தகுமெய்ஞ்ஞானியர்தஞ் சிந்தைதுளிர்த் தொழுகுநறுந் தேனேயன்பர்
கருத்தெனுநற் கற்பகப்பூங் காவனத்திற் பூத்தவருட் கனியே செய்ய
வருத்தமட வார்புவியி லாசையகன் றவருந்து மமுதே யென்றன்
வருத்தமொழி தரவருளா யதிகைநகர் மேவியருள் வாய்ந்த தேவே. (௧)

தேவேயெந் திருநாவுக் கரசேயெஞ் செல்வமே திகழு ஞானக்
கோவேமெய்ச் சிவசமயத் தவர்தேடி வைத்தகுண மலையே செம்மைப்



பூவேறு மம்மைபொரு வுந்திலத வதியார்பின் போந்த வாய்மைக்
காவேயென் கண்மணியே கருணைபுரிந் தாளுதியென் கருத்தினுனே. (உ)

ஆனேறுங் கொடியுடையா னிடமாடுங் கொடியுடையா னன்பு நீடு
வானேயென் றனக்கருளா யமணழியக் கடன்மிதப்பில் வந்த வெஞ்சி
மானேயொப் பிகந்துயருந் திருச்சத்தி முற்றத்து மணிமிடற் றன்
றானேநல் லூர்க்குவா வெனவருளி யடிசூட்டத் தழைத்து ளானே. (ங)

துன்னுமனப் பேயொழிய நின்னடிமா மலர்ப்பத்தி தோய்ந்து மாயைக்
கெள்ளளித்துத் தனியிருக்கு மேகாந்த வாழ்வினர்த மேவல் செய்யு
முள்ளமுடையேனெம்மை யுடையாய்வெண் கோவணமே யுடையாய் வேதத்
தெள்ளியரா மப்பூதி யார்க்கருளிச் சிவம்பெருக்குந் திறத்தி னென்றே. (ச)

ஒன்றாகிப் பலவாகி யுயிராகி யுயிர்க்குயிரா யுலவு கின்று
னென்றுதை யென்றுரைத்த மாமுனியே யருள்புரியா யின்பம் வேண்டிக்
கன்றுப்பூர் கீழ்வேளூர் கலந்தவொரு தனிப்பதிகங் கனிந்து பாடிச்
சென்றுனே பலபதிய மப்பரெனுந் திருநாமஞ் சிறந்த கோனே. (ரு)

கோனேயெங் கோமானே திருவீழி மிழலைநகர் குறுகிப் பாடுந்
தேனேயின் பூறியுளந் தித்திக்குஞ் செங்கரும்பே திகழு மாழு
ரானேயென் றனையாளு மாசேநின் றனையடைந்தே னழிவில் சீர்த்தி
யானேபைஞ் ஞீலியா னளித்தபொதி சோறுணுதற் கன்பி லேனே. (சு)

இலதாகு மாமாயை யென்பர்சில ரதனுண்மை யெண்ணிப் பாரார்
பலகாலுந் தாய்பிரம மென்றுபொருட் டெனிபுளமே பற்றி யந்தோ
சலமேவு நிரயமுமி ழார்தமைமெய்ஞ் ஞானியர்தா மென்று சார்ந்தே
நலமேது மில்லாவென் றனையருளாய் வாகீச ஞானக்குன்றே. (எ)

குன்றேயை யாறதனிற் குலவுமொரு கயிலைவளர் கோலங் கண்டு
நின்றேநற் றேமொழியி னிலவுபதி கங்கள்பல நிகழ்த்தி யுள்ள
மொன்றேசெந் நெறிநிற்ப வொழுகுமருட் டலைமையுடை யொருவ னேநா
னென்றேநின் னடிமலர்ப்போ தணிகுவனென் முடிக்கணியா யெம்பிரானே.

எம்பெருமான் சம்பந்த மாமுனிவ னுளமகிழ விணங்கி யன்றேன்
செம்பதுமத் துணைப்பதமே முத்திநலஞ் சேர்க்குமருட்செல்வி வாய்ப்ப
வும்பர்களுந் துதிபரவ வுயரடிமைத் திறமுலகுக் கொழுகிக் காட்டும்
அம்பொன்மணி யேயருளாய் தாண்டகவே ரிசைகளவின் றமர்ந்தபேறே. ( )

பேறேபெற் றவர்க்கடியேன் பெறவருளாய் மெய்ஞ்ஞானப்பெரியர் சூழு
மாறேயந் தண்புகலூ ரடைந்தவரெ கொளுமழவார மருங்கை தாங்கிக்
கூறேயு மம்மையிடத் தானிடமே கூடுமருள் குறுகு மப்போ
நீறேயா நந்தமயத் தெண்ணுறுமே னெனும்பதிக மியம்பி னானே. (௧0)

நானெனதென் றழுன்றலையு நாயினேன் றனையாள நயந்த சீல
மோனகுரு வேயன்பர் முழுமுதலே முடிவிலருண் மூர்த்தியேமெய்ஞ்

ஞானமணி யேசைவ மணியேசிந் தாமணியே நவிந்து நாளுந்
தீனனென வாடுற்றேன் கண்கலக்கந் தீர்த்தருளொந் திருவினனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

## ஆளுடைய நம்பிகள் வாழ்த்து.

ஐந்தாவது பதிகம்.

பொன்னுருஞ் செஞ்சடைப் புண்ணியனு மருட்டுறையிற் போந்து பித்த
னென்றுமெய்ம் மொழிகூறித் திருப்பதிக மியம்பியரு ளெந்தா யுன்னை
யெந்நாளு முவந்தேத்துந் தவம்பலிக்கப் பெற்றேனிக் கேழையே னென்
முன்னாளிற் செய்ததவ முடித்தபடி யன்றியிது மொழிவ துண்டோ. (க)

உண்டோவிவ் வுலகிலொரு தெய்வமுனை யன்றியெனை யுடையா யுன்னைக்
கண்டோமெய் யன்புநிறைந் திடுமெனக்கு நின்புகழைக் களித்து கேட்ட
துண்டோத நீபகர்ந்த மறையுளந்தா னுருகுமென துரைகள் சோரும்
பண்டோநான் செய்ததவ மளப்பரிது பாவலர்கள் பரவுந் தேவே. (உ)

தேவேசங் கிலியென்னுந் தேவிமகிழ்ந் திடுமெங்கள் சிவமே யுன்னை
நாவேறு நலத்தாலிந் நாள்வேண்டிப் பாடியரு ளயந்தேன் ஞானக்
கோவேயென் குணக்கடலே கோமளமே பரவைமணங் கொண்டாய் செய்ய
காவேயென் கற்பகமே கருணைவழிந் தொழுகுமருட் கண்ணினனே. (௩)

நாவனென்று மகந்தையிரிந் தோடவருள் கண்டாயெந் நாளு முன்னைக்
கோனென்னுந் தலைமைவகித் தன்புசெயு மருணெறிதான் கூடலாலே
யேனென்று வருஞ்சித்தி பலவுமிதந் திலக்கியமா விசைப்பர் மேலோர்
மானென்னும் பெருமிழலைக் குறும்பர்தமை யன்பருள மன்னினனே. (௪)

மன்னுபதி மறைவல்லோர் ஞானமொரு நான்கென்ன வழுத்தக்கேட்டுந்
துன்னுமிரு ஞானமுறைத் தலமந்து வினைப்போகந் துய்ப்பர் மேலோர்
சொன்னபடி யுங்கேளா ரவர்பாவ முரைப்பரிது சுருதி நான்கும்
பன்னுபுகழ் படைத்தவிசை ஞானியெனுந் தாய்மகிழும் பாவினனே. (௫)

பரிவகலே யையர்கோன் றூதைவிர்த் தாண்டருளும் பரமே வேதச்
சிரமிலகு முழுமுதலே நாயடியேன் பவந்தொலைக்குஞ் செல்வ மேயென்
குருவெனவந் தொளிர்ஞான விளக்கேமெய் யின்பநிலைக் கோலமேநின்
பரமடியே னல்லதுவே றில்லையிது சரதமருட் பாங்கினனே. (௬)

பாங்கினிலோங் கியஞானங் கடந்தொளிரு மெய்ஞ்ஞான பானுவே நின்
பாங்கினில்வந் தடைந்தேனென் றுயர்களையா யென்றுருகிப் பாடி யாடி
யிம்குணருள் பருகியிறு மாந்திருக்கும் வாழ்வருளா யென்று மோனந்
தாங்குசிவன் றனைத்தாது விடுத்தாடல்கண் டருளுஞ் சகச வாழ்வே. (எ)



வாழ்வனைத்துந் தருஞான வள்ளலே வன்றொண்ட மணியே யென்னைச்
சூழ்வினைக ளகலவருள் பாலிக்குந் தனித்துணையே தூரிய மேயென்
னூழ்வலியோ மிகப்பெரிது கலங்குகின்றே னுதவினு லுடையாய் நான்மூப்
பாழ்கடந்த பரவெளியி னடமிடுநின் பாதமலர் பரவு வேனே (அ)

பரவைமகிழ்ந் திடவாற்றி லிட்டபசும் பொன்னதனைப் பரிந்து தேடி
யரவுமிது திருக்குளத்தி லெடுத்தளித்த வாய்மையுளத் தோர்ந்து மோனம்
விரவுசிவ ஞானியர்தஞ் சிந்தைகவர்ந் திடுநின்னை வேண்டி நாயே
னிரவுபக லகலாது வழுத்துகின்றே னுயிர்க்குயிரா மின்ப வாழ்வே. (௯)

இன்பமொடு துன்பமொரு வினர்வாழ்த்தும் பரவெளியே யேந்த லேமெய்
யன்பர்தவப் பயனுரு மாறுமேத யருட்கடலே யரசே சேரர்
நின்பெருமை சிவன்கூறக் கேட்டன்றோ வந்தடைந்து நேய ரானார்
என்பதுமே பலகாலு மெண்ணியுள முருகுமெனக் கினிய தேவே. (௰)

இனியபொரு ளியலதிற் கில்லையிது நின்னமிர்தற் கெதிர் மாற்றந்தா
னினியுமிலை முன்னுமிலை யிப்போது மில்லையெனு மெண்ண மேவிட்
டினைவழுத்தும் பெருவாழ்வுந் தலைப்பிறவார் பெருக்கியுள முருகு கின்றேன்
புனிதனமர் கயிலையிப மூர்ந்துசெலுந் தனிவாழ்வாம் பொற்பினனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

## ஆளுடைய வடிகள் வாழ்த்து.

ஆறாவது பதிகம்.

உலகவியல் கடந்தபர முத்தருளத் தகலாத வொளியே ஞான
நிலையுதவி நாயேன்றன் புன்மைதவிர்த் தருண்மோன நெறியே பாசங்
கலையவடி யாரிதயங் கலந்தினிக்குந் தேனேயென் கண்ணே முத்திக்
கெலையெனுநின் பாதமல ரெண்ணுகின்றேன் வாதவூ ரெந்தா யெந்தாய். (க)

என்றாயுந் தந்தையுநீ யென்றிறுமாந் தெஞ்ஞான்று மேழையே நான்
குன்றாத வாய்மைதருஞ் சைவமணங் கொண்டிருகை கூப்பி யெங்கு
நின்றாலுங் கிடந்தாலு நடந்தாலும் புணர்ந்தாலு நீங்கி னாலுஞ்
சென்றாலும் பலதுறையில் வாதவூர் மணியுன்னைச் சிந்திப் பேனே (உ)

சிந்தமலந் திருவுள்ளஞ் செய்தருளுந் திருவேயென் செல்வ மேமுன்
வந்துகுருந் தடியிலருள் வள்ளலுப தேசமொழி வழங்கத் தென்னன்
றந்தநிதி யாவுமரன் றனக்காக்கிப் பாமாலை சாற்றுநின்பாற்
சிந்தைகுடி கொள்ளுமயல் செல்லாது பெருந்துறையிற் செழிக்குந் தேவே.

தேவேபாண் டியன்சான நரிகளெலாம் பரிசெய்து திரட்டிவந்த
கோவேயின் பரியாவும் பழையபடி நரிசெய்து கூவியோட
மாவேதம் புகழவிளை யாடல்புரிந் திடுமெங்கண் மருந்தே மன்று
ளீவேறு சிவன்வேறு காணாத வகைகண்டேன் நிகம வாழ்வே. (௪)

நிகமநிலை யாகமநன் னிலைகடந்த † வாசகமெய்ந் நிலையை நாடி
யகமகிழு மன்பர்தமக் கன்புசெயு மருநிலைநா யடியேன் பெற்றிங்
கிகபரங்க ளிகந்துநினை யேத்துபெரு வாழ்வெய்து மின்ப மேவிட்
டெகங்கள்பல கடந்தாலு மழிவில்பெருந் தகையாயென் றன்று வேனே. (௫)

† திருவாசகம்.

உன்னுவதொன் றுளறுவதொன் றுநற்றுவதொன் றுயுலக ருறுதி தேடி
மன்னுபல வழிநாடி மாய்வரவ ரெவ்விதநின் மகிமை காண்பார்
சொன்னமறை யாகமத்தின் றுணிவறியார் சிவனருளிற் றோயா ரென்னே
பன்னுவர்வீண் வார்த்தையொரு பெண்ணமுதம் வார்த்தைசொலப் பண்ணி
[னோனே. (௬)

பண்ணுமொலி யும்போலப் பழமதுவும் போலவருட் பானீ தானு
நண்ணுசிறி யேன்றானு நிற்குதிலே யாகுமென நவிலும் வாய்மை
யென்னுவதல் லாலுண்மை யெப்படியோ கண்டுசுக மெய்துவேனென்
கண்ணின்மணி யேவாத வூர்மணியே மனவெளியிற் கலக்க வாழ்வே. (௭)

கலங்குமெனை யருளாத கருணையிருந் தென்செயவென் கருத்தில் வைகு
நலம்பெருகு நாயகமே புத்தவிரு ளுடைத்தோட நாடி மொன்றே
குலங்குணமா தின்கடந்த குறியிறந்த பரம்பொருளே கோதின் ஞானந்
துலங்குபெரு வடிவேநான் மறைமுடிவே யன்பருளந் துன்னி னோனே. (௮)

நான்கெட்ட வாபாடி யென்றருணின் போதமுள நண்ண வாலே
வான்கெட்டு மாருதமாய்த் தென்னுழுயர் வாக்கியத்தின் வாய்மை கண்டேன்
தேன்கட்டுஞ் சோலைதிகழ் வாதவூர் வந்தருளுஞ் சிவமே யுன்னை
நான்கட்டும் வகையருளி னுய்ந்திடுவேன் சைவர்தொழும் ஞான மூர்த்தி. (௯)

ஞானமோ ஞானத்தால் வழிபடுத லினையோக நாடி லுள்ள
மான்கர ணாந்தன்னால் வழிபடுதல் கிரியையோ வைம்பி ரண்டா
மூனமிலிந் திரியத்தால் வழிபடுதல் சரியையென வுயிர்தான் வைகு
மீனமறு தேகத்தால் வழிபடுதல் வாதவூ ரெம்பி ரானே. (௧0)

எம்பிரா னெனக்காகச் சிவபிரா னடிதாங்கி யெங்கு மேவித்
தம்பிரான் றானெனலுந் தலைமைவினக் கினனெங்கள் தானுமே நின்
செம்பவள வாய்மலர்ந்த வாசகத்தே னுண்டன்றோ திருமா லாதி
யும்பர்களும் பெரும்பேறு பெற்றாரெம் முடையவரு ளுடைய தேவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

இனையதுதிகளை மெய்யன்போடு அநுஸந்தித்து வருவார்க்கு எவ்விதவிடருந் தொடராதென்க. ஆசாரியமணிகளைப் பதிவர்க்கமாகத் துணிந்து கூறுந் துதிகளிவையாதலால், இவைகளுக்கு ஏற்றமதிகமென்றறிக. சிற்றம்பலநாடிகள், அருணகிரிநாதர் சிவப்பிரகாசசுவாமிகள், சிதம்பரசுவாமிகள் முதலிய சிவாநுபூதிமான்களது செந்நெறியையே யாம் தழுவியுரைத்தேம். இந்த நன்னெறியினில்லாப்பொல்லார் எமக்குப் புல்லாரென்க. சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள், பதினோராந்திருமுறையிலடங்கிய சம்பந்தர்திருவந்தாதி, சம்பந்தர் சண்பைவிருத்தம், சம்பந்தர் மும்மணிக்கோவை, சம்பந்தர்திருவுலா, சம்பந்தர்கலம்பகம், சம்பந்தர்திருத்தொகை, திருநாவுக்கரசுசுவாமிகள் ஏகாதசமாலை முதலிய சமயாசாரியர்களது ஸ்தோத்ரவைபவங்களை இனிதாய்ந்தவர்க்கே யாம்கூறியவுண்மை விளங்கும்.



இவ்வருட்பாக்கள் வெகு புண்ணிய முடையார்க்கே வைப்பாயுள்ளன. இவற்றுள், மும்மணிக்கோவையில் "காழிநாடன் கவுணியர்தலைவன் - மாமழைநோக்கி மலைமகள்புதல்வன்" எனவும், "மலைமகள்புதல்வ—கலையினுவ" எனவும் நம்பியாண்டார் நம்பிகள் நவின்றருளியவாய்மையை நாடினர்க்கே கேடில்வாழ்வுண்டாமென்க. இவ்வரியநலங்கண்டே "ஆளுடையபிள்ளையார் வெண்பாவந்தாதி" என வோர் பிரபந்தஞ் செய்து யாமுங் களிகூர்ந்தேம். இங்கனமிற்க.

சைவபத்ததிகளுட் சிறந்துவிளங்குவது அகோரசிவாசாரியரது பத்ததி. இந்தப்பத்ததிக்காரர் சைவர்கள் கற்கவேண்டிப் பலகாவியங்களும், நாடகாலங்கார சாஸ்திரங்களுஞ் செய்திருக்கின்றனர். இவைகளில், ஞாநஸம்பந்தனையே தலைவனாகவைத்துப் பாடியிருக்கின்றனர். இவை வடநூல்கள். வடநூலாரும், தென்னூலாரும், எந்நூலாரும் ஞாநஸம்பந்தன் பெரும்புகழையே கற்றுப் பிழைத்தற்குரியாரென்பது கூர்ந்தமதியினர் கொண்டுகுணமெய்துவரென்க. "உறவும்பொருளுமொண் போகமுங்கல்வியுங் கல்வியுற்ற-துறவுந்துறவின் பயனுமெனக்குச் சுழிந்தபுனற்-புறவும்பொழிலும் பொழில்சூழ்பொதும்புந் ததும்புவண்டி-னறவும்பொழிலெழிற் காழியர்கோன்றிருநாமங்களே" என்று ஸ்ரீநம்பியாண்டார்நம்பிகள் தமது திருவந்தாதியில் அருளிச்செய்தனர். இவ்வாறு எண்ணியெழுதுவதென்று லெம்பெருமக்கள்புகழ் ஏட்டிலடங்குமோ ? திருவருளே கண்ணாகக்காணுநர்க்கே அது கைகூடுமென்க.

இதுகாறும் விளக்கிய வாய்மைநலத்தால் ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தக் கடவுள்முதலிய பரமாசாரியர்களது பிரபாவம் இனிது வியக்தமாகியது. ஆசாரியர், பரமாசாரியர்கள் என்றபிரயோகங்க ளிவர்க்கே சொந்தமென்க, ஈசுவரன், பரமேசுவரன் என்னுந் திருநாமங்கள் போல்வனவிவை. ஈசுவர - பரமேசுவர - மஹேசுவராதிநாமங்கள் சிவனுருக்கன்றி ஏனையோருக்குச் சொந்தமாகாதவாறு ஆசாரிய-பரமாசாரியத் திருநாமங்கள் எம்பெருமக்கள் நால்வருக்கன்றி ஏனையோருக்குச் சொந்தமாகாவென்க. இவ்வாசாரிய மூர்த்தங்கள் சிவனரது தக்ஷிணாமூர்த்தம்போல்வனவாம். ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியாவார் விஷ்ணுவாதி தேவர்களாலும், வஸிஷ்டாதிமுனிவர்களாலும், ஏனையாவராலும் வழிபடத்தக்க முதலாசிரியராயினவாறன்றோ பரமாசிரியர் நால்வர்களும் அந்த ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியினது அவதார விக்ரஹங்களாக இனிது விளங்கி யாவராலும் வழிபடத்தக்க தனிமுதல்களாக வெழுந்தருளி யிருக்கின்றனர்? இவருள், எங்கள் காழிப்பிரான் பெரும்புகழை யெடுத்தோதின், அவரது திருவடியர்ச்சனைக்கு உபயுக்தமாகிய அஷ்டோத்தரவிம்சதிநாமாவளியே போதும். அது வருமாறு:—

ஸ்ரீ

சிவோரக்ஷது.

க. ஓம் ஜ்ஞாநஸம்பந்தகுரப்யோநமஃ
உ. ஓம் ப்ரஹ்மபுராபரிப்ருடாயநமஃ
ங. ஓம் பார்வதீஸ்தந்யபாயிநேநமஃ
ச. ஓம் ஸ்வப்ரஹ்மஜ்ஞாயாபாமூர்த்தயேநமஃ
ரு. ஓம் சிவபாதஹ்ருதயமுனிபுங்கவஸூநவேநமஃ
சா. ஓம் கௌண்டிந்யதிலகாயநமஃ
எ. ஓம் அமோதிஸம்பவாயநமஃ
அ. ஓம் ஸ்வபரப்ரகாசாயநமஃ
கூ. ஓம் ஸ்வயமேவாதிகதஸகலவித்யாகலாபாயநமஃ
க0. ஓம் த்ரவிடவேதப்ரவக்த்ரேநமஃ
கக. ஓம் ஜ்ஞாத்விஜ்ஞாநசக்ரவர்த்திநேநமஃ
க௨. ஓம் பரமதகளபகேஸரிணேநமஃ
கங. ஓம் சிவதத்த்தாளஹஸ்தாயநமஃ
கச. ஓம் முக்தாமயசதுரந்தயாநாதிரூடாயநமஃ
கரு. ஓம் சிந்ஹகாஹளாதிபிருதாவளியலங்க்ருதாயநமஃ
கசா. ஓம் பாண்ட்யராஜதேசிகாயநமஃ
கஎ. ஓம் பாண்ட்யஜ்வராபஹர்த்ரேநமஃ
கஅ. ஓம் க்ஷபணசாக்யாந்தகாரதபநாயநமஃ
ககூ. ஓம் ராஜகந்யகாரோகநிவர்த்தகாயநமஃ
௨0. ஓம் வைசயகுமாரகரடநிர்ஹரணாயநமஃ
௨க. ஓம் நிஷ்பலதாலபலதத்வகாரிணேநமஃ
௨௨. ஓம் வாக்ஸந்தாரிதநாரயேநமஃ
௨ங. ஓம் வேதவனக்ஷேத்ரகவாடசிசாதககாரிணேநமஃ
௨ச. ஓம் அஸ்திஸாத்ரிகந்யகாயநமஃ
௨ரு. ஓம் விஷ்ணுச்சிவஸாநப்யதாயிநேநமஃ
௨சா. ஓம் சிவதமாராயநமஃ
௨எ. ஓம் ஸத்யோநிர்வாணதீக்ஷாகர்த்ருணேநமஃ
௨அ. ஓம் ஸர்வமோக்ஷப்ரதகல்யாணஸுந்தராயநமஃ

திருச்சிற்றம்பலம்.

---



தாம். இவரினுமுத்தவனாகிய பாஞ்சராத்திரிக்குப் போதும் போதுமென்று சொல்லும்படி. சிவபாரம்யபிரதரிசினி, சிவதத்வசிந்தாமணி, சிவாதித்யரத்நாவளி, சைவசூளாமணி என்னு நூல்களின்வழி அதிகமான ஸக்மானங்கள்செய்து திருப்திபடைந் திருக்கின்றேமாகையாலிங்கேயொன்றும் அவன் விஷயத்தில் யோசிக்க விடமுண்டாகவில்லை. ஏனைய சமயிகள் பிரபாவங்களைச் சிவஞான சித்தியார் பரபக்கமுதலியவற்றுற் செவ்விதி னறியலாமென்க. இதுகாறும் பிரஸ்தாபித்துக் கடிந்த ஆபாசஞானங்களேயன்றி வேறு ஆபாசஞானமு முண்டாகையால், அதையுங்கொஞ்சம் விசாரித்துப் பரிஷ்காரப் படுத்துவாம்.

திரிபதார்த்த பிரதிபாதக போதமாகிய சைவசித்தாந்த வுணர்ச்சி ஸ்கவர முபயனும் அதிகாரிகளைப்பற்றியே யீண்டு விசாரிப்பதாம். இந்தச் சைவசித்தாந்தம் சரியை - கிரியை - யோக - ஞானங்களென்னு நாலுவிதமான சிவபணிகளைக் கொண்டதொன்றும். இந்த நால்வகை யநுட்டானமுடையவருஞ் சைவரேயாவர். சிவனடியாரென்னப்படு மிவர்கள் ஒருவரை யொருவர் சிவமாகவேகொண்டு வழிபடுவது இவருக்கின்றியமையாத முக்கிய கடமையாம். நால்வகை யநுட்டாதாக்களும் வேடத்திலுஞ் செய்கையிலு மொத்திருப்பாரானகையால் ஒவ்வொருவருந் தாரதம்பம் விசாரியாது சைவ வேடம் பூண்ட யாவரையுஞ் சிவ பாவனையாகவே வழிபடல்வேண்டும். சிவஸாந்நித்யமுண்டாகுமிடங்கள் தாவரமாகிய சிவலிங்கப்பெருமானிடத்தும், ஜங்கமமாகிய சிவனடியாரிடத்துமே யென்று சைவ நூல்கள் கூறுகையால் இரண்டிடங்களுஞ் சிவபாவனையே யதிகரித்தல் வேண்டும். சிவனடியார்களிடத்தில் யோக்யதை யில்லாதவழி அவரை வழிபடுதல் கூடாமையால் அதையேயன்றோ பரம்விசாரிப்பதெனின், சிவலிங்கப்பெருமானிடத்தும் யோக்யதை யுண்டோவில்லையோ வென்று உடைத்தன்றோ பின்னர் பார்க்கவேண்டி வரும்? உடைபட்டுக் கல்லாக வெளிப்படுஞ் சிவபிரானிடத்தில் அன்புசெய்ய யோக்யமுண்டாகாமையால் சிவாலய சேவை வேதாகமங்களில் விதித்தது அவலமாக வன்றோ முடியும்? இப்படிப்பட்ட வீண் விசாரஞ் செய்யத் தலைப்படு மொருவனைக்காட்டிலும்* அயோக்யர்கள் வேறுகிடைக்க மாட்டார்களாகையால் தன்னுடைய தோஷத்தையே முதலிலொழித்துக் கொள்ளவேண்டியது. தன்னிடமுள்ள குற்றமொழிந்தால் தான் நிர்த்தோஷியாய் விடுகிறனாகையால் வேற்றிட

த்து மலினங்கள் தனதுள்ளத்திற் பதியவிடமிராது. துரியோதனன் தன்னைப்போலவே யுலகமுழுதும் பாவிகளே அதிகரித்திருக்கின்றார்களெனவும், தருமநந்தனர் தம்மைப்போலவே யுலகமுழுதும் நல்லவர்களே அதிகரித்திருக்கின்றார்களெனவும் பிரஸ்தாபித்த வுண்மை ஸ்ரீமகாபாரதத்திற் கூறப்பட்டிருக்கும் விசேடத்தானுமறிக. அன்றியும், ஏகலைவனென்னும் வேடன் துரோணாசாரியைப்போலொரு மரப்பாவை செய்துவைத்துக்கொண்டு அதனது அயோக்யதையை விசாரியாது அதையே துரோணராகப்பாவித்து வழிபட்டுவந்த விசேடத்தால் ஆசாரியராகிய துரோணரிடங் கற்கவேண்டிய வரிய வித்தைகளை யெல்லாங் கற்று அதிக ஸம்பன்னனானதன்றியும், மூலபுருஷராகிய துரோணாசாரியரை யோர்காலத்தில் காணநேரிட்டு அவர் விரும்பியபடியே குரு தட்சணையாகத் தனது கட்டைவிரலைத் துண்டித்து அவருக்குத் தத்தம் பண்ணினனென்பது முதலிய இதிகாசவிருத்தாந்தங்க ளநந்த முண்டாகையால் சிவனடியாரிலக்கணத்தைப் பரிட்சிக்கவேண்டுமென்பது கேவலம் அஸங்கதமாய்விட்டது. சேரமான் பெருமாணயனர் உழுமண் சுமந்துவந்த வண்ணானைச் சிவனடியாராகக்கண்டு வழிபட்டமையாலும், கலிக்கம்பநாயனர் - ஏனாதிநாயனர் - மெய்ப்பொருணயனர் முதலிய பரமஞானிகளெல்லாங் கேவலம் வேடங்களையே மெய்ப்பொருளென வழிபட்டமையாலும், இயற்பகைநாயனர்-மானக்கஞ்சாற நாயனர் முதலியோர் மனைவியைக் கேட்டவர்க்கும், மகளாரது கூந்தலைக்கேட்டவர்க்கும் வேடமாத்திரத்தானே மகிழ்ந்து அங்ஙனங்கேட்ட வயோக்யதையை நாடாமல் கேட்டபடியே கொடுத்தருளினமையாலும் சிவனடியாரைப் பரிட்சித்துப் பார்த்தே வழிபட வேண்டுமென்பது செல்லாது. ஒருவரை யொருவர் பரிட்சிக்க முயலுங்கால் பரிட்சிக்கத் தொடங்குபவன் தன்னைப் பரமயோக்யனாகவும், தன்னிடத்திலெல்லாச் சைவநலங்களு நிரம்பி யிருப்பதாகவு மதித்தே வெளிப்படுவதால், தன்னிடத்திற் றன்னை யறியாமலே குடிகொண்டிருக்கும் அமங்கலங்களை யெல்லாம் யோசிக்கமாட்டான். அப்படியே பரிட்சிக்கப் படுபவனுங் கொண்டிருப்பானாகையால் அவனுக்கு இவன் குற்ற முடையவனும், இவனுக்கு அவன் குற்றமுடையவனுமாக முடிந்து ஒருவரை யொருவர் துவேஷிப்பதே பயனாக முடியுமன்றிக் குணமுண்டாவது கஷ்டம்! கஷ்டம்!! சிவனடியாரிலக்கணம் விசாரிக்கத்தொடங்கிய பலவித்தி யுடனே கைகூடி விடுவதால்,



நிர்விசாரமுடைய சாதுக்களே யன்றோ வேடமாத்திரத்திற் குழைந்து அன்பு வழியிலொழுகுஞ் சிவனடியாராகவங்கீகரிக்கத் தக்கவராவர்? அன்பு என்னும் அரியபேறு கிடைக்கப் பெறுமையே பலநிமைகளி லொருவன் செறித்தழியவிடஞ் செய்கின்றது. சைவவேடம்பூண்டு சிவநேசமிகுந்தவனாக வெளிப்பட்டு பாவரானு நன்கு மதிக்கப்பட்டவனாகிய வோர் சைவன் தனது பெண்டு பிள்ளைகள், தாய்தந்தைகள், பிராதுரு பந்துவர்க்கங்கள் முதலிய தேகஸம்பந்திகளிடத்தில் எந்தச் சைவ நலங்களைப் பரிட்சித்தோ அவர்களை யுயிர்க்குயிரா யிருந்து ஓம்புதல் செய்கிறான்? எவ்வளவு தோதனங்களவரா லுண்டான விடத்தும் அவற்றை யோர் பொருளாகப் பாராட்டாமல் அவரிடத் தான் வைத்திருக்கும் அன்பு அல்லது பாசம் காரணமாகவே யன்றோ அவர்களைத் தன்னினு மினியவராகக்கொண்டு உபசரித்தும், போஷித்தும் வருகிறான்? உண்மையான சிவனடியார் வந்து தன்னை யொன்று கேட்பினுந் தனது மைந்தர் மனைவிகளுக்குக் கொடுத்துச் சேமித்தாலன்றோ அன்னோர்க்கு ஏதாவ தியன்றதை யுதவுகின்றவனாகிறான்? பாசங் காரணமாகவேயன்றோ மைந்தர் முதலினோரைச் சிவனடியாரினு மேலாகப்பார்க்க நேரிடுகின்றது? இந்த நியாயத்தால் சிவவேடத்தாரைப் பரிட்சிக்க முயல்வதெல்லாம் அன்பில்லாத குறையென்றே ஏற்படுகின்றது. துட்டுவிசாரமில்லாமல் விபூதியும், உருத்திராக்கவடமும், பில்வ முதலிய பத்திரங்களுங் கிடைப்பதுகொண்டு சைவவேடம்பூண்டு சிவபூஜையின் முதிர்ச்சி சைவப் பழமெனத் திரிவது கொண்டே தன்னைச்சிவனடியாராக வொருவன் மதிப்பது கூடாது! கூடாது!! தன்னை மதிப்பது மாத்திரங் கூடாதன்றி யேனையவிடங்களை மதிப்பது யுக்தந்தான். இப்படியே யொவ்வொருவருந் தம்மை மதியாமலும், ஏனையவிடங்களை மதித்தும் வழிபட்டு வருவதுண்டெனின், யாவரும் நிரகங்காரிகளாகிக் குணப்படுவார்களன்றோ? சாத்தன் தன்னையிழித்துக் கொண்டு கொற்றனை மேலாகமதித்து வழிபட்டு அன்பு பாராட்டுகிறபடியே கொற்றனுந் தன்னை யிழித்துக்கொண்டு சாத்தனை மேலாக மதித்து வழிபட்டு அன்பு பாராட்டிக் குணப்படுவதிலென்ன தடையுளது? முடி[illegible] வன்பே சிவவேடத்தை வழிபடுதலுக்குக் காரணமென் றேற்படுகையால் சிவவேடத்தாரைத் தாழ்தயமாகக் காண்பவர் அன்பில்லாத பாவிக ளென்றே நிச்சயிக்கவேண்டியது. அன்பில்லாமல் எவ்வளவு நூல்களைக் கற்று ஒழுக்கத்தோடு தவஞ் செ

சிவ வென்று கதறினுலும், நாமெல்லாமிருந்து சிவபூஜை செய்தாலும் என்னபலனுண்டு ? இத்தனையும் பெருமைக்கும், பேருக்குஞ் செய்வதாக முடியுமேயன்றி வேறில்லை. சிவவேடம் பூண்ட வொருவரை அவரைப்போற் சிவவேடம்பூண்ட மற்றொருவர் வந்தனம் புரிந்த காலத்தில் அதை யேற்றுக்கொண்டவர் பிரதிவந்தனஞ் செய்வது அவசியம். ஒருவர் அன்பு பாராட்டியபடியே மற்றொருவரும் அன்புபாராட்டவேண்டிய வுரிமையால். ஒருவேளை பிரதிவந்தனஞ் செய்யாதொழியின், அது அங்ஙனஞ்செய்யாதவரது அன்பின்குறைவேயாமன்றி முதலிற் செய்தவருக்கு உண்டாகுந்தாழ்வு யாது? இவர் அவரை வழிபட்டது சிவவேடம் பாராட்டியே யாகையால் அங்ஙனம் பாராட்டி வழிபட்ட நலங்கைக்கூடிச் சிவப்பிரஸாத முண்டாவதினு மென்னதடை ? இவ்வுண்மை தேராது தான்செய்த வந்தனத்துக்குப் பிரதிவந்தனங் கிடையாதபோது பெருந்துக்கமுற்று முன்வந்தனம் பண்ணியதாமே பின்னர் பலவாறு நிந்தித்துழல்வாரெனின், அவரை நாம் என்னென் றழைக்கலாம் ? அன்பு காரணமாகாமல் பெருமை காரணமாக வேடம் போட்டுக்கொண்டதனாலன்றோ வீண்துக்கத்துக் கிடஞ்செய்தது ? கேவலம் வேடமாத்திரத்தானும், அத்துடன் செயல்குணங்களானும், அவற்றோடு நிச்சயம்-அநுபவம் என்னும் ஞானவிசேடங்களானுஞ் சிவனடியார் தன்மை வெளிப்படும். இவை யொன்றின்மேலொன்றேறிய படிகளாக வேற்பட்டமையால் ஒன்றின் பின்னொன்று பரிபாகவிசேடத்தா லொருவனுக்குச் சித்திக்குமென்பது முண்மை.

இவ்வரிய நியாயங்களால் சிவவேடத்தைக் கண்டமாத்திரத்தில் ஒருயோசனையுஞ் செய்யாமல் ஒருவரையொருவர் சிவமாகக்கொண்டுவழிபடவேண்டுமென்பது சாதிக்கப்பட்டது. (சங்கநிதிபதுமநிதியிரண்டுந்தந்து தரணியொடுவானாளத் தருவரேனு, மங்குவாரவர் செல்வமதிப்பேமல்லே மாதேவர்க் கேகாந்தரல்லராகில், அங்கமெலாங் குறைந்தழுகித் தொழுநோயரா யாவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங், கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகி லவர்கண்டீர் யாம் வணங்குங் கடவுளாரே) என்னும் பரமாசாரியர் திருவாக்கின் விசேடத்தைக் கண்டபின்னரும் அடியார் வேடம்பூண்டொழுகும் பெரியோரிடத்து எங்ஙனே தாரதம்யங் காண்பது கூடும்? இழிந்த குலத்தவரிடத்திலுந் தாரதம்யங் காணாது வழிபடவேண்டுமென்று வெளிப்பட்ட பிரமாணத்தை யநுசந்தித்தபின்னர் நானே யுயர்ந்தஜாதியெனவும், என்



னிற் றாழ்ந்தவரே யேனையஜாதியினரெனவுங்கூறித் தன்னினத்தவரைமாத்திரமே தழுவி யுபசரித்தும், ஏனையவருணத்தில் வந்தவர் எவ்வளவு சுத்தர்களாயிருப்பினும் அவர்களைப்பொருளாகமதியாமல் ஜாதியையே முக்கியமாகப்பாராட்டியும் அவலமார்க்கத்திலுழன்று தன்னையும், தன்ஜாதியில்வேடம்போட்டுத்திரிகின்றவரையுமே யுயர்ந்த வடியார்களெனவும், சைவரெனவுங் கூறிக்கொண்டு திரிகின்றவர்கள் சைவர் ஆகார்! ஆகார் !! திருவிளையாடற் புராணத்தில் அந்தணர்வீதி, அரசர்வீதி, வணிகர்வீதி, வேளாளர்வீதி என்னும் பிரிவால் நால்வருணத்தவர் சிறப்புங்கூறப்பட்ட பின்னர் சைவர் வீதி என்று வேறுபிரித்து யாவர் சிறப்புத்தோன்றவோ கூறப்பட்டுள்ளது? அவர்க்குச் சாதியென்னை? சிவதீக்ஷையடைந்து சம்ஸ்காரிகளாய் விளங்கும் எல்லாச்சாதியினரு மென்பதே துணிவாகையால் சிவனடியார்களிடத்தில் சாதிநலம் பாராட்டுவது கூடாதெனவேயன்றோ ஏற்படுகின்றது? ஏனையஜாதிகளைநோக்க வேளாளஜாதியிற்றானே சைவநலமதிகரித்திருப்பதனால் அவரையே சைவர் என்று மிகுதிபற்றி யுலகம் வழங்கிவருகின்றது. வேளாளராவார் சுத்தகுலத்தவர் நால்வரு ளொருவராகையால் அவர்பால் அன்னியஜாதி நிந்தை விசேடிப்பதின்று. அன்னோர்பேரை யிரவலாகக்கொண்டு உயரவேண்டி முயல்கின்றவர்களே நிந்தித்துழலா நிற்பர். இவ்வுண்மைகளாலுஞ் சாதி யெம்மட்டில் நிலைபெறுமென்பதை யோசிக்கவேண்டியது. இன்னும் விசாரிக்கிற் சாதியென்பது தேகத்தை யபிமானித்ததொன்று. சமயமென்பது ஆன்மலாபத்தைப் பயப்பதொன்று. நான் ஜாதியி லுயர்ந்தவன் என வொருவன் வெளிவரினு மவன் றன்னிலுயர்ந்தஜாதி வேறுகிடையாது என்றுசொல்ல விடமில்லை. சுத்தகுலஸ்தராகிய முதல் நால் வருணத்தவரு மொருவரிலொருவர் தாழ்ந்தவரென்பது யாவரு மொத்துக்கொண்ட விஷயமாகையால். எவ்வளவுமேலாகத் தன்னைப் பிரஸ்தாபித்துக் கொண்டபோதிலுஞ் சூத்திரன் வைசியனுக்குக் கீழாகவே தானடங்குவதல்லது அதிக்கிரமிப்பதில்லை. எவ்வளவுமேலாகத் தன்னைப் பிரஸ்தாபித்துக்கொண்டபோதிலும் வைசியன் க்ஷத்திரியனுக்குக் கீழாகவே தானடங்குவதல்லது அதிக்கிரமிப்பதில்லை. எவ்வளவுமேலாகத் தன்னைப் பிரஸ்தாபித்துக்கொண்டபோதிலும் க்ஷத்திரியன் பிராமணனுக்குக் கீழாகவே தானடங்குவதல்லது அதிக்கிரமிப்பதில்லை. எவ்வளவுமேலாகத் தன்னைப் பிரஸ்தாபித்துக்கொண்டபோதிலும் பிராமணன் ஞானி

க்குக் கீழாகவே தானடங்குவதல்லது அதிக்கிரமிப்பதில்லை. மேல் வருணத்தவர் சிறப்பே நிலையாதபோது இவரிற்றாழ்ந்த வனுலோமர், பிரதிலோமர் முதலியவர்களுடைய சிறப்பு எங்கே நிலைக்கும்? சமயமோவெனின், ஒவ்வொன்று விசேடமே பெறும். சைவஸித்தாந்திமுதல் லோகாயதனீறாக வொருவருந் தங்கள் சமயத்தை மற்றொரு சமயத்துக்குத் தாழ்ந்ததாக வொப்புக்கொள்ளார்களாகையால். ஒவ்வொருவருந் தங்கள்தங்கள் சமயமே யுயர்ந்தசமயம் எனக்கொண்டிருத்தலால் சமயத்தை யபிமானித்தல் ஒருவாறு பொருந்தும். தனக்குமேலிட்டசமயம் கிடையாது என்று துணிவுகோடலின். இங்ஙனமன்றி, தனக்குமேலொருஜாதியுண்டென்று கொண்டபின்னர் ஒருவன் ஜாதியகங்காரங்கொள்ளலா லென்னபயன்? உயர்ந்தஜாதியுடைய வொருவனை நோக்கத் தானே தன்னைத் தாழ்ந்தஜாதியுடையனாக வங்கீகரித்தடங்குவதால். தேகத்தை யிடமாகக்கொண்ட ஜாதிநல மத்தேகத்தோடே தானே யழியும். ஆன்மாவை யிடமாகக்கொண்ட சமயநலம் மேலுக்குமே லபிவிர்த்தியே பெறும். சமயம் என்பது, காலம்-பருவம் என்று பொருள் தரலால் அதை யபிமானித்தல் உசிதமென்று அப்பதத்தினடியாகவே சித்திக்கின்றது. புறப்புறச்சமயத்தினின்றும் புறச்சமயத்தினும், புறச்சமயத்தினின்றும் அகப்புறச்சமயத்தினும், அகப்புறச்சமயத்தினின்றும் அகச்சமயத்தினும், அதினின்றும் அதீதசமயத்தினும் புகுந்து ஒன்றுக்கொன்று சாதகமாகமுடிந்த சமயங்களைப் பருவபேதத்தா லொருவனபிமானித்தல் பெரும்பயனாகவே முடிந்தது. கறுப்புநாயை வெள்ளைநாயாக்க முடியாததுபோல விழிந்தஜாதியிற்பிறந்தவ னுயர்ந்தஜாதியாக விடமில்லை. கேவலங்கடையனாகிய லோகாயதன் புத்தனாகவும். சமணனாகவும், வைணவனாகவும், சைவனாகவுந் திரிதலொரு பிறப்பிலேதானே கூடுமாகையா லுபகாரவடிவமாகிய சமயங்களை யபிமானித்தல் ஸாமஞ்சஸமே பெறும். உலகாயதனுக்கே யோகமுண்டாகிறபோது, ஏனையவுயர்ந்த சமயிகள் பிரயோசனமடைவரென்பது சொல்லவும் வேண்டுமோ? (அறுவகைச்சமயத்தோர்க்கு மவ்வவர்பொருளாய்) என்ற வசனத்தாலுஞ் சாதியைநோக்கச் சமயத்தினேற்றம் வெளிப்பட்டது. (விரிவிலாவறிவினார்கள் வேறொருசமயஞ்செய்தே-யெரிவினாற்சொன்னாரேனுமெம்பிராற்கேற்றதாகும்) என்ற பிரமாணத்தாலும் அது விளங்கும். எல்லாச்சமயிகளும் ஜாதியினுஞ் சமயமே யதிகமென்று கொண்டிருப்பதாலும், அங்ஙனஞ்செய்தலால் முடிவில்



சைவவிர்த்தியுண்டாவதாலும் ஜாதியைவிட்டுச் சமயத்தையபிமானித்தலே சால்புடைத்து. சைவராயுள்ள பலஜாதிமாக்கள் கூடி வாழ்கையில், அவர் பிரிந்து ஒருவர் ஜாதியை மற்றொருவரிகழ்ந்துபேசத் தொடங்குவரெனின் எங்ஙனஞ் சமயம் விர்த்தி யடையும்? சமய விர்த்திக்கு ஹானியுண்டு பண்ணுவதாகிய ஜாதியகங்காரம் அவசியம் உத்தமனுக்கு ஒழியத்தக்கதே! சமயக் கேட்டுக்குக் காரணமாய்முடிந்த ஜாதியேற்றம்பாராட்டுபவரைச் சமயாபிமானிகளென்று கூறுவதெங்ஙன்? இவற்றைச் சிந்திக்கின், ஜாதியை யபிமானித்தொருவன் றருக்குறல் குணமோ, அல்லவோ வென்பது விளங்கும்! விளங்கும்!! இதுகாறும் யாம் கூறிவந்த நியாய விளக்கத்தால், ஜாதியாசாரங்களை விட்டுவிடவேண்டுமெனவாவது, எல்லாம் ஓரே ஜாதியெனவாவது, ஜாதிபேதங் கிடையாதெனவாவது காலத்திரயத்தும் அமையாது. அந்தந்தஜாதியாரும், தங்கடங்களாசாரங்களிற்றுறாது ஒழுகவேண்டுமென்பது, தத்தஞ்சாதியுயர்வைத் தங்கண்மட்டிலே பாராட்டுவதன்றி யேனையஜாதிகளை யிழிவுகூறி மகிழ்தல் கூடாதென்பது எமது முக்கியகருத்து. ஜாதி குலம் பிறப்புகளையொப்பவே கல்வி, செல்வமுதலியவற்றால் அகங்கரித்தலுஞ் சமயவிர்த்திக்கு ஹானிதேடுவதாக முடிதலால் அத்தொடக்குகளினும் பற்றொழிந்த சுத்தராகவேண்டியது.

கல்வி, செல்வம், விவேகம் என்பவை தனித்தனி வேறுவேறு பொருள்களாம். இவைமூன்றும் பூர்வகன்மவிசேடங்களாலொருவனுக்குண்டாகுமன்றிவேறில்லை. அவரவர் வினைக்கீடாக விவற்றுளொன்றேனும், இரண்டேனும், இவைமூன்றுமேனுங் கைகூடும். இவைமூன்றுந் தீமைநன்மையென்னு மிரண்டிடங்களினு முதவியாகநிற்கும். தீமையினுதவியாகுங்கால் அந்தக்கல்வியுஞ் செல்வமும் புத்தியும் அவலமாகவே முடியும். நன்மையி னுதவியாகுங் காலவைமுழுதுஞ் சபலமாகவே முடியும். இதனா லிம்மூன்று மொருவனுக்குக் கைகூடப் பெற்றகாலத்து மிவற்றின் மேலாயதொரு சிவப்பிரஸாதமன்றோ சித்திக்கவேண்டி யிருக்கின்றது? அச்சிவப்பிரஸாதமுடையார்க்கு இவைவேண்டுமென்பது முசிதமன்று. நாத்திகனுக்குக் கல்வி, செல்வம், புத்தி இம்மூன்று மிருந்தால் அவன் என்ன செய்யமாட்டான்? சிவநிந்தையிற் பழுத்து உலகங்கெடச்செய்வானன்றோ? அப்படியே யூனமகம்தியருஞ்செய்வாரன்றோ? கல்வி வி

வேகங்க ளிருந்தும் அவை யன்னோர் மாட்டுத் தீமையே விளைத்தலால் கற்றவரென்று பிறரைப்புகழ்தலும், நான் கற்றவனென்று தற்புகழ்ச்சி செய்தலும் அவலமேயாம். (கற்க கசடறக் கற்பவைகற்றபின்-நிற்கவதற்குத்தக.) என்ற வுண்மை நிலையிற்பெயராது சிவநேசம் விடாது பற்றியொழுகுமேலோரையே கற்றவரென்றும், அறிஞரென்றுங்கொண்டு வழிபடுவர் மேலோர். (சாத்திரம்பல பேசுஞ் சழக்கர்காள் கோத்திரமுங்குலமுங்கொண் டென்செய்வீர், பாத்திரஞ்சிவமென்று பணிதிரேன், மாத்திரையி லருளுமாற்பேறரே.) எனவும், (வேதமோதிலென் சாத்திரங் கேட்கிலென், நீதிநூல்பல நித்தல்பயிற்றிலென்.) எனவும், (காலை சென்று கலந்துநீர் மூழ்கிலென், வேலைதோறும் விதிவழி நிற்பிலென்) எனவும் போந்த வருள்வாக்கியங்களால் ஜாதிநலம், விருதாகல்வி, வாசாஞானம், வெளிபாசாரமுதலிய வாபாசங்கள் கடியப்பட்டிருத்தலுங் கண்டுணர்க. ஆதிசைவம், மஹாசைவம், அநுசைவம், அவாந்தரசைவம், பிரவரசைவம், அந்தியசைவம் என்னும் பிரிவுகடோன்றச் சைவநலத்துக் குரியாரைச் சாதிஸம்பந்தம் பாராட்டிச் சைவநூல்கள் கூறுகின்றனவன்றோ? இவர் சம்ஸ்காரத்தா லுத்தமோத்தமத்தன்மை யடைந்தவரென்பது முண்மையன்றோ? இவருள் ஆதிசைவர், மஹாசைவராதி மேல்வருணத்தவர் தங்களிற் கீழிட்ட வேணையசைவர்பால் அபகர்ஷத்வமே யன்றி ஸமத்வம் பாராட்டி வருவதின்று. அப்படியே அவாந்தர சைவராகிய வேளாளருந் தம்மிற் கீழிட்ட சைவர்பால் ஸமத்வம் பாராட்டா தொழிவர். இங்ஙனமாக, இவ்வவாந்தர சைவராகிய வேளாளர் தம்மின் மேலிட்ட வேணைய சைவரைநோக்கி அவர்ஜாதி நலம்பாராட்டுதல் கூடாதெனவும், ஸம்ஸ்காரிகளாய்விட்டபின்னர் தம்மிற் றாரதம்யங்கிடையாதெனவும் நிந்தித்துழல்வர். தம்மின்மேலிட்டவரைத் தங்களுக்கு ஸமமாக்கிக் கொண்டுதாமுயர வெண்ணுவது போலவே தம்மிற்..கீழிட்டவரையும் ஸம்ஸ்காரதிருஷ்டியால் தங்களுக்கு ஸமமாக்கிக்கொண்டு அவரோடொத்துவாழவெண்ணுமலவரையவமதித்தும், நிந்தித்தும் வருவது எவ்வளவு பெருந்தாழ்வு? அந்தணர் முதலியோரும் வேளாளரும், அவரிற் கீழிட்ட பேர்களும் ஜாதிகிரந்தியொழியாமல் தாங்கள் அடைந்திருக்கும் ஸம்ஸ்காரங்களையுஞ் சாதியுயர்வுக்கே துணையெனக்கொண்டு ஒருவரோ டொருவரிகலிவருவதால், அன்னோர் தாங்களடைந்த ஸம்ஸ்காரத்தா லெய்தற்பாலதாகிய ஸமானத்தன்மை யடையார்! அடையார்!! அந்தணர் முதலியவரோடொன்றாகூட வேளாளராதியோர் எண்ணுமாபோலவே வேளாளரிற்



தியினிடத்தில் அவ்விஷ்ணு பந்துயாசந்தங்கி யிருந்தாரெனவும், அந்தஸமயத்தில், விஷ்ணுவிடத்திற் கண்டுபேசவேண்டி நாரதமுனிவர் வைகுண்டத்திற்குப் போயினரெனவும், அப்போது வைகுண்டத்தில் விஷ்ணுவில்லாமற் போயினரெனவும், முனிபுங்கவர் விசாரித்தபோது அதிதிகர்ப்பத்திற் சென்றிருக்கின்றாரென்று தெரிந்து, உடனே திரும்பி அவ்விடத்திற்கு வந்து அம்மாதினுடைய கர்ப்பத்திற் றூணுமணுப்பிரவேசஞ்செய்து, உள்ளேயிருந்த விஷ்ணுவைக் கண்டு வார்த்தை சொல்லிப்போயினரெனவும் ஆதித்யபுராணத்திற் கூறியிருத்தலுக்கு நாம் என்னசாமாதானந் தேடலாம்? இப்படியநேக முளவற்றை விரிவஞ்சிவிடுத்தாம்.

இனி, இந்திராதிகளுடைய ஜந்மங்களை வேதம்விதந்து கூறுதபடி, யுருத்திரருடைய ஜந்மங்களையுங் கூறவில்லையென்று கொண்டால், மேல் (உ௫) வது பக்கத்திற்காட்டிய சுவேதாசுவதர வசனத்துக்கு என்னகதிதேடுவது? அவருக்கு ஜந்மஸ்தானமும், காரணமுமில்லையெனவும், அவர் காரணங்களுக் கெல்லாம் பிரபுவானவரெனவும், அவருக்கு உற்பத்திகாரணமானவர்களொருவருமில்லையெனவும் பெறப்படுமுண்மையை யூகியாது வீண்விபரீதம் பேசுவது பயன்பெறுவதெப்படி? பாசத்திற் பிணிப்புண்ட பசுவுக்குண்டாகத்தக்க ஜந்மங்களை யெப்படிப்பசுபதிக்கும் வேதங் கூறும்? பசுபதியென்று சிவனொருவரையேயன்றி விஷ்ணுவாதிகளைமறந்தேனும் வேதங்கூறிற்றா? அவர்களைப்பசுக்களென்று ஏராளமாய்க் கூறியிருத்தல் பிரத்யட்சம். இப்படிப்பட்ட வநந்தரியாயங்களால் பிறந்திறந்துழலும் விஷ்ணுவரையில் சிவஞானிகள் வர்ஜிக்கவேண்டுமென்பது நிலைபெற்றது.

மேல், ஸர்வஸங்கபரித்யாகாநந்தரம் அடையத்தக்க பரம்பொருள் சிவமொன்றே யெனவும், அதுவே மோக்ஷப்பிரதாயகமெனவும், அந்தமோக்ஷம் சிவஞானவித்தியால் பிராப்தமாகத்தக்க அமிர்தபதமாகுமெனவும், அதுவே பரமசாந்திஸ்வரூபமெனவும் பெறப்படுகையால், அது ஸித்திக்கும்பொருட்டு ஈசானாதிமந்திரஸ்வரூபனும், உமாபதி, பசுபதீத்யாதி திருநாமங்களுடையவனும் எஜ்ஞாதிபதியும், பிரம்ஹவிஷ்ணுக்களுக்கு ஸேவ்யனும், விஷ்ணுவுக்குப் பரமபதத்தை பிரஸாதித்தவனும் இருதிமாயைகளுக் கப்பாற்பட்டவனும், ஸர்வரானும்

பூஜ்யனும், பிரம்ஹா - விஷ்ணு - சூரியன் - சந்திரன் - நட்சத்திரங்களிவை முதலொன்றுமில்லாமற் போகத்தக்க தமோமாத்ராவசேஷமாயிருக்குங் காலத்திற் றானேயொண்டியா யிருப்பவனுமாகிய ஸ்ரீபரமேசுவரனையே சரணடைந்து மகிழ்வோமாக. "நாமார்க்குங்குடியல்லோம் நமனையஞ்சோம் நரகத்திலிடர்ப்படோம் நடலையில்லோம், ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோ மின்பமேயெந்நாளுந் துன்பமில்லை, தாமார்க்குங் குடியல்லாத்தன்மையான சங்கரனற்சங்க வெண்குழையோர்காதிற், கோமாற்கேநாமென்று மீளாவாளாய்க் கொய்ம்மலர்ச்சேவடியிணையே குறுகினோமே" என்னும் வேதப்பிரமாணமே சான்றுதல் தெளிக.

இங்ஙனநிற்க, மணவாள மாமுனியென்னும் பாஞ்சராத்திரிக்கும், ஸ்ரீமத்சிவாக்ரயோகிகளுக்கும், ஓர்காலத்தில் நடந்தஸம்வாதத்தில் அப்பாஞ்சராத்திரி தனதுபூர்வீகர்கள் வாக்கைப் பிரமாணமாகக் கொண்டு வாதிக்கத் தொடங்குகையில் அவற்றை மறுத்து ஸித்தாந்தியார் கூறிய ஸமாதானங்கள் வருமாறு.

## சிவதத்துவவெண்பா.

எங்கள் நாராயணர் நான்முகனைப்படைத்தார், நான்முகன் சங்கரனைப்படைத்தா னென்றதற்கு விடை.

நான்முகனுந்தான்முகமாய்ச்சங்கரனை நன்மையுடன்
றான்படைத்தானென்னுந்தரமிலாய் - நான்முகவன்
றன்குதத்தில்வந்த விண்டுதானோமுகத்துதித்த
சங்கரனின்மேலாவான்சாற்று. (௧)

விண்டுவாந்தாய்பால்வெளியாஞ்சதுமுகனார்
கண்டரனையுள்ளேகருதியதால் - பண்டையரன்
றோன்றினனன்றோன்றெழிலருளமாமுக்தி
லேன்றுகொளாய்வேதத்திலின்று. (௨)

நீரின்கண்மண்டோன்றுநீர்மைபோன்மாமலரோன்
கார்வண்ணன்பால்வந்தகாரணங்காண் - சீர்மைந்த
ணிநெருப்புதிக்குமாண்புண்டேலன்றோமுக்
னயன்பால்வருநீகாண். (௩)

த்திரனும்பேதாய்மாலோனும்
க்கப்பட்டாரென் - றுரமாகச்



சொல்லுமதர்வசிகை சோதியாமென்றேநின்
புல்லுரையார்கொள்வாரிப்போது. (௪)

சமணமுதலியவற்றோடு சேரும் பெற்றிமைத்தே சைவமென்றதற்கு விடை.

சிவப்பட்டாரினரெனச்சேர்த்தாயமணோ
டவப்பட்டநீயவரோடாவாய் - சிவப்பட்ட
சொன்மங்கலந்தேராய்சோம்பனேநின்மதமே
புன்மங்கலங்காணிப்போது. (௫)

ஈசனைவென்ற சிலையை யெங்களிராமனேற்றானென்றதற்கு விடை.

ஈசனைவென்றசிலையேற்றானிராமனெனப்
பேசினாயீசன்றன்பேர்ப்படைகொண் - டாசி
லிலங்கையாற்செற்றதியம்பும்பதுமம்
விலங்கேநீசொல்லாய்விதந்து. (௬)

வளையாமலையைவளைத்தமாதேவ
னிளையாநின்றான்மால்கைவில்லிற் - களையாடி
வென்றானெனல்வேதவேதாந்தவித்தகர்முன்
சென்றேறுமோவெனக்குச்செப்பு. (௭)

எங்கள் திரிவிக்கிரமமூர்த்தி பாதநீரையே சிவன்சடையிற் கொண்டாரென்றதற்கு விடை.

கறைகொண்டகண்டத்தான்சென்னிமேன்மாலோன்
நிறைகொண்டபாதநீரென்றாய் - வெறிகொண்டாய்
கங்கைதனைத்தாங்கறியாக்கண்ணன்காணீரோவெஞ்
சங்கரன்கொண்டானென்பைசாற்று. (௮)

வாமனகற்பந்தன்னில்வந்தமுகுந்தன்காணீர்
காமதகனன்வராககற்பத்தின் - மாமறைகள்
போற்றப்புனைந்தநீரென்றேபெரும்புளுகைச்
சாற்றினாலேறுமோதான். (௯)

மார்க்கண்டமுனிவர் பெற்றது எங்கள்விஷ்ணுப் பிரஸாதமேயென்றதற்கு விடை.

மார்க்கண்டன்கண்டவகையேவருமென்ற
மூர்க்கனேயந்தமுனிமாற்ற - மேற்குமோ
நின்மதத்துக்கந்தோகெடுமாவிறந்துபல
சந்மமெய்தல்கேட்டிருந்துந்தான். (௰

என்றுஞ்சிரஞ்சீவியாயிருக்கமார்க்கண்டர்க்
கன்றுசிவனாருளுமாட்சிமறை - யின்றுமெவ

ருங்காணக்கூறுமேயோகோவறியாய்நீ
சங்கைகொண்டாய்கொண்டாய்சகி. (கக)

எங்கள் பரவாசுதேவரையே தக்ஷிணாமூர்த்தியாகிய சிவன்
ஸநகாதிகளுக்குபதேசித்தா ரென்றதற்கு விடை.

ஆலநிழற்கீழறநெறியைநால்வர்க்கு
மேலையரன்கூறினன் விண்டுவையே - மூலமெனக்
கொள்ளும்படியென்றருத்திரனேசான்றுண்டேல்
விள்ளுதிவந்தென்முன் விரைந்து. (கஉ)

வாணிக்குமெய்ஞ்ஞானவைபவகரண்டந்தன்னைப்
பேணியுரைத்ததற்பின்பிஞ்ஞகனார் - நாணிலாய்
மாலுக்குமன்றேவழங்கினார்சூதனுரை
கோலிக்குணப்படுவாய்கொண்டு. (கங)

இன்னுமிசைப்பேனிராமன்சிவகீதை
முன்னவன்பாற்கேட்டமுறைமைபோல் - மன்னுமுணர்
வில்லாய்புராரி யிடங்கேட்டனன்கபிலன்
சொல்லாருஞ்சாங்கிய நூல்சூழ்ந்து. (கச)

எங்கள் திருமாலை நீறடியாகிய சிவன் காண்பது
கூடாதென்றதற்கு விடை.

நீறடிதான்காணின்மாலடியென்றாய்
கூறுயிரவிகுவையிருளை - மாறுந்து
காணுமோமாவிருளாங்கண் ஊறுதலோனேரவியாம்
நாணுவாய்வேதத்தைநாடு. (கரு)

எஞ்சிவனைநீறடியென்றபடிநின்மாலை
வஞ்சனேயென்சொல்வாய்மாயோனுஞ் - செஞ்சடையான்
றன்கண்மணிநீறுதான்கொண்டமையுமெனும்
நன்கறிவாய்நான்மறையைநாடு. (கசு)

பன்றியாய்மாலோன்பரனடிதேடிக்
கன்றினனுள்ளங்கலங்கியெனும் - வென்றிமறை
அந்தோநின்மால்விச்சுவாதிகனைக்காண்பெளிதோ
வந்தோதாய்மால்விச்சுவம் (கஎ)

சிவனுக்குநேரிட்ட பிரம்ஹசாபம் எங்கள் விஷ்ணுவால்
தீர்க்கப்பட்டதென்றதற்கு விடை.

...ல்நான்முகனரனையிட்டவியன்சாபந்
...ரவன்றவிர்த்தானென்றாய் - மானோக்குந்
...ன்றாய்ச்சிந்தைகாந்தன்பிரமகத்தி
...றான் கண்டுகொள். (கஅ)



பிரமன்றலையோடுபேதாயெம்பெம்மான்
கரமேவுங்காட்சியாலன்றோ - பிரமனரி
யென்போரகந்தையிரியுமிசைக்குமதின்
மன்னுமேமால்சோரியும். (ககூ)

எங்கள் திருவேங்கடத்தானைச் சிவன் இரவில்சென்று
ஆராதிக்கின்றாரென்றதற்கு விடை.

திங்கள்சடையேறவைத்தான்சீர்வேங்கடத்தானைக்
கங்குல்புகுந்தணிந்தான்காப்பென்றாய் - மங்குறவழ்
வேங்கடத்தான்செஞ்சடையெம்வித்தகனார்பெற்றெடுத்த
தேங்கடப்பந்தாரனெனத்தேர். (உ0)

மால்வேங்கடமலையாய்வாழ்குமரனைச்சுமந்து
மால்கிழான்வடிவையாண்டொருபால் - மாலகல
வர்ச்சித்தும்போற்றியகமகிழுமென்பதற்கோ
பிச்சனேவேறுரைத்தாய்பேசு. (உக)

பாணாசுரன் சண்டையில் எங்கள் கண்ணனுக்குச் சிவன்
இளைத்தாரென்றதற்கு விடை.

உவரிக்கடனஞ்சமுண்டபிரான்வாணன்
றவறில்சமர்க்கொதுங்கித்தாழ்ந்தான் - உவரிவண்ணற்
கென்றாய்நின்மாலெங்களீசனருள்கொண்டன்றோ
வென்றான்சமரில்விரைந்து. (உஉ)

சிவனருளால்வாணன்றிமிர்விடநின்கண்ணன்
அவனுயர்தோண்மாய்த்ததறியாய் - சிவபெருமான்
வாணனுக்குத்தந்தவரங்கண்டாய்முன்கதையைப்
பேணுதியேனுண்டோவிண்பேச்சு. (உங)

வீரன்சராசந்தன்வெம்முனையிலேபதுங்கும்
வீரனன்றோநின்கண்ணன்வீமனால் - சூரனவன்
றன்னைப்பகைமாய்த்துத்தானுயிர்வாழ்ந்துய்ந்தகதை
பின்னையறியாய்போலும்பேசு. (உச)

பரமபதமென்னும் எங்கள் விஷ்ணுபதி சிவனுக்கு
எட்டாதது என்றதற்கு விடை.

கார்செறிந்தகண்டத்தான்காணவைகுந்தமெனுங்
கார்செறிந்தநெஞ்சத்தாய்காணுதியால் - கார்செறிந்த
வண்ணத்தான்பெற்றதுமேல்வைகுந்தவாழ்வரனை
யெண்ணித்தானென்னுமறையே. (உரு)

எங்கள் நாராயணர் ஸர்வப்பிரபஞ்சத்தையுஞ் சிவனோடு
சேர்த்து உண்டுவிட்டாரென்றதற்கு விடை.

கார்க்கண்டனோடுண்டான்கார்வண்ணன்யாவையுமெ
ஞர்க்குமறிவில்லாயன்றலைநீர் - மீக்கொண்டா

னென்னையவன்கொள்ளாததென்னேவந்நீரையெனக்
கென்பகர்வாய்மண்ணுண்டானென். (௨௬)

மண்ணேயேமாதுண்டான்மாமலரோன்ருன்கெடவே
யெண்ணியேநீருண்டானிந்துதரன் - கண்ணனவன்
ருன்கெடவேயின்னுமுளதத்துவமுற்றுங்கண்டா
லேன்கெடுவாய்வீணேயிரைந்து. (௨௭)

எங்கள் விஷ்ணுவையே சிவன் பூஜிக்கின்ருர்
என்றதற்கு விடை.

ஆடரவத்தார்மாலையர்ச்சித்தாரென்றுரைத்த
கேடனேயார்சொல்லக்கேட்டனேயோ - மூடமொழிந்
தர்ச்சித்தான்சங்கரனேயன்பாகமாயோனென்
றர்ச்சித்தேயோதுமறையாம். (௨௮)

எங்கள் நெடுமாலே ஈசனுக்கும், பிரமனுக்குந்
தெய்வமென்றதற்கு விடை.

ஈசர்க்குநான்முகர்க்குமேற்றபெருந்தெய்வமெனப்
பேசினேயேமாலேமிகப்பேதையே - ஈசன்ரு
னென்றபொழுதேயவனுக்கில்லேமேலோனென்று
நின்றபொருள்கேட்டிலேயோநீ. (௨௯)

ஈசன்சிவனென்னல்கேட்டிலேயோரூடியெனப்
பேசுமேதூலெல்லாம்பித்தாகேள் - ஈசன்
சிவனனபோதயன்மால்சீவர்களாங்கண்டாய்
தவமில்லாய்சற்றேனுந்தான். (௩௦)

(மங்களாசரணே.)

பாசத்திலொன்றும்பசுவாகுநின்மாலே
யீசனென்றுதன்ருேற்குமீசனுந் - தேசரனே
யுள்ளேநினைந்துருகியுத்தமமாஞ்சைவநூல்
கொள்ளாயுண்டாகுங்குணம். (௩௧)

(வாழ்த்து)

வாழிமாமறையாகமமாபதிக்
காழிமாதவஞெதியர்கட்டுரை
வாழிமாதுமையாகமுமாபதிக்
காழிமாத்ரப்பூங்கழற்கானமே.

ஸ்ரீஸம்பந்தகுரு
சரணுரவிந்தார்ப்பணமஸ்து.
திருச்சிற்றம்பலம்.

---

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
ஸ்ரீ ஜ்ஞாநசம்பந்தகுருப்யோநம:

# சித்தாந்தரத்நாகரம்.

## சிவபாரம்யப்பிரதரிசிநி.

இஃது
"வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம்"
ஸ்ரீலஸ்ரீ
சோமசுந்தர நாயகரவர்களால்
இயற்றப்பட்டு
ஷையார் மாணவகர்
ஸ்ரீமாந்-பல்லவபுரம்
அப்பாவு செட்டியாரவர்களால்
பரிசோதித்து
தமது
சென்னை:
வித்யாபாஸ்கர அச்சியந்திர சாலையிற் பதித்து
வெளியிடப்பட்டது.

Second Edition.
31 December. 1906.
Copy-right Registered.